KALKI 22.2.98 ரூ. 4.50

கல்கி



தேர்தல் ஸ்பெஷல் – V

வெற்றிச் சிரிப்பு?


பெண்மைக்கு
அழகு சேர்க்க
சரவணா
ஸ்டோர்ஸ்
வழங்கும்
பட்டுப் புடவைகளும்
தங்க நகைகளும்
சரவணா ஸ்டோர்ஸ்
தங்க நகைகள் ஜவுளிகள் பாத்திரங்கள்
ரெங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017.
L.R.SWAMI / P.P.

சிவகங்கைத் தொகுதி

சிதம்பரம் [illegible] செய்த ஆன்டிபயாடிக்!



• சிதம்பரம்

"ப. சிதம்பரத்தை நீங்கள் ஏற்கெனவே நான்கு முறை எம்.பி.யாகத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். இப்போது அவர் ஐந்தாவது முறையாகப் போட்டியிடுகிறார். அவர் என்ன செய்து விட்டார் உங்களுக்கு? கிராஃபைட் தொழிற்சாலையைக் கொண்டு வந்தாரா? இல்லை. சர்க்கரை ஆலை கொண்டு வரவில்லை. தொண்டி துறைமுகம் பற்றியும் அவர் கண்டு கொள்ளவில்லை. எனவே, இந்தமுறை என்னைத் தேர்ந்தெடுங்கள். மத்தியில் ஒரு நிலையான ஆட்சி வர வேண்டும்.



• காளிமுத்து

அப்போதுதான் பல திட்டங்களையும் செயல்படுத்த முடியும். இதன் காரணமாகவும் உங்கள் பொன்னான வாக்குகளை இரட்டை இலைச் சின்னத்திலேயே அளித்து என்னைத் தேர்ந்தெடுங்கள்!" என்று பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தார் காளிமுத்து.

இடம்: புதூர்வலசு என்னும் சின்ன கிராமம். சிவகங்கைத் தொகுதியின் தென் கிழக்குக் கோடியில் இருக்கும் இந்த கிராமம், பரமக்குடிக்கு அருகில் இருக்கிறது. இங்குதான் நாங்கள் காளிமுத்துவைச் சந்தித்தோம்.

"சென்னையிலிருந்து வந்து இப்படியொரு கடைக்கோடிப் பகுதி கிராமத்தில் என்னைத் தேடிக் கண்டுபிடித்த உங்களை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்!" என்று நம்மை வரவேற்றார் காளிமுத்து.

"எப்படியிருக்கிறது தேர்தல் நிலவரம்?" என்று பேச்சை ஆரம்பித்தோம்.

"நீங்களும் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களே... உங்களுக்குத் தெரி

யாததா என்ன! மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. நிச்சயம் என்னைத் தேர்ந்தெடுப்பார்கள்!"

"உங்கள் தலைவி ஜெயலலிதா மற்றும் சிலர் மேலும் உள்ள ஊழல் வழக்குகள் உங்கள் வெற்றி வாய்ப்பைப் பாதிக்காதா?"

"இல்லை. அதெல்லாம் போன தேர்தலோடு போய் விட்டது. இப்போது நாங்கள் கேள்வி கேட்கும் இடத்தில் இருக்கிறோம். தி.மு.க. வினரும் த.மா.கா.வினரும்தான் எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள்!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம். தல்வார் கமிஷன் ரிப்போர்ட்டை அமுல்படுத்தாதது குறித்து அஞ்சல் துறை ஊழியர்களெல்லாம் அரசுக்கு எதிராகத்தான் இருக்கிறார்கள். இப்படி பல்வேறு காரணங்களாலும் எனது வெற்றி உறுதியாகிவிட்டது!" என்றார் காளிமுத்து, நம்பிக்கையோடு.

சிவகங்கை பாராளுமன்றத் தொகுதியின் இன்னொரு முக்கிய வேட்பாளர் கௌரி சங்கர். சென்ற பொதுத்தேர்தலிலும் சிதம்பரத்தை எதிர்த்துப் போட்டியிட்ட இ.காங்கிரஸ் வேட்பாளர். சென்ற முறை அ.தி.மு.க கூட்டு என்பதாலேயே தோல்வி கண்டவர்.

திருப்பத்தூரிலிருந்து சிவகங்கை வரும் நெடுஞ்சாலையில் திறந்த ஜீப்பில் நின்று கொண்டு வாக்குச் சேகரித்தபடி வந்து கொண்டிருந்த கௌரிசங்கரை வழியிலேயே நிறுத்தினோம். வெயில் காரணமாக வழிந்தோடிய வியர்வையை மேல் துண்டால் துடைத்தபடியே ஒரு மர நிழலில் நின்று கொண்டு நம்மிடம் பேசினார்.

"இந்தத் தடவை பாருங்க, சிதம்பரத்துக்கு மூணாவது இடந்தான். அறுபது சதவிகித வாக்குகள். கைச் சின்னத்துக்குத்தான் விழப் போகுது. வேணும்னா தேர்தல் முடிஞ்ச பிறகு பாருங்களேன்!"

"அப்படியா சொல்றீங்க?"

"நிச்சயமா. சோனியா அம்மாவும் மதுரைக்கு வரப் போறதா இருக்கறதால கண்டிப்பா சிதம்பரத்துக்கு மூணாவது இடம்தான்!"

"எப்படி இத்தனை உறுதியா அடிச்சுச் சொல்றீங்க?"

"சிதம்பரம் ஜெயிக்கறதோட சரி. அப்புறம் தொகுதிப் பக்கமே வர்றதில்லையே. திறப்பு விழா அப்படி இப்படின்னுதான் வர்றாரே தவிர, மக்கள் குறைகளைக் கேட்கறதுக்கு வர்றதில்லையே. தொகுதி மக்கள் முன்னேற்றத்துல அக்கறை இருந்தா கிராஃபைட் தொழிற்சாலையைக் கொண்டு வந்திருக்கணுமே. செய்யலியே! இங்க கிடைக்கிற கிராஃபைட் ரொம்பவும் தரமானது. ராக்கெட் என்ஜின்களுக்கான காஸ்கட்டுகள் செய்யப் பயன்படறது. அப்படியிருந்தும் அவர் செய்யலை. அப்புறம் எப்படி அவர் ஜெயிப்பார்?" என்றார் உற்சாகத்தோடு.

இவற்றுக்கெல்லாம் சிதம்பரம் என்ன பதில் வைத்திருக்கிறார்? உண்மையிலேயே தொகுதி மக்களுக்கு அவரிடம் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறதா? விடைகளைத் தெரிந்து கொள்வதற்காக அவர் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கும் பகுதியைத் தேடிப் பிடித்தோம்.

ஏறத்தாழ தொகுதியின் வடகோடியில் இருக்கும் வேந்தன்பட்டி என்கிற ஒரு கிராமத்தில் சிதம்பரம் பேசிக் கொண்டிருந்தார்.

"ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் அவரது கடமையைச் செய்ய வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் அவரது கடமையைச் செய்ய வேண்டும். அதுபோல ஒரு நிதியமைச்சர் அவரது கடமையைச் செய்ய வேண்டும். ஒரு நிதியமைச்சர் என்கிற முறையில் நான் எனது கடமையைச் செய்திருக்கிறேனா இல்லையா? கரும்பு கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அரிசி விலை குறைந்துள்ளது. இரும்பு, சிமெண்ட் விலைகள் குறைந்துள்ளன. எட்டு சதவிகிதமாக இருந்த பண வீக்கம் இப்போது நான்கு சதவிகிதம் என்கிற அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

"பூவுக்கும் சேதம் வரக்கூடாது. தேனும் எடுக்கப்பட்டாக வேண்டும் என்கிற முறையில் வி.டி.ஐ.எஸ். திட்டத்தின் மூலம் பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்பட்டுள்ளது. இதெல்லாம் எங்கள் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டுள்ளதா, இல்லையா? சொல்லுங்கள். மாநில அரசுக்கு இணக்கமான அரசு மத்தியில் இருந்தால்தான் மாநில அரசுகளுக்குத் திட்டங்கள் வர முடியும். சைக்கிளின் இரண்டு சக்கரங்கள் மாதிரி மத்திய அரசும் மாநில அரசும். ஒரு சக்கரம் மட்டும் ஒழுங்காக இருந்தால் பயன் படாது. இரண்டுமே சரியாக இருக்க வேண்டும்... வேண்டுமா, வேண்டாமா?"

இது மாதிரி மிகவும் எளிமையான முறையில் தமது தேர்தல் பிரசாரத்தைச் செய்து கொண்டிருந்த சிதம்பரம், கூடவே, அந்தந்த ஊர்களில் செய்யப்பட்ட மற்றும் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் பணிகளையும் பட்டியல் போட்டுச் சுட்டிக் காட்டினார்.

வேந்தன்பட்டியோடு, வார்ப்பட்டு, மேலைச் சிவபுரி, ஏனாதி ஆகிய கிராமங்களிலும் அவர் பேசியதைக் கேட்டோம்.

"............ இந்தத் திட்டங்களெல்லாம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா, இல்லையா? இந்தத் தேர்தலில் உங்களுக்கும் விருப்பம் இல்லை. எனக்கும் விருப்பமில்லைதான். ஆனாலும் இந்தத் திட்டங்களெல்லாம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதில் நமக்கு விருப்பம்தானே! நமது நாட்டில் திட்டங்களைத் தீட்டவும் செயல்படுத்தவும் பணம் இல்லாமல் இல்லை. கூடவே ஊழல் பெருச்சாளிகளும் இருக்கின்றன என்பதுதான் பிரச்னை. அவற்றையெல்லாம் அப்புறப் படுத்த வேண்டாமா? எனவே, தலைவர் மூப்பனார் அவர்களையும் தலைவர் கலைஞர் அவர்களையும் பலப்படுத்துகிற விதமாக உங்கள் வாக்குகளை சைக்கிள் சின்னத்தில் அளிக்க வேண்டுகிறேன்!"

ஏனாதி என்கிற சிறு கிராமத்தில் இறங்கியதும் "அருணாசல சேர்வை இருக்கிற இங்கே நான் வந்து வோட்டுக் கேட்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை தான்!" என்ற சிதம்பரம், அந்தப் பெரியவரை குசலம் விசாரித்தார்.

"ரண்டு நாளா எனக்கு ஒடம்புக்கு முடியலை!'' என்றார் அருணாசல சேர்வை.

"என்னாச்சு?"

"சளி."

"ஆண்டிபயாடிக் மாத்திரை சாப்பிடுங்க. எனக்குக் கூட இருந்தது. சாப்பிட்டேன். சரியாயிடுச்சு. ஆஸ்பத்திரிக்குப் போங்க. அங்க மருந்து இருக்கு. முன்ன மாதிரி இல்லை. வாங்கிச் சாப்பிடுங்க!" என்றார் சிதம்பரம்.



• கௌரிசங்கர்

"கிராஃபைட் தொழிற்சாலை கொண்டு வரப்படாததற்கு உங்களைக் குற்றம் சாட்டுகிறார்களே?" – நாம் சிதம்பரத்திடம் கேட்டோம்.

"தவறான குற்றச்சாட்டு. அ.தி.மு.க. அரசுதான் இங்குள்ள கிராஃபைட்டின் தரத்தை நிர்ணயிப்பதற்காக லார்சன் அண்ட் டூப்ரோவிடம் காண்ட்ராக்ட் விட்டது. அப்போது நான், உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்டேன். "எதுவும் தேவையில்லை!" என்று சொல்லிவிட்டார் அப்போதைய அமைச்சர் இந்திரகுமாரி.

"லார்சன் அண்ட் டூப்ரோ கம்பெனியால், நிர்ணயிக்கப் பட்ட தரத்தைக் காட்ட முடியவில்லை. 31.12.97 வரை அந்தக் கம்பெனியின் காண்ட்ராக்ட் காலம் இருந்த தால் என்னாலும் எதுவும் செய்ய முடியவில்லை. இப் போது காண்ட்ராக்ட் முடிந்து விட்டதால் இனிதான் செய்ய முடியும். இந்த உண்மையை அவர்கள் மறைக்கிறார்கள். கிராஃபைட் தொழிற்சாலை வரமால் போனதற்கு அ.தி.மு.க. அரசுதான் காரணமே தவிர, வேறு யாரும் இல்லை."

"தமிழ்நாட்டிலிருந்து ஒன்பது அமைச்சர்கள் ஐ.மு. அரசில் இடம் பெற்றிருந்தும் காவிரிப் பிரச்னைக்குக் கூடத் தீர்வு காண முடியவில்லை என்றும் பிரசாரம் செய்கிறார்களே?"

"இதுவும் சுத்தப் பொய். நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்குப் போயிருக்கும் ஒரு நிலையில், நாம் என்ன செய்ய முடியும்? இது தெரிந்தும் அவர்கள் குற்றம் சாட்டுவது மக்களிடமிருந்து உண்மையை மறைக்கிற ஒரு விஷயமே தவிர, வேறு எதுவும் இல்லை!'' என்றார் சிதம்பரம்.

சரி, சிவகங்கைத் தொகுதியின் வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கிறது? பொதுவாகவே தொகுதி மக்களிடம் குறிப்பாக பணக்காரர்களிடம் இந்தத் தேர்தலில் ஓர் அதிருப்தி இருப்பதையே காண முடிந்தது. ஆனாலும் இந்த அதிருப்தியை சமாளிப்பதற்குத் தேவையான 'ஆன்டிபயாடிக்' சிதம்பரத்திடம் இருப்பதாகவே தோன்றுகிறது!

(திருச்செந்தூர், சிவகாசி, நெல்லை, மதுரை, பெரியகுளம் தொகுதி நிலவரங்கள் பிற பக்கங்களில்...)

சுற்றுப்பயணமும் கட்டுரைகளும்:
இளங்கோவன், ஸ்ரீநிவாசன்
படங்கள்: எஸ்.ராஜ்குமார்

திருச்செந்தூர் தொகுதி: ராமராஜன்

திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் உள்ள சிறிய நகரம் உடன்குடி. மதிய நேரம். சுட்டெரிக்கும் வெயில். பஸ் நிலையத்துக்கு வெளியே கடைகளின் ஓரங்களில் மக்கள்



பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறார்கள். ஸ்பீக்கர் கட்டிய ஜீப் அலறிக் கொண்டு வருகிறது. சாலையின் ஓரமாக ஜீப் நின்றவுடன் சடாரென்று அதிலிருந்து குதித்து, கட்டைக் குரலில் பேசத் துவங்குகிறார் அ.இ.அ.தி.மு.க. தலைமை நிலையப் பேச்சாளர் ஜெமினி ராமச்சந்திரன்.

"எங்கள் புரட்சித் தலைவியின் ஆட்சியில் ரேஷன் கடைகளில் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைத்தன. காய்கறிகள், அரிசி விலை கட்டுப்பாட்டில் இருந்தது. இன்று வெங்காயத்தின் விலை என்ன? தங்கம் கூட வாங்கிடலாம்; வெங்காயத்தை வாங்க முடியுமா? பஸ் கட்டணம் விமானக் கட்டணம் அளவுக்கு உயர்ந்து விடும் போலிருக்கிறது. புரட்சித் தலைவி ஆட்சியில் ஐந்து வருட காலம் பஸ் கட்டணத்தை உயர்த்தவேயில்லை.... ஆகவே இந்த அவல நிலை மாறிட, மீண்டும் புரட்சித் தலைவி ஆட்சி மலர்ந்திட, மத்தியில் நிலையான ஆட்சி அமைந்திட நவரச நாயகன் ராமராஜனுக்கு இரட்டை இலையில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு வேண்டுகிறோம்!'' மீண்டும் பேச்சாளர் தவ்வி ஜீப்பில் ஏறிக் கொள்ள, ஜீப் அடுத்த கிராமத்துக்கு விரைகிறது.

மக்களை சுலபமாகக் கவர்ந்திழுக்கும் விலைவாசி பிரச்னைதான் இந்தத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.வின் ஆயுதம். திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிடும் ராமராஜனின் சினிமா கவர்ச்சியை நம்புகிறார்களோ என்னவோ... ஆனால் மக்கள் அன்றாடப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருப்பதில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தி தங்களை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று அ.தி. மு.க.வினர் நம்புகிறார்கள்.

"விலைவாசி பிரச்னைதாங்க முக்கியம்!'' என்று சொல்கிறார் உடன்குடி ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் நெல்லை மதி. "போன வட்டம் எங்களை உள்ளே விடாத அளவுக்கு பல கிராமங்களில் நிலைமை இருந்தது. இன்று இரட்டை இலை படம் போட்ட வண்டி வந்ததும் பிரமாதமான வரவேற்பு'' என்று பூரித்தார் அவர்.

தொகுதி உடன்பாட்டில் பி.ஜே.பி.க்குப் போக வேண்டியது திருச்செந்தூர். அ.இ.அ.தி.மு.க. போட்டியிடுவது ஒரு



• ஜெனிபர் சந்திரன்



• சுப்ரமணியன் ஆதித்தன்

ஷூட்டிங் நடத்துவாரா?



* ராமராஜன்

திருப்பம் என்றால், ராமராஜன் வேட்பாளர் என்பது ரத்தத்தின் ரத்தங்களுக்கே அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் ஜெயலலிதா அறிவித்த பின் சூட்டோடு சூடாக திருச்செந்தூர் வந்து சுப்பிரமணியரை வணங்கி, ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் ஊழியர் கூட்டங்களில் கலந்து கொண்டு தொகுதியை உடனடியாக ஒரு வலம் வந்திருக்கிறார் ராமராஜன்.



* குமரி அனந்தன்

"திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் இரட்டை இலைச் சின்னம் போட்டியிடுவது இதுவே முதல் முறை. எங்கள் தொண்டர்களிடம் இந்த முறை நல்ல எழுச்சி இருக்கிறது!" என்றார் அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணிய ஆதித்தன். நெல்லை மாநாடு சமீபத்தில் நடந்து முடிந்ததால் உண்டான எழுச்சியாம் அது.

ராமராஜனை ஒப்பிடும் போது மூன்று முறை வெற்றி பெற்று நான்காவது முறையாகப் போட்டியிடும் த.மா.கா. வேட்பாளர் தனுஷ்கோடி ஆதித்தன் முதல் கட்ட பிரசாரத்தில் கொஞ்சம் பின் தங்கிப் போனாலும் திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மீன் வளத்துறை அமைச்சருமான ஜெனிபர் சந்திரன், தனுஷ்கோடியின் வெற்றிக்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார். "எங்க சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை நாங்க நல்லா வச்சிருக்கோம். ராமராஜன், 'நான் ஜெயிச்சா தொகுதியில் ஷூட்டிங் நடத்துவேன்'னு வாக்குறுதி கொடுக்கிறார். அதைக் கேட்டு மக்கள் சிரிக்கிறாங்க!" என்றார் நம்மிடம் ஜெனிபர்.

* 'பொடி (சுண்டு)' சங்கரலிங்கம்



கிட்டத் தட்ட பத்து லட்சம் வாக்காளர்களைக் கொண்ட இந்தத் தொகுதியில் நாடார் இன மக்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். ஏறத்தாழ இரண்டரை லட்சம் வாக்குகள் முஸ்லீம், கிறிஸ்துவ மக்களின் கையில் இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. இருப்பதால் இந்த வோட்டுக்கள் அனைத்தும் கொத்தாக தனுஷ்கோடிக்குத்தான் விழும் என்று பரவலாகச் சொல்கிறார்கள்.



* தனுஷ்கோடி ஆதித்தன்

அடடா... சொல்ல மறந்துவிட்டோமே! சோனியா காங்கிரஸ் சார்பில் கைச் சின்னத்தில் போட்டியிருக்கிறார் குமரி அனந்தன். போட்டியிடும் மூன்று முக்கிய வேட்பாளர்களுமே நாடார் இனத்தைச் சேர்ந்தவர்களாதலால் அந்த இனத்து மக்களின் வோட்டு சிதறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

தொகுதியில் பா.ஜ.க.வின் செல்வாக்கு காரணமாகச் சில கிராமங்களில் இந்து-கிறிஸ்துவ மதத்தினரிடையே சிறு சிறு பூசல்கள் இருக்கின்றன. இத்தனைக்கும் இந்தப் பகுதியில் இரு இனத்தவரும் திருமண சம்பந்தம் வைத்திருப்பவர்கள்தான். "சர்ச்சுக்காரங்க அரசாங்க நிலத்தைச் சொந்தம் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அதில் மக்கள் நடந்து செல்லக் கூடாது என்றும் சொல்கிறார்கள். அது பெரிய பிரச்னையாக இருக்குதுங்க. இதனால இந்த வட்டம் எங்க வோட்டு இரட்டை இலைக்குத் தாங்க!'' என்று நம்மிடம் சொன்னார், வேப்பங்காடு கிராமத்தைச் சேர்ந்த பெருமாள். சில இடங்களில் மத ரீதியாக வாக்குகள் பிரியக் கூடுமாம்!

'தொகுதிப் பக்கம் வருவதேயில்லை. கோடிக்கணக்கில் சொத்து சேர்த்து விட்டார்' என்பது தனுஷ்கோடியின் மேல் உள்ள பரவலான குற்றச்சாட்டுகள். இதை விட முக்கியமாக சென்ற வருடம் நடந்த கராத்தே செல்வின் கொலைக்குக் காரணம் தனுஷ்கோடி என்பது தொகுதி எங்கும் அவருக்கெதிராகச் செய்யப்படும் பிரசாரம்!

உடன்குடியிலிருந்து நாசரேத் செல்லும் வழியில் நாம் சந்தித்த பள்ளி ஆசிரியர் ஒருவர், 'கராத்தே செல்வின் பிரச்னை காரணமாகக் கிறிஸ்துவர்களின் வாக்குகள் தனுஷ்கோடிக்கு விழாது!'' என்றார். தென்னிந்திய திருச்சபையின் பங்கு குரு ஒருவரை நாசரேத்தில் சந்தித்தோம். "எங்கள் சர்ச்சுகளில், சிறுபான்மையினருக்கு எதிரான அரசு மத்தியில் அமையக் கூடாது என்று பிரார்த்தனை செய்கிறோம். செல்வின் கொலை விவகாரம் இந்தத் தொகுதியில் ஒரு பிரச்னைதாங்க" என்றார் அவர்.


பிரசாரத்தைத் துவங்குவதற்கு முதல்நாள் நெல்லையில் குமரி அனந்தனைச் சந்தித்தோம். "அ.தி.மு.க.-த.மா.கா. இரண்டையுமே தோலுரித்துக் காட்டுவேன். சோனியா காந்தி மதுரைக்கு வருவதாக இருக்கிறார். இந்த முறை கைச் சின்னத்தை மக்கள் கைவிடமாட்டார்கள்'' என்று நம்பிக்கை தெரிவித்தார் அனந்தன். "என்னுடைய சொந்த ஊரான அகத்தீஸ்வரம் இந்த பாராளுமன்றத் தொகுதியில்தான் இருக்கிறது'' என்றார் அனந்தன்.

"ராமராஜன் மதுரை மேலூரைச் சேர்ந்தவர். ஆனால் வாக்குகளுக்காகத் தமது அம்மா இந்தத் தொகுதியில் உள்ள பூச்சிக்காட்டைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார். சென்ற முறை கைச் சின்னத்தில் போட்டியிட்ட ஜஸ்டின் ஒரு லட்சம் வோட்டு தான் வாங்க முடிந்தது. இந்த முறை சோனியா பிரசாரத்தால் இன்னமும் கூடுதல் வோட்டு வாங்கலாம்; அவ்வளவுதான். மற்றபடி பார்த்தால் தனுஷ்கோடி வெற்றிக் கம்பத்தைத் தொட்டு விடுவார்'' என்று வெளிப்படையாகப் பேசினார் திருச்செந்தூர் நகர காங்கிரஸ் தலைவர் வெடிகுண்டு சங்கரலிங்கம்.

தம்மைப்பற்றிய அவதூறுப் பிரசாரங்களை பலமாக மறுத்தார் தனுஷ்கோடி ஆதித்தன். "காமராஜ் அவர்களைப் பார்த்து அரசியலுக்கு வந்தவன் நான். அரிய மணல் ஏற்றுமதியில் நான் கோடிக் கணக்கில் சம்பாதித்தேன் என்று சொல்வதெல்லாம் அப்பட்டமான பொய். அதே போல் கராத்தே செல்வின் கொலை விவகாரத்தில் என் பெயரை இழுப்பது அநியாயம். இப்படியெல்லாம் எனக்கெதிராகத் திட்டமிட்டு என் எதிரிகள் வதந்தியைப் பரப்புகிறார்கள். இந்தப் பகுதியில் சாத்தான்குளம், ராதாபுரம் ஆகிய இடங்கள் தண்ணீர் தட்டுப்பாடுக்குப் பேர் போனவை. என் முயற்சியால் அந்தப் பகுதிகளுக்குப் பாசன வசதிக்காகவும் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காகவும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். பல்வேறு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன; நடக்க இருக்கின்றன. கலைஞர் ஆட்சியில் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் கால்வாய்களை அகலமாக்கும் பணிகளும் இந்தத் தொகுதிக்காக சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. நடிகர்களைக் காட்டி வோட்டு வாங்கும் கவர்ச்சி அரசியல் இங்கு எடுபடாது. ஜெயலலிதாவின் ஊழலை மக்கள் இன்னும் மறந்து விடவில்லை. மதவெறியாளர்களோடு கைகோத்து வரும் அ.தி.மு.க.வுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள்!" என்று நம்மிடம் நம்பிக்கையோடு சொன்னார் தனுஷ்கோடி ஆதித்தன். ◉


ஒரே கல்லில் இரண்டு மாங்காய்





ஆதரிப்பீர் ! தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்)


வாக்களிப்பீர்



சைக்கிள் சின்னம்

தேர்தல் நாள்
16-2-98
22-2-98

த.மா.கா. முற்போக்கு கூட்டணியின் சின்னங்கள்





வெளியீடு : தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) சென்னை – 600 002.

வளமான தமிழகம் ! வலிமையான பாரதம் !

'அம்மா'வின் ஆசி பெற்ற வைகோவுக்கும் தி.மு.க - த.மா.க. ஆதரவு பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் அழகிரிசாமிக்கும் இடையில் கடும் போட்டி - சிவகாசியில். சென்ற தேர்தலில் இதே தொகுதியில் தனியாக நின்று தோற்றுப் போனவர் வைகோ. வெற்றி பெற்றவர் அழகிரிசாமி.

இந்த முறை எப்படியாவது வெற்றி பெற்றே தீர வேண்டும் என்கிற வைராக்கியத்தில் தான் அம்மாவின் 'ஆசி'யோடு தொகுதி முழுவதிலும் தமது சின்னமான பம்பரத்தைச் சுழல விட்டிருக்கிறார் (சுவர் விளம்பரங்களில்தான்) வைகோ. உதவிக்குத் தாமரைக்கனி.

அழகிரிசாமிக்கு உதவியாக அண்மையில் தி.மு.க.வில் சேர்ந்திருக்கும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன். இவர் ஏற்கெனவே, 'எந்த வழியாலாவது வைகோ வைத் தோற்கடித்தே தீருவேன்!' என்று சபதம் போட்டுவிட்டு வேலை செய்து கொண்டிருப்பவர்.

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆரும் சரி, தாமரைக் கனியும் சரி, இரண்டு பேருமே ஏகப்பட்ட பக்க வாத்தியங்களோடு (அதாவது தொண்டர்கள்தான்!) இருப்பவர்கள். அப்புறம் தேர்தல் கச்சேரியின் சுவைக்குக் கேட்பானேன்?



அனல் பறக்கும் பட்டாசு நகர்!

''வைகோவின் வெற்றி உறுதியாகி விட்டது தலைவரே. தேர்தல் முடிந்த பிறகு அஃபீஷியலாக அறிவிக்க வேண்டியதுதான் பாக்கி!'' என்று சிவகாசியில் நம்மிடம் சொன்னார் தாமரைக்கனி.

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆரின் சபதம் பற்றிக் கேட்ட போது, ''அவர் என்னென்ன செய்வார் என்று எங்களுக்குத் தெரியாதா என்ன! நாங்கள் அதற்கெல்லாம் தயாராய்த்தான் இருக்கிறோம்!'' என்றார் தாமரைக்கனி.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று நாம் வைகோவிடம் கேட்டபோது, ''என்னை எப்படியாவது தோற்கடித்தே தீர வேண்டும் என்பதில் கலைஞரே ரொம்பக் குறியாக இருக்கிறார். அதனால்தான் இந்தத் தொகுதியில் மட்டும் ஸ்டாலின் வந்து இரண்டு நாள் பிரசாரம் செய்கிறார். பிறகு கலைஞரும் வந்து பிரசாரம் செய்கிறார். ஆனாலும் வெற்றி எனக்குத்தான்!'' என்றார்.



(தாமரைக்கனி)

''சென்ற தேர்தலில் குடைச் சின்னத்தில் நின்றீர்கள். இந்தத் தேர்தலில் பம்பரச் சின்னம். இது வாக்காளர்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துமே?''

''அதெல்லாம் இல்லை. மக்கள் அப்படியெல்லாம் குழம்பிப் போய் ஏமாற மாட்டார்கள்!''

''பேசாமல், நீங்கள் இரட்டை இலைச் சின்னத்திலேயே நின்றிருந்தால் உங்கள் வெற்றி உறுதியாகியிருக்கும் என்று எதிர்க்கட்சியினரே கூறுகிறார்களே?''

''அது எப்படி? கூட்டணி என்பது வேறு. அவர்கள் சின்னத்திலேயே நிற்பதென்பது வேறு. இரட்டை இலைச் சின்னத்தில் நான் போட்டி

யிட்டால் எங்கள் கட்சிக்கு எப்படி தேர்தல் கமிஷனின் அங்கிகாரம் கிடைக்கும்? வெற்றிக்காக அப்படியெல்லாம் எப்படிச் செய்ய முடியும்?'' என்றார் வைகோ.

கதிர் அரிவாள் சின்னத்தில் போட்டியிடும் அழகிரிசாமியை விருதுநகரில் சந்தித்தோம். "போட்டி கடுமையாக இருக்கும் போலிருக்கிறதே, வெற்றி வாய்ப்பு எப்படி?'' என்றோம்.

''போட்டி கடுமையாக இருந்தாலும் முடிவு எங்களுக்குச் சாதகமாகத்தான்


* அழகிரிசாமி

இருக்கும்!'' என்றார் நம்பிக்கையோடு.

''சுவர் விளம்பரங்களில் வைகோ காட்டும் சுறுசுறுப்பை நீங்கள் காட்டவில்லையே?''

''அவர்களிடம் பணம் நிறைய இருக்கிறது. செலவழிக்கிறார்கள். எங்களிடம் அப்படியில்லை. இன்றைக்குத்தான் போஸ்டர்களே வரவிருக்கின்றன. மக்களுக்கு இதெல்லாம் தெரியாதா என்ன!''

''ஏற்கெனவே இரண்டு முறை எம்.பி. தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர் வைகோ. அதனாலேயே அனுதாபப்பட்டு இந்த முறை அவருக்கு வாக்களித்து விடுகிற வாய்ப்பு இருக்கிறதல்லவா?''

''அந்த அனுதாபமெல்லாம் எடுபடாது. காரணம், அவர் சேர்ந்திருக்கிற இடம் அப்படி. மக்கள் இன்னும் அதையெல்லாம் மறந்து விடவில்லை!'' என்ற அழகிரிசாமி, "தொழுகை முடிந்து வெளியே வரும் முஸ்லீம் மக்களிடம் இப்போது வோட்டுக் கேட்கப் போகிறேன். நீங்களும் வந்து பாருங்களேன்!'' என்று அழைத்துச் சென்றார்.

"வாங்க மாப்ளே!'' என்று வரவேற்றார் தொழுகை முடிந்து வெளியே வந்த முஸ்லீம் பெரியவர் ஒருவர். கூட நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம்கள்.

"உங்க வோட்டையெல்லாம் தவறாம எனக்கே போட வேண்டும் மாமா!'' என்றார் அழகிரிசாமி. (இப்படி முறை சொல்லித்தான் அழைத்துக் கொள்கிறார்கள் ஒவ்வொருவரும்!)

"நிச்சயமா. கூட பத்திரிகைக்காரங்களா. நல்லது. நாங்க மாப்பிள்ளை அழகிரிசாமிக்காக மட்டுமே வோட்டுப் போடப் போறதில்லே. பி.ஜே.பி.யும் அதன் கூட்டணிகளும் தோத்துப் போகணும். அதுக்காகவும்தான் மாப்பிள்ளைக்கே எங்க வோட்டைப் போடப் போறோம். இது நான் மட்டுமே எடுத்த தனிப்பட்ட முடிவு இல்லே. எங்க சமூகம் முழுவதும் சேர்ந்து எடுத்த முடிவு!'' என்றார் அந்தப் பெரியவர் நம்மிடம். அவர் கூறியதையே மற்றவர்களும் ஆமோதித்தனர்.

''டாக்டர் கிருஷ்ணசாமியின் 'புதிய தமிழகம்' கட்சி வேட்பாளரும் போட்டியிடுவதால் தாழ்த்தப்பட்ட இன மக்களின் வாக்குகள் சிதற வாய்ப்புள்ளதல்லவா?'' என்று அழகிரிசாமியிடம் கேட்டோம்.

"சில இளைஞர்கள் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதும் சில ஆயிரம் வாக்குகள் சிதறலாம் என்பதும் உண்மைதான். என்றாலும் அதனாலெல்லாம் எங்கள் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்பட்டு விடாது!'' என்றார் அழகிரிசாமி.

"வைகோவைத் தோற்கடிப்பதற்கென்றே சிறப்பு கவனம் எடுத்துக் கொண்டு ஸ்டாலினும் கலைஞரும் வந்து பிரசாரம் செய்வதாக அவர் கூறுகிறாரே?'' என்றோம் மதுரையில் நாம் சந்தித்த மு.க. அழகிரியிடம்.

''பின்னே! அதிலென்ன தப்பு? அவரைத் தோற்கடிப்பதுதான் எங்க லட்சியமே!'' என்றார் அழகிரி கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்ட நிலையில்.


* மு.க. அழகிரி

"தொகுதியில் எங்கு பார்த்தாலும் சுவர் விளம்பரங்களிலெல்லாம் பம்பரச் சின்னம்தானே சுற்றுகிறது?"

"தேர்தல் முடிவுக்கப்புறம் பாருங்க! பம்பரம் சுத்தறதுக்கு ஆணியில்லாமலே போகப் போவுது!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அழகிரி.

சரி, தொகுதியிலிருக்கும் உண்மையான நிலவரம்தான் என்ன? வெற்றி பெறப் போவது அழகிரிசாமியா? வைகோவா?

இந்தக் கேள்விக்கு அத்தனை சுலபமாக விடை சொல்லிவிட முடியாது. காரணம் அங்கே இரண்டு வேட்பாளர்கள் மட்டுமே போட்டி போடவில்லை. இந்தத் தேர்தல் முடிவுதான் தமது அரசியல் வாழ்வையே நிர்ணயிக்கப் போகிறது என்று தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் வைகோவின் அரசியல் கௌரவம்; வைகோ வெற்றி பெறுவதைக் கொஞ்சமும் ஜீரணித்துக் கொள்ள முடியாமல் இருக்கும் தி.மு.க.வின் அரசியல் கௌரவம்; கூடவே தாங்கள் ஆதரிக்கும் வேட்பாளர்கள் தோற்றுப் போனால், தங்களுக்குத் தங்கள் கட்சிகளில் இருக்கும் கௌரவம் போய் விடுமே என்று நினைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர் மற்றும் தாமரைக் கனி ஆகியோரின் சுயகௌரவம்....

இவை அத்தனையும் சேர்ந்து சிவகாசியில் போட்டியிடுவதால் போட்டியின் கடுமைக்குக் கேட்பானேன்! ஆம்; பட்டாசு நகரில் அனல் பறக்கிறது!



அப்பாடா! கிடைத்தது விடுதலை!

தேர்தல் கமிஷனுக்குப் பெரிய நிம்மதி. இம்முறை சொற்ப எண்ணிக்கையில்தான் சுயேட்சைகள் போட்டியிடுகிறார்கள். ஆகவே, வாக்குச் சீட்டுக்கு பதிலாக புத்தகம், மெகா சைஸ் வாக்குப் பெட்டி, இன்னபிற தொல்லைகளிலிருந்து, விடுதலைப் பொன் விழாவின் போது, விடுதலையடைந்திருக்கிறார்கள்.

முன்பு, சுயேட்சைகளுக்கென்று தேர்தல் கமிஷன் ஒதுக்கியிருந்த சின்னங்களின் எண்ணிக்கை நூற்றி ஐந்துதான். மொடக்குறிச்சியில் ஆயிரத்து முந்நூற்றுச் சொச்சம் வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்தவுடன், அதிகாரிகளுக்குத் தலைவலி ஆரம்பமானது.

அதற்கு முன்பு ஜா. ஜெ. அணியினரிடம் புறாவும், சேவலும் பட்ட பாட்டைக் கண்டு, பறவைகளும், வளர்ப்புப் பிராணிகளும் சின்னங்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

புதிய சின்னங்களை உருவாக்க, கடைநிலை ஊழியர் முதல் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வரை தேர்தல் துறையிலுள்ள அனைவரும் ஆளாளுக்கு ஐடியா கொடுத்தனர். இதற்கு முன்பு தமிழ்நாட்டில் இதே பிரச்னையை சந்தித்த அரவக்குறிச்சி (264 பேர்) மற்றும் பள்ளிப்பட்டு தொகுதிகளின் வாக்குச் சீட்டுப் பிரதிகளும், கர்நாடகாவில் பெல்காம் தொகுதியின் (முந்நூறு ப்ளஸ் வேட்பாளர்கள்) வாக்குச் சீட்டுப் பிரதியும் தூசி தட்டி எடுத்து வரப்பட்டன.

ஒரு வேட்பாளருக்கு 'பாண்ட்' சின்னம். இன்னொருவருக்கு சட்டை, இன்னொருவருக்கு பாண்ட்+சட்டை. அதே போல ஒருவருக்கு டூத் பிரஷ், இன்னொருவருக்கு பேஸ்ட், மூன்றாவது நபருக்கு பேஸ்ட்+பிரஷ். இந்த ரீதியில் புதிய சின்னங்கள் ஜரூராய் உருவாக்கப்பட்டன. மாட்டுக் கொம்பு, கேரம் போர்டு, செஸ் போர்டு, நாதஸ்வரம், (இரட்டை நாதஸ்வரமும் உண்டு) ஹார்மோனியம், புல்லாங்குழல் என்று பட்டியல் நீண்டது.

கிளாப் போர்டு, மூவி கேமரா, ஸ்டில் கேமரா, ஹீட்டர், கேஸட், கால்குலேட்டர், அயர்ன் பாக்ஸ், செல்லுலர் போன் என்று ஒன்றையும் விட்டு வைக்கவில்லை!

இப்படி 1050 சின்னங்களை உருவாக்கி தேர்தல் கமிஷனின் அப்ரூவலுக்காக டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. கையில் துப்பாக்கி ஏந்திய வீரனின் சின்னத்தை மட்டும் கமிஷன் நிராகரித்து விட்டது. வாக்குச் சீட்டைப் புத்தகமாக வெளியிட ஸ்பெஷல் பர்மிஷன் வழங்கப்பட்டது.

அதன்பின் ராட்சச வேகத்தில் வாக்குப் புத்தகம் அச்சடிப்பு, சூப்பர் ஜெயண்ட் சைஸ் வாக்குப் பெட்டிகள் தயாரிப்பு என்று கடைசி நிமிஷம் வரை டென்ஷன்!

வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு நேரம் கூட, அந்தக் குறிப்பிட்ட தொகுதிகளில் நீட்டிக்கப்பட்டது. காரணம், ஒரு வாக்காளர், தாம் விரும்பும் வேட்பாளர் பெயரை, சின்னத்தைத் தேடிக் கண்டு பிடித்து, முத்திரை குத்துவதற்குச் சராசரியாய் ஆறு நிமிடம் ஆனது!

தொகுப்பு : **கௌதம்**



KVB-யின் பஞ்சரத்னா.

சேமிப்புக் கணக்கின் வசதி வைப்புக் கணக்கின் வட்டி

"பஞ்சரத்னா" சேமிப்புத் திட்டத்தின் ஐந்து சிறப்பு அம்சங்கள். ● சேமிப்புத் தொகை ரூ.1000/-யூனிட்டுகளாக வைக்கப்படும். ● முதிர்வு காலத்திற்கு முன்னரே சேமிப்புத் தொகை-யிலிருந்து தேவைப்படும் தொகை-யினை ரூ.1000/- யூனிட்டுகளாக திரும்பப் பெறலாம். ● முதிர்வு காலத்-திற்கு முன்பே திரும்பப்பெறும் தொகைகளுக்கும் வங்கி விதி முறைப்படி வட்டியினைப் பெறலாம். ● முதிர்வு காலத்தில் மீதமுள்ள தொகையினை உரிய வட்டியுடன் திரும்பப் பெறலாம். ● வங்கியில் பெறப்படும் கடன் வசதிக்கு ஈடாக இந்த சேமிப்பு ரசீதினைக் கொடுக்கலாம்.

KVB

Since 1916

தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.

கரூர் - 639 002

நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி

இத்திட்டம் குறிப்பிட்ட கிளைகளில் மட்டுமே செயல்படுகிறது. மேலும் விவரங்களுக்கு எங்கள் கிளை அலுவலர்களை அணுகவும்.

A.D. நவநீதன்
சேர்மன்

Prathiba CBE KVB 108 99

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஸ்ரீயஃப்தித்வம் என்ற குணத்தைச் சொன்னேன். அதையடுத்து வருவது அபஹதபாத்மத்வம்–அதாவது பாபமே கலப்பில்லாத குணம். அதையும் அடுத்து வருவது நிம்ருத்யுத்வம்–விஷ்ணு சப்த மானது அவன் ம்ருத்யு பயமற்றவன் என்று காட்டித் தருகிறது. ஐந்தாவது விஜ்வரத்வம்–

விஜ்வரத்வம்...... என்றால், ஜுர, ரோக மற்ற குணம். பகவானுக்கு ம்ருத்யுவே இல்லை என்னும்போது ஜ்வரம் ஏது...?!

இந்த உபநிஷத்களெல்லாம் ஏகமாகக் கேள்வி கேட்டுப் பதில் சொல்கின்றன. ஏன் அப்படி அமைந்திருக்கின்றனவென்றால், பிற்காலத்தில் வரக்கூடியவர்கள் இப்படி யெல்லாம் கேள்வி கேட்பார்கள் என்று அறிந்து, இந்தக் காலத்தவர் நூதனமாய் ஒரு கேள்வியையே உண்டாக்க முடியாத அளவுக்கு அத்தனை கேள்வி அதிலே– உபநிஷத்திலே இருக்கிறது.

சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்தோமானால், 'என் கேள்விக்கு பதில் சொல்லட்டும்' என்று ஒருத்தர் இன்று கேட்கக்கூடிய எந்தக் கேள்விக்கும் அதிலே ஏற்கெனவே பதில் இருக்கும். இன்றைய தினம் ஒருவர் கேள்வி கேட்டு அதற்கு பதில் சொல்ல முடியாத நிலையில் நமது வேத, இதிஹாஸ, புராணங்கள் இருந்தால் அதற்கு வேதத்வம் என்கிற தனித்தன்மை நிலை பெறாது.

ஒருவர் கேள்வி கேட்டு பதில் சொல்ல முடியாமல் போனால் அது எப்படி வேதமாகும்?! அதனாலேதான் வேதமே என்னென்ன எதிர்மறையாகக் கேள்விகள் கேட்க முடியுமோ எல்லாவற்றையும் கேட்டுவிட்டது. இப்போது, என்ன கேள்வி கேட்கலாம் என்பதையே நாம் வேதத்தைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்!

அப்படி நாம் கேள்வி கேட்கிற போது, 'ம்ருத்யு பயமே இல்லாத பகவான் ஜ்வரத்தோடு எங்கே படுத்துக் கொள்ளப் போகிறான்...? அப்படியிருக்க விஜ்வரத்வம் என்றொரு குணத்தை அவனுக்குத் தனியே சொல்ல அவசியமென்ன...? என்கிற கேள்வி வரும்.

லீலைக்காக அவனுக்கு ஜுரம் ஏற்படுவது உண்டு என்பதே பதில்.

பகவான் அவதார காலத்திலே ஜுரம் வந்த மாதிரி பாசாங்கு பண்ணுவான். கிலேசங்கள், கஷ்டங்களெல்லாம் வந்த மாதிரி நடித்துக் காட்டுவானேயொழிய, உண்மையிலே அவனுக்கு ஜுரம் உண்டா...? கிடையவே கிடையாது!

ஒருநாள் துவாரகையிலே உட்கார்ந்து கொண்டிருந்தபோது பரமாத்மாவுக்கு 'ஊஹு ஹு' என்று உடலெல்லாம் நடுங்குகிறது. அவ்வளவு ஜுரம்! அருகிலிருப்பவர்கள் பார்த்தார்கள்... 'இந்த ஜுரத்தைப் போக்க வேண்டுமே!

'பிரதமோ தைவ்யோ பிஷக்'– இது ருத்ரத்திலே வரக்கூடிய மந்திரம். முதல் வைத்யன் யார் என்றால், பகவான் என்கிறது வேதம்.

பேஷகம் என்றால் மருந்து; பிஷக்–மருத்துவன். பிஷக் யாரென்றால் பகவான். பேஷகமும் அவனே. மருத்துவனாய் நிற்கிறான். மருந்தாகவும் ஆகி நிற்கிறான்.

'உடம்பெல்லாம் ஜுரம் வந்துவிட்டதே, இப்போது என்ன பண்ணுவது?' என்று கேட்டால், அதையும் அவனே சொல்லித் தருகிறான்:

"என்னிடம் ரொம்ப பக்தியுள்ளவர்கள், அவர்களுடைய பாத தூளியை எடுத்து தீர்த்தத்திலே போட்டுக் கொடுக்க, அதைச் சாப்பிட்டால் ஜுரம் போய்விடும்."

இவனிடத்தில் பக்தியுள்ளவர்கள் யார்...? வியாஸ பகவான்!

அவரைக் காட்டிலும் பக்தியிலே மேம்பாடுடையவர்கள் வேறு கிடையாது. அதனால் எல்லோரும் வியாஸரிடம் போனார்கள். போய் அவரிடம் கேட்டார்

குணநயான்



கள்.

அவர்கள் பேச்சைக் கேட்டதும் 'சாந்தம் பாபம்!' என்று காதைப் பொத்திக் கொண்டார் அவர்.

''இது என்ன அக்கிரமம்! கிருஷ்ணனுக்குப் பாத தூளியை நான் தருவதா? அதை கிருஷ்ணன் ஜலத்திலே போட்டுச் சாப்பிடுவதா...! இது என்ன அக்கிரமம்! யார் சொன்னது இந்த மருந்து?...'' என்று கேட்டார்.

"அவனேதான் சொன்னான்."

–கிருஷ்ணன்தான் சொன்னான் என்றவுடனே அவர், அவனிடமே போய்க் கேட்கலாம் என்று நேராக துவாரகைக்கே கிளம்பி வந்து விட்டார்.

சரி, இவரைக் கேட்டுப் பிரயோஜனமில்லை என்று உத்பவரிடம் போனார்கள். உத்பவர் பரம கிருஷ்ண பக்தர். அவரிடம் இதைக் கேட்டதும் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார்! கிருஷ்ணனுக்காகப் பாத தூளி கேட்டதுமே இப்படி மயங்கி விழுந்தவரைத் தெளிவிக்க ரொம்பக் காலம் ஆயிற்று. அதன் பிறகு நடுநடுங்கிப் போய் அவர், 'இப்படிக் கேட்கலாமா என்னிடம்!

ஞமில்லை 46

நான் போய் கிருஷ்ணனிடமே கேட்கிறேன்' என்று அவரும் துவாரகைக்கு வந்து விட்டார்.

அங்கே போனால் வியாஸர் நின்று கொண்டிருந்தார்! இந்தப் பக்கம் உத்பவர் நின்று கொண்டார். கிருஷ்ணன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறான்– ஜுரத்துடன்!

சரி, இந்த இரண்டு பேரும் பிரயோஜனமில்லை என்று நேராக கோகுலம் போனார்கள். அங்கே பதினாலு லட்சம் குடி என்ற பெயருடன் ஓர் இடம். பதினாலு லட்சம் கோபஸ்த்ரீகள் அங்கே நிற்கிறார்கள். அவர்களிடம் போய் முறையிட்டார்கள்:

"வாசுதேவனுக்கு ரொம்ப ரோகம் வந்திருக்கிறது. ஜுரத்தில் அவஸ்தைப்படுகிறான். அவனிடம் ரொம்ப பக்தி கொண்டவர்கள் யாராவது பாத தூளி கொடுத்தால், அதை தீர்த்தத்திலே போட்டுச் சாப்பிடுவான். அதனாலே இங்கேயுள்ளவர்கள் யாராவது பாத தூளி கொடுத்தால், – பூரண பக்தியுள்ளவர்கள் யாராவது பாத தூளி கொடுத்தால் எடுத்துச் செல்வோம்..." என்று கேட்டார்கள்.

உடனே அத்தனை கோபஸ்த்ரீகளும் கீழே உட்கார்ந்துகொண்டு– பதினாறு லட்சம் பேரும் ஒவ்வொரு கொட்டாங்கச்சியை எடுத்துக் கொண்டு காலை வருட ஆரம்பித்துவிட்டார்களாம்!

உங்கள் ஆசை நிறைவேறுகிறது!

"'குறையொன்றுமில்லை' தொடர் புத்தகமாக வெளிவந்து விட்டதா? யார் வெளியிட்டிருக்கிறார்கள்?" என்று இதுவரை எங்களைத் தொலைபேசியில் துளைத்தெடுத்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வாசகர்களே, உங்கள் ஆசை இதோ நிறைவேறுகிறது!

'குறையொன்றுமில்லை'யின் முதல் பாகம் 22.2.98 அன்று மாலை 6.01மணிக்கு சென்னை ஆழ்வார்ப்பேட்டை வீனஸ் காலனியிலுள்ள ஆஸ்திக சமாஜத்தில் வெளியிடப்படுகிறது.

நீதியரசர் என். கிருஷ்ணசாமி ரெட்டியார் வாழ்த்துரை வழங்க, முதல் பிரதியை எஸ்.வி. நரசிம்மன் (சேர்மன், பாரதிய வித்யாபவன்) பெற்றுக் கொள்கிறார்.

வெளியிடுபவர்கள்: வானதி பதிப்பகம், சென்னை–17. 366 பக்கங்கள்; விலை ரூ. 70/-

அப்படி வருடி எடுத்த பாத தூளியை ஒரு எட்டு வண்டியிலே ஏற்றினார்கள். எட்டு வண்டிகள் நிறைய கோபிகா பாத தூளி! வண்டியில் ஏற்றியதை நேராக துவாரகைக்கு அனுப்பி வைத்தார்கள்.

துவாரகையில் பகவான் உட்கார்ந்திருக்கிறான். பக்கத்திலே வியாஸர், உத்பவர் இரண்டு பேரும் நின்று கொண்டிருக்கிறார்கள். வாசலில் 'கல் கல்'லென்று வண்டியெல்லாம் வந்து நிற்கிறது.

'என்ன, இவ்வளவு வண்டிகள் வந்திருக்கிறதே...?' என்று கேட்டால், அத்தனையும் கோபிகா பாத தூளி! கிருஷ்ணனுக்காக அத்தனை பேரும் கொடுத்தனுப்பியிருக்கிறார்கள்!

வியாஸருக்கும் புரியவில்லை; உத்பவருக்கும் புரியவில்லை!

"சுவாமி இதென்ன விபரீதமான ஆசாரம்! இது என்ன லீலை? எங்களுக்குப் புரியவில்லையே..." என்கிறார்கள்.

மகான்களுக்கே புரியவில்லையானால், சாமானியர்களுக்கு எப்படிப் புரியும்?...

பகவானே சொல்கிறான்:

"நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதும் எனக்குத் தெரியும்; கோபஸ்த்ரீகள் எப்படிப்பட்டவர்கள் என்பதும் எனக்குத் தெரியும். உங்கள் நிலையையும் கோபஸ்த்ரீகளின் நிலையையும் நான் இப்போது சொல்கிறேன்.

"நீங்களெல்லாம் என்ன நினைக்கிறீர்கள்...? எல்லாரைக் காட்டிலும் மேம்பட்டவன் பரமாத்மா. அவனுக்குப் பாத தூளியைக் கொடுப்பது அபசாரம். அப்படிச் செய்தால் நரகம் சித்திக்கும் என்று நினைக்கிறீர்கள். அதனால் உங்கள் பாத தூளியைக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள்...

"இதே ஞானம் கோபஸ்த்ரீகளுக்கும் உண்டு. கிருஷ்ணனுக்குப் பாத தூளி கொடுக்கக் கூடாது; அதனால் பாபம் உண்டாகும்; நரகம் சித்திக்கும் என்பது அவர்களுக்கும் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும் கொடுத்தார்கள்... ஏன்...?

"தாங்கள் கெட்டுப்போனாலும், தாங்கள் நரகத்திலே விழுந்தாலும், தங்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும், இதனால் கிருஷ்ணனுடைய ஜுரம் நீங்குமானால், அது அவனுக்குப் போய்ச் சேரட்டுமே, என்று தங்களை அழித்துக் கொண்டாவது அவன் வாழ வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள் கோபஸ்த்ரீகள்..." என்றான் பரமாத்மா.

இதைக் கேட்ட உத்பவர், "இந்த மாதிரி பக்தியை நான் பார்த்துமில்லை; கேட்டதுமில்லை..." என்று கூறிவிட்டார்!

ஆகையினாலே பரமாத்மா அவதார காலத்திலே பக்தியினுடைய பெருமையைக் காட்டுவதற்காக ஜுரம் வந்த மாதிரி, கஷ்டம் வந்த மாதிரி நடித்தான்.... ஆனால் இதெல்லாம் இயற்கையிலே பகவானுக்கு உண்டா என்றால், கிடையாது!

ஆகையினாலே பகவான் நோயாகவும் இருக்கிறான்; நோய்கள் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கிறான். அந்த ஆரோக்கியமாகவும் அவனே இருக்கிறான்; வைத்தியனாகவும் இருக்கிறான்.

வாளால் அறுத்துச் சுடினும்
மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்
போல்...

என்பதுண்டு!

மருத்துவர் ஆபரேஷன் பண்ணுகிறார். சஸ்திர சிகிச்சை-பெரிய கத்தி! அதை எடுத்துக் கொண்டு வருகிறார். இன்னும் சில ஆயுதங்கள் எடுத்து வந்து உடம்பை அறுத்து சிகிச்சை செய்கிறார். ஆனால், இந்த நோயாளிக்கு மருத்துவன்பால் மாளாத, தீராத காதலாம்!

ஏன் என்று கேட்டால், 'இவர் கத்தியாலே வெட்டினாலும் அறுத்தாலும் நம்முடைய நன்மைக்காகத்தானே பண்ணுகிறார்...' என்று அந்த மருத்துவனிடத்திலே நோயாளிக்கு மிகுந்த ஆசை. ஆகையினாலே, சிகிச்சை பண்ணுகிறவன் பரமாத்மா. வைத்யனாகவும் இருக்கிறான் மருந்தாகவும் இருக்கிறான்.

(தொடரும்)

அருள்வாக்கு

நேரடியாக நமக்கே நல்லது செய்து கொள்ள வேண்டும் என்று பணத்தையும், இந்திரிய சுகங்களையும் தேடிப் போனால் இந்த உள் நிறைவு உண்டாக மாட்டேன் என்கிறது. மாறாக சுய காரியங்கள் நிம்மதியின்மையிலும் துக்கத்திலுமே கொண்டு விடுகின்றன. கண்ணாடியில் நமது முகத்தைப் பார்க்கிறோம். அதன் நெற்றியில் பொட்டில்லை என்று தெரிகிறது. உடனே கண்ணாடிக்குச் சாந்து இட்டால் என்ன ஆகும்? கண்ணாடி கறுப்பாகும். பிம்பத்துக்குப் பொட்டு வைப்பது என்றால் பிம்பத்தின் மூலமான மனிதனுக்குத்தான் பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும். 'எனக்கு' என்று நினைத்துச் செய்யும் காரியங்கள் உண்மையில் நம் மனசுக்குக் கரிப்பொட்டு வைப்பதாகவே- நமக்கு நாமே கரியைப் பூசிக் கொள்வதாகவே - முடிகிறது. மனசு என்கிற மாயக் கண்ணாடியில் பிரதிபலிக்கிற பரமாத்ம பிம்பத்தையே 'நான்' என்று நினைக்கிறோம். அந்தப் பிம்பத்துக்கு அழகு செய்வது என்றால் உண்மையில் பரமாத்மாவுக்கு அழகு செய்ய வேண்டும். பரமாத்ம ஸ்வரூபமான லோகத்துக்கெல்லாம் செய்கிற சேவை இதனால்தான் நிறைவைத் தருகிறது. இதே மாதிரிதான் அந்தப் பரமாத்மாவையே பூஜிப்பதும். தனக்கு என்று வைத்துக் கொள்கிற கரிப்பொட்டு, இப்போதுதான் அலங்கார திலகமாகிறது. அம்பாளுக்குச் செய்கிற அலங்காரம்தான் நமக்கு அழகு. நமக்கே செய்து கொள்கிற அலங்காரம் அஹங்காரத்துக்குத்தான் வழி காட்டும். இதை மற்றவர்களும் ரசிப்பதில்லை. அம்பாளை அலங்கரித்தால் அதைப் பார்த்து எல்லோரும் சந்தோஷிக்கிறார்கள்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அண்மையில் கோவையில் 'மிஸ் சவுத் இண்டியா' அழகிப் போட்டி நடந்தது. நாம் கண்டதிலிருந்து சில துளிகள்...



அழகிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கிரீடம்!

● ஆடல், பாடல்; ஆட்டம், பாட்டம் எல்லாம் மேடையில் அல்ல. மேடைக்குக் கீழே. அத்தனையும் இளைஞர்கள், நடுத்தர வயதினர்... பார்க்கக் கண் கோடி வேண்டும்...! இது நம் இந்தியாவா... தமிழ்நாடா... 'அதிலும் அட நம்ம கோயமுத்தூரிலீங்களா... இப்படியெல்லாம்'ன்னு மூக்குக்கு மேல் பலரும் விரல் வைத்தனர்!

● காலையிலிருந்து மதியம்வரை 'ரிகர்ஸல்' என நடந்தே ஓய்ந்து போன 14 அழகிகளை மறுபடியும் பூச்சுக் கொடுத்து நடை பயில வைத்தார்கள். மோனலிசா புன்னகை, ரம்பா வெட்டு, மனிஷா அபிநயம்... என்று யாரையும் எதனோடும் ஒப்பிடும் வல்லமை நம் பார்வையாளர்களுக்கு இருந்தது. அரங்கு அதிர விசில் சப்தம், கைதட்டல், பெருங்கூச்சல்...

● டி.வி. தீபாவளி சிறப்பு நிகழ்ச்சி போல இருக்கை எண் குலுக்கிப் போட்டு இடையிடையே 'கிப்ட் கூப்பன்' பரிசு வேறு. லாட்டரி இங்கும் வந்து விட்டது!


● முதலில் அறிமுக நிகழ்ச்சி. அப்புறம் ஜோடி நடை. வாய்ஸ், காமன் சென்ஸ்ன்னு பலதரப்பட்ட போட்டிகள்... கண்ணழகியாக பல்லவி (பெங்களூர்), தோல் அழகியாக வித்யா, முடியழகியாக அர்ச்சனா, புன்னகையழகியாக ப்ரீத்தி, எழிலழகியாக மனிஷா, என இவர் முதலில் தேர்வு பெற, ஏழு பேர் 'தாங்க் யூ' என்று ஒற்றை வார்த்தை பிளஸ் பரிசுடன் திரும்பிப் போக, நமக்கே பலமான வருத்தம்!

● முதல் பரிசு 50 ஆயிரம் ரூபாய் கிரீடம், இரண்டாம் பரிசு 35 ஆயிரம், மூன்றாவது பரிசு 25,000 என்று பல்லவி (பெங்களூர்) வித்யா (பாண்டிச்சேரி), மனிஷா என முறையே வழங்கியதோடு ஏராள பரிசுப் பொருட்களும் அவர்களுக்குக் குவிந்தது. என்றாலும், நியாயப்படி பரிசளிக்கப்பட வேண்டியவர்கள் இடையிடையே மேடையில் வந்து நடனம் ஆடி ஆடியன்ஸை மகிழ்வித்த கோவை ரெனால்டு பிரிட்டோ குழுவினருக்குத்தான். ரெனால்டு பிரிட்டோ ஆடின ஆட்டமும், வேகமும், கிடைத்த அப்ளாஸூம் - அப்பாஸ் தோற்றார் போங்கள்!

● நடுவர்களாய் கலெக்டர் மனைவி மிஸஸ் சந்தானம், தீபக்வர்மா, 96 மிஸ் இந்தியா தீபா... அட அவங்களுக்கு மத்தியில நிக்கிறவங்க... நம்ம பார்த்திருக்கோமே... பேசியிருக்கமே... என்று நினைத்தால் அது சாட்சாட் சன் டி.வி சந்தூர் திரை விமர்சனம் ப்ரியதர்ஷினிதான். ஆனால் அம்மணி கடைசிவரை எதுவும் பேசாதது ரசிகர்களுக்கு அநேக வருத்தம்.

● 'யுவர் டிக்கெட் நெம்பர் ப்ளீஸ்...!' என்று இடையிடையே வந்த குரல் பலருக்கு எரிச்சல். 'என்னய்யா டிக்கெட் வாங்காமலா வந்து உட்கார்ந்திருக்கோம்...' என ஒருவர் கத்த, ஓடிப் போனார் கேட்டவர். பிறகு நம்மிடம் கிசுகிசுத்தார், கத்தியவர்: "எங்கிட்ட டிக்கெட் இல்லே... இருந்தாலும் விரட்டிபுட்டேன் பார்த்தீங்களா...?" ◉

கட்டுரை, படம்: **கா.சு. வேலாயுதன்**





1998 பிப்ரவரி 22
ஈசுவர மாசி 10
மலர் : 56
இதழ் : 30

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




நாட்டின் எதிர்காலம் தமிழர் கையில்!

வெங்காயம் விலை ஏறியதையும் பஸ் கட்டண உயர்வையும் ரேஷன் கடைகளின் வினியோகக் குறைபாடுகளையும் பாட்டாக அமைத்துப் பாடி 'நெகடிவ்' பிரசாரம் செய்து வருகிறார் ஜெயலலிதா. தமது பேரில் அபாண்ட குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாகவும் மேடைதோறும் புலம்புகிறார். இந்த 'நெஞ்சைப் பிழியும்' காட்சிகள் கண்டு தமிழக மக்கள் உருகிவிடாமல் இருப்பது மிகவும் அவசியமாகிறது.

ஜெ. பேரில் பல்வேறு வழக்குகள் ஏற்கெனவே நிலுவையில் இருக்க, ஆறு கோடி ரூபாய் ஊழல் வழக்கு புதிதாகப் பதிவாகியிருக்கிறது. இவற்றை மறந்து, உணர்வுபூர்வமாய் முடிவெடுத்து, ஜெயலலிதா அல்லது அவரது கூட்டணிக்கு வழங்கப்படும் ஆதரவு என்பது ஊழலுக்கு வழங்கப்படும் ஆதரவே ஆகும்! ஊழலும் அராஜகமும் இவ்வளவு எளிதில் மன்னிக்கப்பட்டு மறக்கப்பட்டால், அவை அரசியல்வாதிகளின் பகிரங்கமான அலங்காரங்களாகவே மாறிவிடும்.

தமிழக வாக்காளர்கள், தி.மு.க. - த.மா.கா. கூட்டணியை ஆதரித்தாக வேண்டும் என்பதற்கு, இந்தக் காரணம் மட்டுமின்றி, தேசிய நோக்கிலான காரணங்களும் இருக்கின்றன :



உண்மையில் இந்தத் தேர்தலில் விவாதத்துக்குரிய விஷயங்கள் வெங்காய விலை உயர்வோ, ரேஷன் வினியோகக் குறைபாடுகளோ அல்ல. அந்தப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியவையே என்றாலும் மாநில அளவில்தான் அவற்றின் முக்கியத்துவம்.

மத்தியில் அமையப் போகிற அரசு, சீரிய கொள்கைகளுடன் நாட்டுக்குப் பெருமை தேடித் தரத்தக்கதாயிருக்குமா...?

புதிய பிரதமர், நேர்மையான தலைவராக, சிறந்த நிர்வாகியாக விளங்குவாரா...? - இவையே இந்தத் தேர்தலில் முக்கிய கேள்விகள்.


இக் கேள்விகளுக்கு நம்மால் மகிழ்ச்சி தரும் திருப்திகரமான பதில்களைக் கூற முடியாத நிலைமை!

எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை வாய்க்காது என்பது கருத்துக் கணிப்பு.

எனினும் எக்கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தாலும், யார் பிரதமரானாலும் நமது மாநிலத்தைச் சேர்ந்த தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்குப் பொறுப்பும் பங்கும் மிக அதிகமாயிருக்கும்.

ஐக்கிய முன்னணி பெரும்பான்மை பெற்று தனியாக ஆட்சி அமைக்கிற வாய்ப்புகள் மிகக் குறைவே. காங்கிரஸ் அல்லது பி.ஜே.பிதான் அறுதிப் பெரும்பான்மையில்லா விட்டாலும், தனிப் பெரும்பான்மையாவது பெற்று முன்னணியில் நிற்கும் என்பது ஓரளவு தெளிவாகியிருக்கிறது.

காங்கிரஸ், ஆட்சியமைக்க வாய்ப்புப் பெறும்பட்சத்தில், த.மா.காவின் ஆதரவு என்பது அவ்வாட்சிக்கு எளிதாகக் கிடைத்துவிடும். ஜெயலலிதாவுடன் காங்கிரஸ் கூட்டணி



இல்லை என்பதோடு கேசரிக்குப் பதில் சோனியாவின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமையுமேயாயின், த.மா.கா. ஆட்சியிலேயே இடம்பெறவும் சம்மதிக்கலாம். தி.மு.க. வெளியிலிருந்தபடி ஆதரவு வழங்கலாம். மறு தேர்தல் என்கிற பேரிடிக்கு இடமின்றி ஐந்தாண்டுகளுக்கு ஓர் ஆட்சி அமையவும் மன்மோகன்சிங் - சிதம்பரம் கூட்டணியில் பொருளாதார சீர்திருத்தங்கள் மீண்டும் சுறுசுறுப்புடன் தொடரவும் இது உதவும்.

பி.ஜே.பி. தனிப்பெரும்பான்மை பெற்று உதிரிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்து விட்டாலோ, தி.மு.க. - த.மா.கா. கூட்டணி வலுவானதொரு எதிர்க் கட்சியாகச் செயல்படலாம். சிவசேனையும், வி.எச்.பியும் செய்யும் திரைமறைவு திரிசமங்களைக் கண்டித்து ஒடுக்க பலமான எதிர்க் கட்சி தேவைப்படும். அந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸுடன் ஒரு செயல் திட்டம் வகுத்துக் கொண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம். அடிப்படைவாதத்தை அடக்கி வைத்தாலன்றி முன்னேற்றப் பணிகளும் செயல் திட்டங்களும் நடைபெற முடியாது.

ஆக, எந்த நோக்கில் ஆராய்ந்து பார்த்தாலும் தி.மு.க. - த.மா.கா. கூட்டணியின் பங்கு அடுத்து வருகிற மத்திய அரசில் அதிமுக்கியமானதாகவே இருக்கும். நாட்டின் எதிர்காலமே தமிழக மக்களின் கையில் இருக்கிறது என்று சொல்வது கூட மிகையாகாது.

இதனை உணர்ந்து, தமிழக மக்கள் தங்கள் வாக்குரிமையை கவனமாகப் பயன்படுத்துதல் மிக மிக அவசியம்.

கல்கிக்கு பேட்டியா...? NO! NO!

மதுரை நகர் எங்கும் சுப்ரமணியம் சுவாமி ஆக்ரமிப்புத்தான்! எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக் கொடி தோரணங்கள்; போஸ்டர்கள்; ஹோர்டிங்குகள் என்று சு.சுவாமி ராஜ்ஜியமாகவே மாறியிருக்கிறது மதுரை மாநகரம்!

"பார்த்தீர்களா? இப்படியெல்லாம் செலவு செய்வதற்கு சுவாமிக்கு எங்கிருந்து பணம் வருகிறது?" என்று நம்மிடமே கேட்டார், தி.மு.க. கூட்டணியுடன் மதுரை தொகுதியில் போட்டியிடும் த.மா.கா. வேட்பாளரான ஏ.ஜி.எஸ். ராம்பாபு.

"சென்ற முறை தனித்து நின்றே கணிசமான வாக்குகளைப் பெற்றவர் சுவாமி. இந்த முறை அ.தி.மு.க. கூட்டணியுடன் வேறு போட்டியிருகிறார். இந்த நிலையில் உங்கள் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படாதா?" என்று கேட்டோம் (சென்ற முறை வெற்றி பெற்ற)ராம்பாபுவிடம்.


"பிரச்னையே அவரது கூட்டணி தாங்க. போன தடவை மாதிரி அவர் இந்த முறையும் தனிச்சே போட்டியிட்டிருந்தா நிச்சயம் அதிக வோட்டு வாங்குவார். நான் பயப்படும்படியான வேட்பாளராகக் கூட இருந்திருப்பார். இப்ப அப்படி இல்லீங்க. ஜனங்க ரொம்பவும் வெவரமானவங்க. அதுவும் மதுரைக்காரங்க ரொம்பவே வெவரமானவங்க. நிச்சயமா அவருக்கு வோட்டுப் போடமாட்டாங்க!"

"எப்படி இவ்வளவு நம்பிக்கையோடு சொல்றீங்க?"

"பாக்கறனில்ல. நான் போற எடத்திலெல்லாம் ஜனங்க சொல்றாங்கல்ல! அதுவும் சுவாமியை வையுன்னு சொல்றாங்க. சும்மா வஞ்சாக் கூட போதாதுங்கறாங்க. குண்டக்க மண்டக்க வஞ்சாத்தான் அவுங்களுக்குப் புடிக்கிறது. சாதாரணமாவே நான் யாரையும் வையமாட்டேன். அது புடிக்கவும் புடிக்காது. என்ன பண்றது! ஜனங்க அப்படித்தானே பேசச்சொல்றாங்க!"

"கடந்த ஒன்றரை வருஷத்தில் நீங்க எம்.பியா இருந்து பெரிசா எது

• மோகன்



• ராம்பாபு



வும் சாதிக்கலைன்னு சொல்றாங்களே?"

"செய்யற சாதனைங்களை விளம்பரப்படுத்திக்காம இருக்கறது எவ்வளவு ஆபத்துன்னு இப்பத்தான் புரியுது. மதுரையிலேர்ந்து டெல்லிக்கு இணைப்பு ரயில், மதுரை-பெங்களூர் ரயில், தல்லாகுளம் பகுதியில ரயிலுக்கு முன் பதிவு மையம்னு நெறையச் செஞ்சிருக்கேன். மதுரை ஏர்போர்ட்டை பன்னாட்டு விமான நிலையமா மாத்தறதுக்கு 3.5 கோடி ரூவா வாங்கிக் குடுத்திருக்கேன். கொடைக்கானல்ல எஃப்.எம். ரேடியோ ஸ்டேஷனுக்கு அனுமதி வாங்கித் தந்திருக்கேன். ஐம்பத்திரண்டு பேருக்கு- மருத்துவ சிகிச்சைக்காகப் பிரதமர் நிவாரண நிதியிலேர்ந்து 11,30,000 ரூவா வாங்கித் தந்திருக்கேன். இப்படி நெறையப் பண்ணியிருக்கேன். இது ஜனங்களுக்குத் தெரியும். அதனால பிரச்னையே இல்லை!" என்றார் ராம்பாபு.

இன்னொரு முக்கிய வேட்பாளர் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரரான மோகன். கட்சியின் முழு நேரப் பணியாளர். மதுரை நகரின் ஒரு கோடியில் இவரது வீடு இருப்பதால் கட்சி ஆபீஸுக்கு வந்து விட்டுக் காலையில் பிரசாரத்துக்குக் கிளம்ப நேரம் பிடிக்கும் என்பதற்காகக் கட்சி அலுவலகத்திலேயே தங்கியிருந்து பிரசாரம் செய்து வருகிறார்.

முன்பு மதுரையில் கொலையுண்ட லீலாவதி இவரது கட்சிக்காரர்தான். கொலை செய்தவர்கள் தி.மு.க.காரர்கள் தான் என்றாலும் அதை அரசியலாக்கி வோட்டுக் கேட்பது கட்சியின் கொள்கைக்கு ஒத்து வராதது என்பதால் கொள்கைகளைச் சொல்லியே வோட்டுக் கேட்டு வருகிறார்.

"தோழர் லீலாவதி கொலை என்பது ரவுடித்தனத்தால் நடந்தது. அதை நடத்தியவர்கள் தி.மு.கவினர் என்பது தற்செயலான ஒரு விஷயம்தானே தவிர, கட்சிக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? ஜெயிப்பதற்காக அதைப் பயன்படுத்துவது அரசியல் அநாகரிகம்!" என்று நம்மிடம் பேச ஆரம்பித்தார்.

"ஆனால், சுப்ரமணிய சுவாமி இதையெல்லாம் சொல்லி வோட்டுக் கேட்கிறாரே?

"அவருக்கு அது சரியாக இருக்கலாம்! அரசியல் ஒழுக்கமுள்ளவர்களுக்கு அது எப்படிச் சரியாக வரும்? சொல்லப்போனால் சுவாமி அப்படிப்பேசுவது அவருக்குத்தான் எதிராக முடியும். அவர் கூட்டணி வைத்திருக்கிற கட்சி ஆட்சியில் இருந்தபோது, எத்தனை லீலாவதி சம்பவங்கள் நடந்தன என்பது மக்களுக்குத் தெரியாததா என்ன!"

"மார்க்ஸிஸ்ட் கட்சியின் நோக்கமும் பி.ஜே.பி. ஆட்சிக்கு வரக் கூடாது என்பது தான். ஐ.மு.வின் நோக்கமும் அதுதான் என்கிறபோது, இப்படி உங்கள் கட்சி இரண்டு இடங்களில் தனித்துப் போட்டியிடுவது சரியா? வோட்டுகளைப் பிரிப்பதாகி விடாதா?"

"இரண்டு இடங்களில் மட்டும்தானே போட்டியிடுகிறோம்? நாங்கள் அனைத்திந்

திய அளவில் அதிக எம்.பிக்களைக் கொண்டிருந்தால்தானே ஐ.மு.வில் எடுக்கப்படும் முடிவுகளில் முக்கியப் பங்கு வகிக்க முடியும். உதாரணத்துக்குப் பெட்ரோல் விலையுயர்வு. அதை எங்களால் ஒத்திப்போட முடிந்ததே தவிர, தடுக்க முடியவில்லை. காரணம் நாங்கள் குறைந்த எம்.பிக்களையுடையவர்கள் என்பதுதானே!'' என்ற மோகன், பொதுவாகவே ராம்பாபுவின் மேல் மக்களுக்கு ஓர் அதிருப்தியிருப்பதால் தமக்கே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாகச் சொன்னார்.

சுவாமி என்ன சொல்கிறார்? தெரிந்து கொள்வதற்காக மதுரையிலுள்ள அவரது இல்லத்துக்குச் சென்றோம். வீட்டைச் சுற்றிலும் 'மெஷின்கன்'கள் ஏந்திய கமாண்டோக்களின் கூட்டம். (சுவாமியின் பாதுகாப்புக்காக மட்டும் தமிழகத்தில் தொண்ணூறு கமாண்டோக்கள் இருக்கிறார்கள்!) கூடவே சில கட்சிக்காரர்கள். பிரசார மற்றும் பாதுகாப்புப்படை வேன்கள்.

''என்னங்க, தைப்பூசத்துக்குப் பழனி போக வேண்டிய நான், தேர்தல் பிரசாரத்துக்காக முன்னாடியே போய்ட்டு வந்தேன். ஆனா ஒண்ணுமே கவனிக்கலையே... நாங்க எப்படி வேலை பார்க்கிறது?'' என்று ஒரு (பேச்சாளர்) பெண்மணி, கட்சி முக்கியஸ்தர் ஒருவரிடம் முறையிட்டுக் கொண்டிருந்தார்.

''நீங்க மாவட்டத் தலைவர்கிட்டக் கேளுங்கம்மா. அவர்தான் எல்லாப் பணிகளையும் பிரிச்சுத் தரணும். இப்படி ஒவ்வொருத்தரும் இங்க நேரடியா வந்து கேட்டா நாங்க எத்தனை பேர்கிட்டப் பேசிக்கிட்டு இருக்க முடியும்?''

''மாவட்டத்தைப் போனில் பிடிக்கலாம்னு பேசினேன். இங்க பொறப்பட்டு வந்ததாச் சொன்னாங்க. இங்க வந்து பார்த்தா இங்கிருந்தும் பொறப்பட்டுப் போயிட்டதாகச் சொல்றாங்க. நாங்க என்னதான் பண்றது? மேடத்தைப் (சந்திரலேகா) பார்க்கணும்.''

''அவுங்களுக்கு உடம்பு முடியலை. எல்லாம் மாவட்டம் பார்த்துக்குவார். நீங்க கவலைப்படாதீங்க!'' என்று அந்தப் பெண்மணியைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார் அந்த முக்கியஸ்தர்.

''நாங்க கல்கியிலேர்ந்து வர்றோம். சுவாமியைப் பார்க்கணும்!''– கார்டைக் கொடுத்தோம்.

''மாடியிலே போய் வெயிட் பண்ணுங்கனேன். பார்க்கலாம்!'' என்று அனுப்பி வைத்தனர்.

மேலே போனோம். சுவாமி தமது அறையிலிருந்து பிரசாரத்துக்குப் புறப்படத் தயாராக வெளியே வந்தார்.

''கல்கிக்கு இன்டர்வியு...என்.ஓ.......... நோ. என்ன மேடம்...'' என்றார் சந்திரலேகாவைப் பார்த்து.

''ஆமாம்!'' என்று வழிமொழிந்தார் சந்திரலேகா.

''படமாவது எடுத்துக்கலாமா?''

''ஓ! அது எடுத்துக்கலாம்!'' என்று கட்சிக்காரர்களையும் அருகில் அழைத்துக் கொண்டு போஸ் கொடுத்தார் சுவாமி. பிறகு புறப்பட்டுப் போய் விட்டார்.

''எப்படி சார் உங்களுக்கு இன்டர்வியூ கொடுப்பார்? சென்னை மாநகராட்சித் தேர்தலின்போது மேடத்தோட அம்மா ஏதோ சொன்னாங்கன்னு போட்டீங்க. அது மேடத்துக்குப் பிடிக்கலை. இந்த வாரம் வந்த கல்கியிலகூட சுவாமியைக் கிண்டல் பண்ணி தராசு பதில்கள்ல எழுதியிருக்கீங்களே... எப்படிக் குடுப்பாங்க...!'' என்றார் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர்.

சுவாமி நம்மிடம் பேசுகிறாரா இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். அவரது வெற்றி வாய்ப்பு எப்படி? வழக்கமான அவரது 'அதிரடி' அறிக்கைகளால் எல்லோருக்கும் தெரிந்த வேட்பாளராக இருப்பது ஒரு பிளஸ் பாயிண்ட்தான்.

த.மா.கா. வேட்பாளர் ராம்பாபு செளராஷ்ட்ரா இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் அந்த இன வாக்குகள் மொத்தமும் அவருக்கே விழும் என்கிறார்கள். லீலாவதி கொலை விஷயம் என்பது இந்தத் தேர்தலில் எடுபடாது என்பதால் தி.மு.க. கூட்டணி வேட்பாளருக்கு அதனால் பாதிப்பில்லை என்றும் சொல்கிறார்கள்.

சி.பி.எம். இங்கே தனியாகப் போட்டியிடுவதும் தி.மு.க.–த.மா.கா. கூட்டணிக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் சொல்கிறார்கள். காரணம், சென்ற தேர்தலிலும் சி.பி.எம்., ம.தி.மு.க. கூட்டணியுடன் தனியாகத்தானே போட்டியிட்டது என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.

கூட்டிக் கழித்துப் பார்க்கிறபோது, பலரிடமும் பேசியதிலிருந்து, இந்த முறை சுவாமி அதிக வாக்குகள் பெறும் வாய்ப்பு இருப்பதாகவே தெரிகிறது. ஆனாலும் அது வெற்றிக்கு உதவுமா என்பது தெரியவில்லை. (இங்கு ஐக்கிய பொதுவுடைமைக் கட்சி – தா. பாண்டியனும் போட்டியிடுகிறார்.)

குன்னூர், நீலகிரி தொகுதிகள்:



முக்கோணப் போட்டியின் முடிவு என்ன?

சுமார் ஒன்றே கால் லட்சம் வோட்டுக்களே உள்ள குன்னூர் சட்டமன்றத் தொகுதி நிலவரம் எப்படி?.

''பாராளுமன்றத் தேர்தல் பற்றி பேசினாலே 'பஸ் கட்டண உயர்வு... கலவரம்' என ஆட்சி பற்றின அதிருப்தியில் சண்டைக்கு வருகிறார்கள்... சட்டசபைத் தேர்தலில் இந்தக் கருத்து கூடுதல் எதிர்ப்புப் பெறுமே...? எப்படி சந்திக்கப் போகிறீர்கள்...? உங்கள் கட்சி வெற்றி பெறுமா...? என்று குன்னூரில் வசிக்கும் கூடலூர் சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏவும் சட்டமன்றத் தலைமைக் கொறடாவுமான முபாரக்கிடம் கேட்டோம்.

''குன்னூரில் பஸ் கட்டண உயர்வு என்று எல்லோரும் சொல்லுவதை விட 'நல்ல பஸ் வேண்டும்' என்றே பலரும் கேட்கின்றனர். அந்தக் குறையில் 70 சதவீதத்தை கழக அரசு நிவர்த்தி செய்து விட்டது. அதுவும் இந்தக் குறுகிய ஆட்சிக் காலத்தில். ஜெயலலிதா நீலகிரி மக்களுக்குச் செய்த துரோகத்தை யாரும் எளிதில் மறந்து விட மாட்டார்கள். '21 சென்ட் இடம் இருந்தால்தான் 1½சென்ட்டில் வீடு கட்டணும்' என குன்னூருக்கு பிரத்யேகமாகப் போட்ட வீடு கட்டும் தடைச் சட்டத்தை ரத்து செய்தது எங்கள் கலைஞர் அரசு. நீலகிரிக்கு மட்டும் வீட்டு மனைப்பட்டா (இலவச) ரத்து என்றிருந்ததை மாற்றி, இப்போது 6,000 இலவச பட்டாக்கள் தயார் நிலையில் உள்ளன. கொடநாடு எஸ்டேட் (சுமார் 892 ஏக்கர்) வாங்கின ஜெ, அதன் பின்னணியில் அதன் (ஊட்டியின்) அழகு கெட்டுவிடக் கூடாது என மக்களுக்கு ஏற்படுத்தின நடைமுறைச் சிக்கல்களை முழுவதுமாக நாங்கள் வந்து நீக்கி விட்டோம். எனவே எங்கள் தி.மு.க. வேட்பாளர் சுலபமாக வென்றுவிடுவார்!'' என்றார் அவர்.

இவர் இப்படிக் கூறினாலும் குன்னூரில் (8-ந் தேதி) ஜெ செய்த பிரசாரத்தில் கலை கட்டிப் போயிருக்கிறது அ.தி.மு.க. வட்டாரம். வெற்றிக்கனி பக்கத்தில் இருந்தது. அதைத் தலைவி வந்து கையிலேயே கொடுத்து விட்டுப் போய் விட்டார். அவ்வளவு கூட்டம் அவருக்கு!'' என்றனர் ஆளாளுக்கு.


இது பற்றி 'குன்னூர் அ.தி.மு.க. நகர அவைத் தலைவர்' பாலசுப்பிரமணியம் நம்மிடம் பேசும்போது... ''போன முறையே எங்க வேட்பாளர் தொகுதிக்கு (குன்னூர் சட்டமன்றம்) நன்கு அறிமுகமாகி விட்டார். காங்கிரஸுக்கு நாங்கதான் வோட்டுக் கொடுத்துட்டு வந்தோம். எனவே அவங்க வோட்டு சிதறலாம், காங்கிரஸ் போட்டியிடுவதால்...! ஆனால் பி.ஜே.பி.க்கு இப்போ ஓர் அலையே இருக்கு... அது இன்னைக்கு எங்களுக்கே சாதகமா இருக்கு!'' என்றார்.



• எஸ்.ஆர்.பி.



• பிரபு



• மாதன்

நீலகிரி பாராளுமன்றத் தொகுதி நிலவரம் எப்படி? மத்திய இணை அமைச்சர் எஸ்.ஆர்.பி.யை எதிர்த்துத்தான் மற்றவர்கள் நிற்கிறார்கள் என்று நம்பிப் போனால் நிலைமை தலைகீழ். பி.ஜே.பி.

வேட்பாளர் மாஸ்டர் மாதனுக்கும், இ.காங். வேட்பாளர் ஆர். பிரபுவுக்கும்தான் கடுமையான போட்டி நிலவுகிறது. பல முக்கிய பிரமுகர்கள், நுகர்வோர் அமைப்புகள், பொது மக்கள் என பலரிடமும் (ஊட்டி, குன்னூரில்) எஸ்.ஆர்.பி.யின் செயல்பாடு குறித்துப் பெரிய அதிருப்தியே நிலவுகிறது.

"நிலைமை இப்படியிருந்தால் எப்படி?" என்று தி.மு.க. பிரமுகர் ஒருவரிடமே கேட்ட பொழுது 'பிரபு(இ.காங்) நிற்பதே இவர் வெற்றிக்கு வசதி... படுகாஸ் கம்யூனிட்டி வோட்டுகள் பி.ஜே.பி.வேட்பாளர் மாஸ்டர் மாதனுக்கும், ஆர்.பிரபுவுக்குமாக மாறி மாறி விழும்போது... தமது வெற்றி உறுதி என எஸ்.ஆர்.பி. கணக்கிட்டிருப்பார்!'' என்று ஒரு புது கணக்கைச் சொன்னார்.

ஆனால் பி.ஜே.பி. வேட்பாளர் மாதனோ, "ஜனங்க என்னை வரவேற்கிற முறை, அணுகுகிற விதம், குறைகளைச் சொல்லி, தீர்க்கக் கேட்கிற கேள்வி... எல்லாமே... நா இரண்டரை லட்சம் வாக்கு வித்தியாசத்துல வெற்றி பெறுவேங்கற நம்பிக்கையை எனக்கு ஊட்டியிருக்கு!'' என்றார் நம்மிடம் உறுதியாக.

இந்த முக்கோணப் போட்டியின் விளைவாக, முடிவான முடிவைத் தேர்தல் முடிவுதான் சொல்ல வேண்டும்.

கட்டுரை, படங்கள்: **கா.சு. வேலாயுதன்**

கல்கியில் வந்தது; காரியம் நடந்தது!

அன்புள்ள ஆசிரியருக்கு,

சுதந்திரப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான அமரர் சி.ஏ. பாலன் அவர்களின் துணைவியார் எழுதிக் கொள்வது.

எனது கணவர் 2.12.93 அன்று அமரரானார். அதன் பிறகு அவர் பெற்று வந்த மத்திய சுதந்திரப் போராட்ட வீரருக்கான பென்ஷனை நான் பெற்று வந்தேன். தமிழ்நாடு அரசு ஆணையின்படி, மத்திய பென்ஷன் பெறுபவர்களுக்கு மாநில அரசின் பென்ஷனை உடனடியாக வழங்க 1993-ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்திருந்தும் இதுநாள் வரை எனக்குக் கிடைக்காமல் இருந்தது.

பலமுறை அரசு அலுவலகங்களில் ஏறியிறங்கி அரும்பாடுபட்ட பிறகு, தலைமைச் செயலகத்திலிருந்து காஞ்சி மாவட்ட ஆட்சியலுவலகத்திற்கு ஆவன செய்ய அனுப்பப்பட்டது. அதன் பிறகும் எனக்குத் தக்க பதில் கிடைக்கவில்லை.

ஆனால், எனது பிரச்னை 25.1.98 தேதியிட்ட கல்கியில் பிரசுரமான நான்கு நாட்களுக்குள் எனக்கு பென்ஷன் கிடைக்க உத்தரவு போடப்பட்டுள்ளது! இனி நான் கருவூலத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

கல்கி இதுபோன்ற சமுதாயப் பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தங்கம்மா பாலன், சென்னை - 43.

அன்புள்ள கல்கி ஆசிரியருக்கு,

28.12.98 நாளிட்ட 'கல்கி' இதழில் 'சுதந்திரத்துக்குப் போராடியவர் பென்ஷனுக்கும் போராடுகிறார்' என்ற தலைப்பில் வெளியான செய்தியைப் படித்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இது தொடர்பான கோப்பை ஆய்வு செய்து, திரு பி.வி. சீனிவாசன் (கு/பெ. மறைந்த பி.ஆர். வெங்கட்ராம நாயுடு) எண் 50, வாரணபுரம் 4-வது தெரு, பவானி, ஈரோடு மாவட்டம்) அவர்களுக்கு மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் 12.3.1983 முதல் அவரது வாழ்நாள் முழுமைக்கும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதனையொட்டி வெளியிடப்பட்ட அரசின் ஆணையின் நகலினை தங்களின் தகவலுக்காக இத்துடன் இணைத்துள்ளேன்.

வ. விஸ்வநாதன், இ.ஆ.ப.,
முதலமைச்சரின் செயலாளர்,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

(உடனடியாக ஆவன செய்த முதல்வருக்கும் அதிகாரிகளுக்கும் நன்றி! — ஆர்.)

ஊழல் பெருச்சாளிகளை உள்ளே விடாதீர் !



ஊர் சிரித்த ஊழல் ஆட்சி மீண்டுமா?
உடன்பிறவாச் சகோதரிகள் கொள்ளையடிக்க வேண்டுமா?

மத்தியிலும் உங்கள் ஆட்சி என்றும் தொடர

ஆதரிப்பீர் உதயசூரியன்

தமிழ் மாநில காங்கிரஸ்

இந்திய கம்யூனிஸ்ட்

நல்லாட்சி தொடர வழி வகுப்பீர் ! லஞ்ச லாவண்ய மதவெறிக் கூட்டணியை முறியடிப்பீர் !!

DMK/1/T

வெளியீடு : தி.மு.க. தலைமை நிலையம், அண்ணா அறிவாலயம், சென்னை.

உயர்நீதி மன்றத் தீர்ப்பு !

ஸ்பிக் நிறுவனப் பங்குகளை விற்றதில்

ஊழல்! ஊழல்!!

உயர்நீதி மன்றத் தீர்ப்பு சொல்வது என்ன?


"தனியாருக்கு விற்ற பங்குகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட விலை நியாயமானதுமல்ல; உண்மையானதுமல்ல; ஆனால் அந்த தேதியில் உள்ள உண்மையான விலைக்கு மிகவும் குறைவானது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகின்றது. இது பொது நலனுக்கும் அரசாங்கத்தின் நலன்களுக்கும் எதிரானதாகும்...."

"...அதிகாரத்தைக் கெட்டநோக்கத்தோடு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. எனவே, ஜெயலலிதாவின் நடவடிக்கையும் செயல்பாடும் கடுமையான சட்ட விரோதச் செயல் என்று முத்திரை குத்தலாம். (முதலமைச்சர்) ஜெயலலிதாவின் இத்தகைய நடவடிக்கை மிகவும் வேதனை தரத்தக்கதாக உள்ளது...."

"...ஆட்சிப் பொறுப்பேற்க அமர்த்தப்பட்ட ஜெயலலிதாவைப் போன்றவர்களின் இத்தகைய நடவடிக்கைகளும், செயல்பாடுகளும் தொடர அனுமதிக்கப்படுமேயானால் - அது வளர்ந்து வரும் ஜன நாயகத்தில் அழிக்க முடியாத மாசாகத்தான் அமைந்திடும். மேலும் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தையும் தகர்த்து விடும்..."

"...நாம் இந்த வழக்கை, சற்று மெத்தனமாக எடுத்துக்கொண்டு - மென்மையான முடிவிற்கு வரலாமென்றால், அது மற்றவர்களுக்கு ஒரு தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும் என்று இந்த நீதிமன்றம் அஞ்சுகிறது. மேலும், இந்த ஊழல் ஒரு தொத்து வியாதியைப் போலப் பரவி ஒட்டு மொத்தமான சமுதாயத்தையே முழுவதுமாகக் கெடுத்துவிடும். வருங்காலத்திலே இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற வழிவகுத்துக் கொடுத்துவிடும்..."


நல்லாட்சி தொடர வழி வகுப்பீர் !



THE HINDU

India's National Newspaper

TIDCO disinvestment: HC indicts ex-CM



The Indian Express

High Court orders CBI to probe TIDCO disinvestment in SPIC

Jaya, two others to make good Rs 28.29 cr loss




காலரா – அம்மை போல

ஊழலும் தொத்துவியாதி


என்கிறது உயர்நீதி மன்றம்!

தாக்க வரும் அம்மையை
தடுத்து நிறுத்துங்கள்!

ஆதரிப்பீர் உதயசூரியன்



தமிழ் மாநில காங்கிரஸ்





இந்திய கம்யூனிஸ்ட்

லஞ்ச லாவண்ய மதவெறிக் கூட்டணியை முறியடிப்பீர் !!

வெளியீடு : தி.மு.க. தலைமை நிலையம், அண்ணா அறிவாலயம், சென்னை.

பேட்டிகளே போதும்; ஜோக்குகள் வேண்டாம்!

◆ 'பீகாருக்குப் போன பிஸ்தா' கட்டுரையைப் படித்து முடித்த பின்னர் - அதுவும் கடைசி பாராவுக்கு முந்தைய பாராவில் கண்டுள்ள ஊழல்களைப் படித்த பின்னர் நல்லவேளை, இந்தியாவின் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் எவ்வளவோ மேல் என்ற நிம்மதி ஏற்படத்தான் செய்கிறது!

திருவரங்கம், அ. சம்பத்.

◆ 'அட இதுல இவ்ளோ விஷயம் இருக்கா' என்ற கட்டுரையைப் படித்தேன். இரத்த அழுத்தம், அதன் அளவை எடுக்கும் விதம் போன்ற மருத்துவத் தொழில் நுட்பங்களையெல்லாம் எளிமையாகப் புட்டு புட்டு வைக்கும் இந்த அரிய மருத்துவத் தொடர், படித்தவர்களின் கவனத்தை பெரிதாகக் கவர்ந்துள்ளது. அதோடு, பொது அறிவை வளர்க்க நல்வித்தாகவும் அமைந்துள்ளது. பாராட்டுக்கள்.

லால்குடி, எம். இராஜேந்திரன்.

◆ இந்த வாரம் அட்டைப் படத்திற்கு திருஷ்டி சுத்திப்போடு தலைவா! தேர்தலும் அதுவுமாய்த் தலைவர் வெளிநாடு பறந்திட்டாரே என்று பயங்கர ஆதங்கத்தில் இருந்தோம். அந்த ஆதங்கத்தைப் போக்கி விட்டது அட்டைப்படமும் எங்கள் ரசிகர்களின் கலந்துரையாடலும்! ரொம்ப தேங்க்ஸ்பா!

ஈரோடு - 1, எஸ். ரஜினிப்பிரியன்.

◆ 'காதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்ற கேள்விக்கு ரம்பா அளித்த பதில் சிந்திக்கத் தூண்டும் சிறப்பான செய்திகளை உள்ளடக்கிப் பிரகாசிக்கிறது! காதலின் புனிதத்தை இவ்வளவு மென்மையான வார்த்தைகளால் விளக்கும் பாங்கு ரம்பாவிடம் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியது!

கே. கழுகாசலபுரம், எஸ்.ஏ. கேசவன்.

◆ உங்களுக்கு வாழ்க்கை புரிஞ்சுருக்கு. என்னைப் புரிஞ்சுருக்கு. இல்லாட்டி இதை வாங்கித் தந்திருப்பீங்களா." புவனாவின் யதார்த்தமான இந்த பதில் ராமகிருஷ்ணனுக்கு மட்டுமல்ல. கதையைப் படித்த என் போன்ற வாசகர்களுக்கும் பரம திருப்தியை அளித்தது.

சென்னை - 44, எஸ். கிருஷ்ணசுவாமி.

◆ எல்லாக்கட்சித் தலைவர்களின் பேட்டிகளைப் படித்தபின், தாங்கள் ஏன் ஜோக்குகளுக்கென்று தனியாக இடம் ஒதுக்குகிறீர்கள் என்ற கேள்வி ஏற்பட்டது.

நாட்டரசம்பள்ளி, பாலு.

◆ ஒருவரை ஒருவர் குறை கூறி, தாக்கிப் பேசுவதை ஒரே நேரத்தில், ஒரே இதழில் அறிந்து கொள்ளும்போது, எல்லாமே 'சொத்தைக் கத்தரிக்காய்கள்'தான், இதில் ஓரளவு சுமாராக உள்ளதைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மக்கள் கையில்தான் உள்ளது என்றும், ஆராயாமல் கண்ணை மூடிக் கொண்டு அதிகம் சொத்தையுள்ளதைத் தேர்ந்தெடுத்துப் பின் மூக்கால் அழுது பயனில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சென்னை - 78, சி. பூங்கோதை.

◆ சொந்தத் திறமையின் மூலமாகவே தமிழ் நாட்டுக்காரர்கள் மமுக்கு வந்துவிட முடியும் என்ற ஸ்ரீகாந்தின் நம்பிக்கையான வார்த்தைகள் தெம்பூட்டின!

மயிலாடுதுறை, ஜெ. ரஜினி ராம்கி.

◆ எப்போதோ நடந்த சம்பவத்துக்கு இப்போது இ. காங்கிரஸ், மக்களிடம் மன்னிப்புக் கேட்பது பச்சை சந்தர்ப்பவாதம்! அவர்கள் கேட்ட 'ஸாரி'க்குப் பதிலடியாக, மக்களும் 'வோட்டு இல்லை, ஸாரி' என்று சொல்லும் கார்ட்டூன் இருக்கிறதே, நெத்தியடி!

பெங்களூர் - 38, கே. விஸ்வநாத்.


◆ அப்பழுக்கில்லாத கடமை உணர்வுடனும் உண்மையான நாட்டுப்பற்றுடனும் செயலாற்றும், ஓர் உயர் அதிகாரியின் மனைவியான திருமதி கலா கார்த்திகேயன் தம் கணவரின் பணிகளுக்கு எந்தெந்த வகையில் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்கிறார்.

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

◆ "ராஜீவ் கொலை - நீதி மன்றத் தீர்ப்பு" தலையங்கம் யதார்த்தமான, உண்மைகள் வெளிப்படும்படியாக, அருமையாக எழுதப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தியைக் கொலை செய்யத் தூண்டியதே கருணாநிதிதான் என்ற ரீதியில், பொய்ப் பிரசாரம் செய்து வரும் ஜெயலலிதா, புலிகளின் ஆதரவாளர்களான ம.தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு கூட்டணி அமைத்திருப்பதை எல்லாரும் சந்தர்ப்பவாதக் கூட்டணி என்று சொல்லி வருகின்றனர். ஆனால் தாங்கள் மட்டும்தான் அதைத் தேசவிரோதக் கூட்டணி என்று சரியான விமர்சனம் செய்துள்ளீர்கள்!

கோவை - 6, என். சிவானந்தம்.

வட்டமேஜை



<u>இராணுவ தளவாடம் வாங்கியதில்,</u>

<u>பங்குச் சந்தை வர்த்தகத்தில்,</u>

<u>சர்க்கரை - உரம் இறக்குமதியில்,</u>

<u>டெலிபோன் லைசென்ஸ் வழங்கியதில்,</u>

<u>ஹவாலா விவகாரத்தில் ...</u>

இப்படி எதிலும் ஊழல் இல்லை ! இல்லவே இல்லை !!

நேர்மையான நிர்வாகம் !
தூய்மையான ஆட்சி !
மீண்டும் மத்தியில் தொடர்ந்திட

ஆதரிப்பீர் உதயசூரியன்

தமிழ் மாநில காங்கிரஸ்

இந்திய கம்யூனிஸ்ட்

நல்லாட்சி தொடர வழி வகுப்பீர் ! லஞ்ச லாவண்ய மதவெறிக் கூட்டணியை முறியடிப்பீர் !!

DMK/3/T

வெளியீடு : திமுக. தலைமை நிலையம், அண்ணா அறிவாலயம், சென்னை.

ஜெயித்த பிறகும் தொகுதிக்கு வருவேன்!

—சரத்குமார்

அ.இ.அ.தி.மு.க. திருநெல்வேலியில் மாநாடு நடத்தி, அந்தப் பகுதியை ஒரு கலக்குக் கலக்கி ஓய்ந்த பின்னர், "இந்த முறை தி.மு.க.வுக்கு ரொம்பக் கஷ்டம்தாம்பா!" என்று பொது மக்களிடையே பேச்சு இருந்தது. போதாததற்கு, விலைவாசிப் பிரச்னை, சட்டம் - ஒழுங்கு என்று ஆளும் அரசுக்கு எதிரான சூழலே மேலோங்கி நிற்கிறது என்கிற நிலை. தவிர இந்தப் பகுதியில், இரு வகுப்பாரிடையே ஏற்பட்ட மோதல்களினால் உண்டான மனக்கசப்பு தி.மு.க.வுக்கு எதிராகத் திரும்பும் என்கிற நிலை!

இப்படிப்பட்ட ஓர் ஆதரவற்ற நிலையை அடியோடு மாற்றுமளவுக்கு, திருநெல்வேலித் தொகுதிக்கு வேட்பாளரைப் போட்டிருக்கிறார் கலைஞர். சினிமா உலகத்தைப் பொறுத்தவரை இன்று முன்னணியில் இருப்பவர். தவிர, திருநெல்வேலி தொகுதியைச் சேர்ந்தவர். இந்தப் பகுதியில் உள்ள பெரும்பான்மை வகுப்பான நாடார் இனத்தைச் சேர்ந்தவர். தினகரன் கே.பி.கே.யின் மைத்துனர். அப்புறம் கேட்பானேன்!



சென்ற தேர்தலில் இங்கு போட்டியிட்டு வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் சிவப்பிரகாசம் ஒரு லட்சத்திற்கும் சற்று கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். நெல்லையில் நடந்த கட்சி ஊழியர் கூட்டத்தில், "சென்ற தேர்தலில் நமக்காகப் பிரசாரம் செய்த சரத்குமாருக்கு நன்றி செலுத்தும்விதமாக இந்த முறை அவரை ஐந்து லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்!" என்று அமைச்சர் ஆலடி அருணா பேசினார். இந்த அளவுக்கு இல்லையென்றாலும், இந்த முறை நிச்சயமாக வாக்கு வித்தியாசம் அதிகரிக்கக்கூடும்!

காரணம், அப்படிப்பட்ட ஒரு 'வீக்'கான வேட்பாளரை அ.தி.மு.க. சார்பில் நிறுத்தியிருக்கிறார் ஜெயலலிதா. ஏற்கெனவே, ஒருமுறை வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் கடம்பூர் ஜனார்த்தனத்தைப் பற்றி தொகுதியில் நல்ல பெயர் இல்லை என்பது முக்கிய காரணம். வயதான இவர் ஜெ. காலில் விழுந்ததை இன்னமும் பலரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை என்பது இன்னொருபுறம்.

இந்தத் தொகுதியில் ம.தி.மு.க.வுக்கு என்று தனிப்பட்ட முறையில் செல்வாக்கு

உண்டு. அந்த அடிப்படையிலும் பா.ஜ.க. செல்வாக்கு காரணமாகவும் அரசுக்கு எதிரான மக்களின் மனோபாவம் காரணமாகவும், ஓரளவு வோட்டுக்கள் விழலாமே தவிர, கடம்பூரைப் பார்த்து யாரும் வோட்டுப் போட மாட்டார்கள் என்கிறார்கள் மக்கள்.

கடம்பூரைத் தவிர, பெயர் சொன்னால் தெரியுமளவுக்கு இருக்கும் மற்றொரு வேட்பாளர் திருநாவுக்கரசு கட்சிக்காரரான ஜி.ஆர். எட்மண்ட். மண்ணின் மைந்தர் இவர். காங்கிரஸ் ஆதரவு இருந்தும், கைச் சின்னம் கிடைக்காத நிலையில் மாங்கனி சின்னத்தில் போட்டியிடுகிறார். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த அனுபவம் உண்டு. இவருக்குள்ள ஒரே பலம் எம்.ஜி.ஆர். – சோனியா படத்தைப் போட்டு வோட்டு கேட்பதுதான். "எனக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது" என்று நம்மிடம் சொன்னார் எட்மண்ட். ஆனாலும் இவரது செல்வாக்கு வெற்றி பெறுகிற அளவுக்குத் துளியும் இல்லை என்பதே நிதர்சனம்.



• ஆலடி அருணா



• ஜி.ஆர். எட்மண்ட்



• கடம்பூர் ஜனார்த்தனம்

இருந்தாலும் எந்தவிதமான அலட்சியத்துக்கும் இடம்கொடுக்காமல் தி.மு.க. களத்தில் நிற்கிறது. "விலைவாசி ஏற்றம் எல்லாம் ஒரு பிரச்னையேயில்லை. காய்கறிகள் விலை அவ்வப்போது ஏறும், இறங்கும். தி.மு.க. ஆட்சியில் பருப்பு, எண்ணெய் போன்றவற்றின் விலை குறைந்து இருக்கிறதே... ஊழலை எதிர்ப்போம் என்ற பி.ஜே.பி., ஊழல் நாயகியுடன் சேர்ந்து கொண்டதால் அதன் கொஞ்ச நஞ்ச செல்வாக்கும் அடிபட்டுப் போய்விட்டது. 'என்னை ஜெயிலில் போட்டு விட்டார்கள்' என்று அனுதாபத்தை பெறப் பார்க்கிறார் ஜெயலலிதா. ஆனாலும் அதில் தோல்விதான் கிடைக்கும். முன் ஜாமீனை நிராகரித்த நீதிபதி சிவப்பா, ஜெயலலிதா மீது உள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை இருக்கிறது என்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் ஜெ. கைது செய்யப்பட்டார். மக்களை ஏமாற்றி திசை திருப்பி வோட்டைப் பறிக்க முடியாது!" என்று அடித்துச் சொன்னார் அமைச்சர் ஆலடி அருணா. சமீபத்தில் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டபோதும், உற்சாகமாகக் களத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறார் அருணா.

தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பெரியசாமி தம் மகள் கீதா ஜீவனுக்கு இந்தத் தொகுதியைக் கேட்டார். அதற்கு மாறாக சரத்குமாரைப் போட்டவுடன் பெரியசாமி எந்த முணுமுணுப்பும் காட்டாமல் உழைத்துக்



• தேர்தல் பிரசாரத்தைத் துவங்கும் சரத்...

கொண்டிருக்கிறார். இந்த பாராளுமன்றத் தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் நான்கு தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கின்றன. தொகுதியில் லட்சத்திற்கும் அதிகமான சிறுபான்மை சமூகத்தின் வோட்டுக்கள் உண்டு. அவை தி.மு.க.வுக்கே விழும் என்பதில் சந்தேகமில்லை. சரத்குமார் சினிமா நடிகராகவும் இருப்பதால் கூடுதல் பலம் பெற்று இருக்கிறார். சென்னையில் மொர்கன்டைல் வங்கிப் பேரணியில் நடந்த தடியடி காரணமாக நாடார் இளைஞர்கள் கொஞ்சம் கடுப்புடன் இருக்கிறார்கள். இப்போதைக்கு நிலைமை இப்படி இருந்தாலும் தேர்தல் நெருங்கும்போது சரத்துக்கு ஆதரவாக மாறி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரொம்பவும் நம்பிக்கையோடு களத்தில் நிற்கும் சரத்தை ஆர்யாஸ் ஹோட்டலில் சந்தித்தோம். "சென்ற தேர்தலின் போது செய்த பிரசாரம், அரசியல்ரீதியாக என்ட்ரி ஆவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது என்று சொல்லலாம். என்னைப் பொறுத்தவரை நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் அலுவலகம் அமைத்து ஆட்களைப் போட்டு மனுக்கள் பெறுவேன். வேலை வாய்ப்புக்களை உருவாக்கப் பாடுபடுவேன். இந்தப் பகுதியில் சமூக அமைதிக்குப் பாடுபடுவேன். அதை என்னால் செய்து காட்ட முடியும்" என்று சொன்னார் சரத்.

"சினிமாவில பிஸியாக இருக்கும் நீங்கள் இப்படியெல்லாம் செய்வது சாத்தியம்தானா?"

"நிச்சயமாக முடியும். இவற்றையெல்லாம் நான் வெறும் வார்த்தைக்காகச் சொல்லவில்லை. தேர்தலில் நான் வெற்றி பெற்ற பிறகு சிறிது காலம் கழித்து மறுபடியும் என் தொகுதிக்கு வந்து சுற்றிப் பாருங்கள். அப்படிப் பார்க்கிற நீங்கள் என்னைப் பாராட்டித்தான் எழுதியாக வேண்டும். அந்த அளவுக்கு தொகுதிப் பணிகளில் நான் கவனம் செலுத்திக் கொண்டிருப்பேன்!" என்று உறுதியாகச் சொன்னார் சரத்!

கோடம்பாக்கத்தில் புதிய கூட்டணிகள்!



மூண்டாசுக் கவிஞனாய் வேஷம் போட்டிருப்பது யார் தெரிகிறதா? ஆமாம்; அரவிந்த சாமியேதான். 'எஞ்ஜினியர்' என்னும் படத்துக்காகத்தான் இந்த வேஷம். வேஷம் என்று கூடச் சொல்ல முடியாது. எஞ்ஜினியரில் எஞ்ஜினியராக வரும் அரவிந்தசாமி, கலா பூர்வமான ஒரு கவிஞனும் கூட!

டைரக்டர் ஷங்கரிடம் உதவியாளராயிருந்த காந்தி கிருஷ்ணா 'எஞ்ஜினியர்' மூலம் டைரக்டராகியிருக்கிறார். எழுத்தாளர் சுஜாதாவுடன் கூட்டணி என்பதால் எல்லாமே கம்ப்யூட்டர் மயம்தான். அதாவது கதை, திட்டமிடுதல்கள் என்று எதுவானாலும் கம்ப்யூட்டர் மூலமாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். பட பூஜைக்கான அழைப்பிதழ்களைக் கூட கம்ப்யூட்டர் மூலம் த்ரீ-டி எபெக்டில் அச்சடித்திருந்தார்கள்.

படத்தைப் பற்றிப் பத்திரி

கைகளில் பரபரப்பாகச் செய்திகள் வரவே, காந்தி கிருஷ்ணாவுக்கு உள்ளூர ஒரு பயம் வந்து விட்டது. விளைவு? பத்திரிகைக்காரர்கள் என்றாலே கம்ப்யூட்டர் வேகத்தில் ஜகா வாங்கிக் கொண்டு விடுகிறார். கதை பற்றி மூச்சு விட மறுக்கிறார். இருந்தாலும் நாம் 'புலனாய்வு' செய்ததில் கிடைத்த கதை இதுதான்!

ஒரு கிராமத்தில் அணைகட்டத் திட்டமிடப்படுகிறது. அணைகட்டும் எஞ்ஜினியராக அரவிந்தசாமி. கிராமத்து மண் மீது உயிரையே வைத்திருக்கும் மாதுரி தீக்ஷித். இருவருக்குமிடையே... அதேதான்!

ஆனாலும் அணைகட்டப்படுவதால் கிராம மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து, மக்கள் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். மாதுரி தீக்ஷித்தும்தான். அதனால் காதலிலும் சங்கடங்கள் வருகின்றன. பிறகு எப்படி எல்லாம் சுபமாகிறது என்பதுதான் கதை!

வைகை அணை கட்டப்பட்டபோது, அதனால் பாதிக்கப்பட்டுக் குடிபெயர்ந்தது கவிஞர் வைரமுத்துவின் குடும்பம். எனவே தமது குடும்பத்தின் சொந்த அனுபவங்களை காந்தி கிருஷ்ணாவுக்குத் தத்தம் செய்திருக்கிறார் வைரமுத்து.

கோடம்பாக்கத்திலும் புதிய கூட்டணிகள் கலக்க ஆரம்பித்து விட்டன!


முதல் படத்திலேயே முட்டிக் கொண்ட ராஜ்கிரணும் கஸ்தூரி ராஜாவும் பழைய கதைகளையெல்லாம் மறந்து விட்டு, கூட்டணி சேர்ந்திருக்கிறார்கள். விளைவு? 'வீரத் தாலாட்டு' ஆரம்பமாகியிருக்கிறது. 'வாசுகி'யின் தோல்வி காரணமாக இனி நமக்கெதற்கு நகரத்து சங்காத்தமெல்லாம் என்று மறுபடியும் கிராமத்துப் பக்கமே வந்து விட்டார் கஸ்தூரி ராஜா. அதனால் வீரத் தாலாட்டைத் தொடர்ந்து, 'என் ஆசை ராசாவே!' இதுவும் கிராமத்துக் கதைதான். "நாட்டுப்புறக் கலைகளுக்கு உயிரூட்டும் படம் இது!" என்று சந்தோஷத்தோடு சொல்கிறார், க. ராஜா.

படத்தில் மாபெரும் நட்சத்திரப் பட்டாளமே வருகிறார்கள். தேவராட்டக்காரராக சிவாஜி. அவரது வாரிசாக முரளி. முரளிக்கு ஜோடிகளாக ரோஜா, சுவலட்சுமி. முந்தைய படமான வீரத்தாலாட்டிலும் முரளிதான் நாயகன். ஜோடிகளாக – குஷ்பு, வினிதா!

முரளி என்றாலே இனி இரட்டைக் கதாநாயகிகளைத் தேட வேண்டும் போலிருக்கிறதே!

— மஹந்த்

காதில் விழுந்தவை:



மறுப்பு அறிக்கை விடச் சொன்ன ஜெ!

● குன்னூரில் தமது பொதுக் கூட்டத்துக்கு வந்த வைகோ, தொண்டர்களைப் பார்த்து ஜெ. கடுப்படித்த விவகாரம் ம.தி.மு.க. தொண்டர்களிடையே பெரிய கசமுசாவைத் தோற்றுவித்திருக்கிறது. பொதுவாகவே சன் தொலைக்காட்சி ஜெ.யை கவர் செய்வதில்லை. ஏ.என்.ஐ என்கிற தனியார் ஏஜென்ஸியிடம்தான் ஜெ. சம்பந்தப்பட்ட விஷயங்களின் படக்காட்சியினை சன் வாங்கிக் கொள்ளும். அந்தக் குறிப்பிட்ட காட்சியை ஏ.என்.ஐ. எடுக்க வில்லையாம். குன்னூர் கல்யாண வீடியோக்காரர் ஒருவர் எடுத்ததாம். இந்த விஷயம் தெரிவதற்குள் ஏ.என்.ஐ.க்கு அ.தி.மு.க. பிரமுகர் களிடமிருந்து ஏகக் குடைச்சல்!

● ம.தி.மு.க. விவகாரத்திற்கு வருவோம். "வாழ்ப்பாடியும், கோவிந்தசார்யாவும் அ.தி.மு.க.வுடன் உள்ள கூட்டு பற்றி கமெண்ட் சொன்னதற்கு வெகுண்டெழுந்து, மறுநாளே மறுப்பறிக்கை விடச் சொன்ன ஜெயலலிதா, எங்கள் தொண்டர்களையும் தலைவர்களையும் அவமானப்படுத்தியதற்கு உடனே மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையேல் எங்கே அவரது காலை வாற வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்!" என்று பொரிந்து தள்ளுகிறார் 'தாயகம்' பிரமுகர் ஒருவர். ஜெ.வுக்குப் பாவம், நாக்கிலே ஞாயிறுக்கு முந்தைய நாள் போலிருக்கிறது!

● ம.தி.மு.க. செய்தித் தொடர்பாளர் ராதாகிருஷ்ணன் வடசென்னை தொகுதி தமக்கு ஒதுக்கப்படும் என்று எதிர்பார்த்து ஏமாந்தார். மனிதர் இப்போது பட்டும் படாமல் தேர்தல் வேலைகளிலிருந்து ஒதுங்கி இருக்கிறார். ம.தி.மு.க. தலைமை நிலையத்தில் விசாரித்தால் சிவகாசியில் இருக்கிறார் என்றும் சிவகாசியில் விசாரித்தால் 'நாளை சென்னையிலிருந்து வருகிறார்' என்றும் சொல்கிறார்களாம்.

"தேர்தலுக்கு பிறகு நான் அவரைச் சரி செய்து கொள்கிறேன்; ஒன்றும் பிரச்னையில்லை" என்று வைகோ சொல்கிறாராம். இதற்கிடையில் இந்தச் சூழ்நிலையைத் தெரிந்து கொண்டு அறிவாலயப் பிரமுகர்கள் ராதாகிருஷ்ணனுக்குத் தூண்டில் போடுகிறார்களாம். ஆனால் ராதாகிருஷ்ணனோ தமது புது வீட்டுக்குக் குடிபோவதில் குறியாயிருக்கிறார்.

– தில்லப்பா

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

பொது வார்டிலிருந்து தீவிர சிகிச்சைப் பிரிவை நோக்கி மெதுவாகத் தள்ளாடி நடந்தபடி போனாள் நர்ஸ் கருணா. இரவு ஒரு மணி இருக்கலாம். உலகமே ஆழ்ந்து உறங்கும் வேளை. அவளுடைய மனமும் செயலோட்டமும் விழித்திருந்தன.


அவள் நைட் டியூட்டி பார்க்கும் நர்ஸ். மற்றவர்களைக் காட்டிலும் கொஞ்சம் சிக்கலான வேலை. டாக்டர் தூங்கலாம். அட்டெண்டண்ட் கண்ணயரலாம். ஆனால் அவளால் ஒரு கணம் கூடத் தூங்க முடியாது. நோயாளி கண்ணயர்ந்திருப்பது தூக்கமா, மயக்கமா, உயிர் அடங்கும் நிலையா என்பது அவளுக்குத் தெரிய வேண்டும். அதுவும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அந்தக் கடமை ரொம்ப முக்கியமானது.

யூனிட்டின் வாசலில் நுழையும் போது அவசரக்குரல் அவளைச் சுண்டி இழுத்தது...

"கருணா! உடனே வா. பத்தாம் நம்பர் பெட் பேஷண்டுக்கு நினைவு தவறிக் கொண்டிருக்கிறது. நாடித்துடிப்பு அடங்கிக் கொண்டிருக்கிறது. டாக்டர் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார் –"

அவள் போனபோது இருவர் அந்த வயதான பெண்மணியின் மார்பில் ஓங்கித் தட்டிக் கொண்டிருந்தார்கள். அட்டெண்டண்ட் உள்ளங்கையைத் தேய்த்து விட்டுக் கொண்டிருந்தான். டாக்டர் அந்தப் பெண்மணியின் மேல் குனிந்து கொண்டிருந்தார்.

அந்த முகத்தில் உயிரோட்டம் இல்லை. கண்ணிமைகள் மூடிக்கிடந்தன. மூக்கு பளபளத்தது. தொய்ந்து போன உடல். முகத்தில் இரத்தம் சுண்டிப் போன களை. இரத்த ஓட்டம், உடல் அசைவு, உயிர்த்துடிப்பு எல்லாமே அடங்கி ஒடுங்கி விட்டது




பிரிவுக்கும் பொருள் உண்டு!

போன்ற ஒரு சாம்பல் நிலை.

உடம்பைத் தூக்கிப் போட்டு, ஓங்கித் தட்டி, பலமாக அசைத்து, ஒட்டத்தை உயிர்ப்பிக்க முயன்றவையெல்லாம் முடிந்து போன நிலையில், டாக்டர் 'ஸ்டெதோ'வை வைத்துப் பார்த்து, உதட்டைப் பிதுக்கிய வண்ணம் நகர்ந்தார்.

''கருணா. இனிமேல் நீ பார்த்துக் கொள் –''

அட்டெண்டண்ட் பிராணவாயுக்குழாய், இதயத்துடிப்பு அளவுமானி இணைப்பு, குளு கோஸ் சொட்டும் குழாய் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் கழற்ற ஆரம்பித்தான்.



கருணா துணியை இழுத்துச் சுற்றி, உடலைத் தழுவியது போலப் போர்த்திக் கட்டினாள்.

நவமணி அம்மாளுக்கு இனித் தனிப் பெயர் இல்லை.

கட்டிலுக்கு அருகில் ஒரு டப்பாயில் சிறு மருந்துக் கடையே இருந்தது. விதம் விதமான கலர் சைஸ் சீசாக்களில் மாத்திரைகள், மருந்து கேப்ஸ்யூல்கள், ஊசி போடும் கருவி, டானிக்குகள், குளுகோஸ் பாட்டில், பெரிய சைஸ் ஊட்டச் சத்துபானம், கூட்டுக்கு வெளியே பாதி திறந்த நவமணியின் மூக்குக் கண்ணாடி...

வார்டு பாயைக் கூப்பிட்டு எல்லாவற்றையும் கூடையில் அடுக்கச் சொன்னாள். கட்டிலைச் சுற்றித் தொங்கிய படுதாவைக் கீழே இழுத்துவிட்டு, படுக்கைக்கு அருகில் செருகினாள். பக்கத்துப் படுக்கை நோயாளிகளுக்குத் தெரியாமல், தொந்தரவில்லாமல், செய்யும் மௌனமான கடைசி நேர நடவடிக்கைகள்...

கருணாவின் கடமைகள் முடிந்தன. நேரத்தை ரிஜிஸ்தரில் பதிவு செய்யப் போனாள். மணிக்கட்டில் ரேடியம் எண்கள் ஒளிவிட்டன. பன்னிரண்டு மணியுடன் இருபதாம் தேதி முடிந்து விட்டது. இது இருபத்து ஒன்றாம் தேதி. மணி ஒன்று - ஐம்பத்தேழு...

இந்த வார அதிர்ஷ்டசாலி!

போட்டி - 4-ல் வெற்றி பெற்று, பட்டுப் புடைவையைத் தட்டிச் செல்லும் அதிர்ஷ்டசாலி வாசகர்: கி. சீதாராமன், 283-டி, காந்திபுரம், ஆத்தூர் (அஞ்சல்), சேலம் மாவட்டம் - 636 102.

குறிப்புகளை எழுதிவிட்டு, ரிஜிஸ்தரின் மேலேயே தலையைக் கவிழ்த்துக் குனிந்து கொண்டாள். அவளுடைய பன்னிரண்டு வருட அனுபவத்தில் மாதம் ஓரிரு தடவைகள் தவறாமல் நிகழும் நிகழ்ச்சி அது. பிரசவ வார்டில் புது உயிர்த்துடிப்பு சகஜம். சிக்கலான இந்தத் தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிர்த்துடிப்பு அடங்குவதுதான் அவ்வப்போது நேரிடுவது...

இமை ஓரம் நீர் அரும்பிக் கரை கட்டியது. கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டாள். நவமணி அவளுக்கு அம்மா மாதிரி. அவள் முதல்நாள் குனிந்து முதுகைத் துடைத்துப் பவுடர் போட்டபோது, ஆயாசம் தோய்ந்த குரலில் நவமணி சொன்னது நினைவுக்கு வருகிறது -

"நீ என் பெண்ணைப் போல இருக்கிறாய். இன்னும் எத்தனை நாளுக்கு உங்களுக்கெல்லாம் தொந்தரவு கொடுக்கப் போறேனோ-"

இரண்டு மூக்கிலும் குழாயைச் செருகிய நிலையில், வாய்ப் பேச்சு முழுமையாக வராமல், திணறியபடி பேசினாள் நவமணி. இப்போது அதுவும் அடங்கிவிட்டது.

அவஸ்தைகள் அடங்கி, உடலினின்று பிரக்ஞை விடுதலை பெறும் வேளையை, சுழன்று சுழன்று மார்பின் மேல் இறங்கி, சட்டென்று உயர்ந்து ஒரே நிலையாய் ஓயும் உயிர்த்துடிப்பை, அவள் கண்கொட்டாமல் பார்த்தபடி நின்றதுண்டு. அது உணர்ச்சிகள் குத்திட்டு நிலைக்கும் வேளை. அது வரையில் மென்மையாகத்தொட்டு, வலிக்குமா என்று பார்த்துப் பார்த்து செய்த நயம் சட்டென்று அரை நொடியில் இறுக்கமாக மாறிவிடும்.

மேட்ரனிடம் அதைச் சொல்லும் வேளையில் அவளுடைய கண்கள் கலங்கும். கண்ணீர் பொங்கி கன்னங்கள் நனையும். கைக்குட்டையால் மூடி அழுகையை அடக்கிக் கொள்வாள்.

"ஓ! கருணா - என்ன இது குழந்தை மாதிரி? உன்னுடைய வேலையின் அங்கம் இது. உன் கைபட்டு உடல் தேறி உயிர்த் துடிப்பு சீரடைவதைப் போல, இப்படி அடங்கி, ஓய்வதும் இயற்கைதான். இரண்டையுமே நீ ஒண்ணா பார்க்கக் கத்துக்கணும். இந்த மாதிரி எல்லாம் கூடாது!"

மேட்ரனின் கைவிரல்கள் அவள் தோள் மீது பதியும். கை அவளை லேசாக இழுத்து அணைத்து விலக்கிவிடும். துயரத்தை நிரந்தரமாகச் செதுக்கி விட்டது போல, உதட்டின் கடையில் லேசான கோடு அழுந்த கருணா முகம் குனிவாள். மேட்ரன் அவளுடைய தலையைப் பரிவுடன் தடவிக் கொடுத்து விட்டு நகர்வாள்.

உயிரின் பிரிவில் அவள் மனம் நெகிழும் போதெல்லாம் நடைபெறும் நிழச்சி அது. அந்த வேளையில் அவள் நர்ஸ் அல்ல - மேட்ரனின் குழந்தை....

கருணா நர்ஸ் பயிற்சி முடிந்து அங்கே வேலைக்குச் சேர்ந்தபோது அவளுக்கு வயது இருபத்தொன்று. பெற்றோர் பெயர் தெரியாது. அவளை வளர்த்து ஆளாக்கிய அனாதை ஆசிரமம் அவளை அங்கே கொண்டு வந்து வேரூன்ற வைத்து விலகிக் கொண்டது. மேட்ரன் ஜெஸ்ஸிகா அவளைக் குழந்தையாகவே ஏற்றுக் கொண்டாள்.

கருணா இளமை ததும்பும் அழகி அல்ல. பச்சை நரம்போடு மஞ்சள் பழுப்பு மேனி. முதுகில் லேசாக ஒருவில். கண் பார்வையில் ஒரு குழந்தைத்தனம். அவள் மணந்து கணவனுடன் வாழ்க்கை நடத்தப் போகிறாளா? என்றேனும் ஒருநாள் குழந்தையைக் கையில் ஏந்தி, மார்பில் அதன் வாய் அழுந்திச் சுவைக்க, தாய்மையைப் பெருமிதத்துடன் ஏற்கப் போகிறாளா?

அப்படியெல்லாம் அவள் கனவுகள் கூடக் காண்பதில்லை. அவளுக்குத் தெரியும் - இந்தக் கடமைதான் அவளுக்குக் கடைசி வரையில் வாய்க்கப் போவது என்று.

அவள் எதன் மீதும் படர நினைக்காத கொடி. அதனால்தானோ என்னவோ, அவளுடைய மனம் மட்டும் நோயாளியின் உயிர்த்துடிப்புடன் கலந்து அலை பாயும்; அவர்கள் குணமடைந்து போகும் போது மகிழ்ச்சி பொங்கும். உயிர் நழுவிய வேளையில் மௌனமாகப் புலம்பும்.

ஒரு வாரத்துக்கு முன் அவள் பொறுப்பில் வந்து சேர்ந்த இளம் தாயின் நிலைமை சற்று வித்தியாசமானது. பத்துமாதங்கள் முழுமையாகச் சுமந்து பெற்ற குழந்தை, மடி நழுவி விழுந்தவுடனேயே உயிரை விட்டு

விட்டது. குழந்தையைப் பறிகொடுத்த ஆற்றாமை ஒருபுறம். பச்சை மண்ணாக இளகிய உடலின் தவிப்பு மறுபுறம். ஜுரம் விறுவிறு என்று ஏறி ஜன்னிகண்டு விட்டது.

பக்கத்திலேயே அமர்ந்து ஜுர வேகத்துக்குச் சார்ட் எடுத்து, ஊசி ஒன்று போட்டு, அவள் கண்விழிக்கும் வேளையில் நெற்றிப் பொட்டைத் தடவிக் கொடுத்து, உள்ளங்கை சூடேறத் தேய்த்து விட்டு –

குழந்தையை இழந்தவளைக் குழந்தையைப் போலவே கவனித்துக் கொண்டாள். ஓர் உயிர் மறைந்த வேளையில் இன்னொரு உயிரைப் போற்றிக் காப்பாற்றத் துடிக்கும் வேகம். எங்கோ பிரசவ வார்டில் குழந்தை அழும் ஒலி கேட்கும்போது அவளுடைய கண் நிரம்பிக் கலங்கும். கருணா இமை ஓரத்தைக் கைக்குட்டை நுனியால் துடைத்து விடுவாள்.

"தைரியமா இரும்மா. மனசு விட்டுப் போகக் கூடாது. உடம்பு தேறினால், இன்னொரு வருஷத்திலே இன்னொன்று. அப்புறம் இது மறந்து போகும். நானே குழந்தையைக் கையிலே எடுத்துக் கொடுப்பேன் பாரு –"

நூற்றுக் கிழவியைப் போலக் கருணா பேசும் நயத்தை அவள் கண்கொட்டாமல் பார்ப்பாள்.

"நெசம்மாவா?" என்பாள் கண்ணகல.

"ஆமாம்."

"உனக்கு எப்படித் தெரியும். இந்த அனுபவம் எல்லாம்?"

அவள் கேட்கக் கருணா விழிப்பாள். உண்மைதான். கருணாவிற்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? கணவனின் அணைப்பையும், இன்ப முகட்டில் உயிர் ஊறும் இரகசியத்தையும், தாய்மையின் பெருமையையும் உணர்ந்து அனுபவித்தவளா அவள்? உயிர்கள் கலந்து உயிரை ஊறவைக்கும் இன்பத்தை அறிந்தவளா அவள்?

உடல் குணமாகிப் போகும்போது அவர்களைக் கையில் பூங்கொத்து கொடுத்து வாழ்த்துச் சொல்லி அனுப்பப் பாதிரியார் வருவார். குழந்தையுடன் போகும் தாய்மார்களுக்குக் குழந்தைக்கான பரிசுப் பொருளும் கிடைக்கும். அந்தப் பெண்மணிக்குக் கிடைத்தது வெறும் பூங்கொத்துதான்...

கடைசியாகப் புறப்பட்டுப் போகும்போது அவள் திரும்பித் திரும்பி அந்த வெறுமையான படுக்கையைப் பார்த்துக் கொண்டே போன பார்வை? அவள் பேசவே இல்லை; கண்ணீர் கூடச் சிந்தவில்லை. ஆயினும் அந்தப் பார்வையில் ஆயிரம் கேள்விகள் குமுறின.

அன்று அவளுடைய மேற்பார்வையில் இருந்த எட்டாம் நம்பர் பெட்டிற்கு வந்து சேர்ந்தது அந்த விபத்து கேஸ். சாலையில் வேகமாகப் போய்க் கொண்டிருந்த லாரி பின்னால் இடிக்க, மோட்டார் சைக்கிள் எகிறிப் பறந்து, அவன் மல்லாந்த பூச்சியாகச் சாலையில் நெளிந்து கிடக்க, மூச்சுப் பேச்சில்லாமல் கொண்டு வந்து போட்டார்கள். சுத்தமாக நினைவே இல்லை.

மூச்சு, குளுகோஸ் சக்தி, இரத்தம் எல்லாமே இயந்திர உதவியுடன் அளிக்கப் பட்டதுதான். இஞ்சக்ஷன் போடும் போது விரல் கூட அசையாது. அவன் நகமெல்லாம் சதையில் அழுந்துகிறாற் போலப் பற்றி உள்ளங்கையைத் தேய்த்துவிடும் போதும்

"வரிசையா 'காதல் அரண்மனை... காதல் சாம்ராஜ்யம்... காதல் பிரதேசம்... காதல் பூமி...'ன்னு காதல் சீசன் படம் எடுத்து நொந்து நொடிஞ்சு போனவரு கடைசி முயற்சியா இப்ப ஏதோ படம் எடுக்கிறாமே.. என்ன படம்?!"

"காதல் குடிசை...!"

— கே.ஜி.எஸ். கோவிந்தன்




எந்த அசைவும் இராது.

மூன்று நாட்கள்...

அவளையுமறியாமல் அந்த நடுத்தர வயது வாலிபன் மீது அவளுக்கு ஒரு பற்று வந்து விட்டது. அவன் நடப்பதை, பேசுவதை, அவளை கவனிப்பதை, கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள். திகைப்பும் வியப்பும் நிறைந்த பூரிப்பாக ஓர் உணர்வு அவளுள் நிறைந்து ததும்பிற்று.

அவனுடைய சகோதரியும் அவளுடைய கணவரும் வந்து ஒரு நாள் கூடவே இருந்தார்கள். அவனுக்கு வேறு யாரும் இல்லை. ராணுவத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்ததால், திருமணம் செய்து கொள்ளவும் ஆசைப்படவில்லை. விடுமுறையில் ஊருக்கு



"ஆனாலும் அந்த வேட்பாளருக்குத் தைரியம் அதிகம்தான்!"

"அப்படியா?!"

"பாரேன்; வோட்டுக் கேட்க வந்தவரு, 'ஊழல் செய்யறதுக்கு எனக்கும் ஒரு சான்ஸ் கொடுங்கள்'னு ஒப்பன்னா கேட்கிறாரே!"

— வி. ரெங்கநாதன்

வந்த இடத்தில் இப்படி ஒரு விபத்து...

"அவனுக்கென்று யாருமே இல்லை நர்ஸ். அவனைக் கவனித்துக் கொள்ளவும் யாருமே இல்லை. இங்கே இப்போது நீ அவனைக் கவனித்துக் கொள்கிற அளவுக்குக் கூட, அவனை அருமையாகப் பார்த்துக் கொள்பவர்கள் யாருமே இல்லை. இப்போது இங்கே இப்படிக் கிடக்கிறானே என்று என் மனசு அடித்துக் கொள்கிறது. ஆனால் அவனுக்காக ஏங்கப் போகிறவர்கள் யார்?"

அண்ணனைப் பற்றிச் சொல்லி அவள் புலம்பும்போது, அவளுடைய மனமும் மௌனமாகப் புலம்பும். ஒருவேளை அவன் பிழைத்து எழுந்து விட்டால்? எப்படியும் வாழ்க்கையில் ஒரு துணை அவசியம் என்று அவனுக்குத் தோன்றிவிட்டால்? அவனை அவள் கவனித்துக் கொண்ட பக்குவத்தை, அவனுடைய தங்கையே எடுத்துச் சொல்லி, அவனுடைய மனம் இளகிவிட்டால்?

இரவு நேரத்தில் கண்கொட்டாமல் விழித்தபடி, அவனுடைய படுக்கையின் அருகில் அமர்ந்து அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்த மாதிரி எண்ணங்களும் தோன்றும்.

அன்று காலையிலிருந்தே அந்தப் படுக்கைக்கு டாக்டர்கள் மாறிமாறி வந்து கொண்டிருந்தார்கள். தலைமை டாக்டர் கடைசியாக வந்து ஏதோ ஒரு குறிப்பை எழுதி வைத்து விட்டுப் போனார். ஏதோ ஒரு முக்கியமான காரியத்துக்கு எல்லோரும் தயாராகிக் கொண்டிருப்பதைப் போல, பார்வையிலும் பேச்சிலும் ஓர் அவசரத்துடிப்பு...

அவளுக்கு ஏதோ புரிவது போல இருந்தது. படுக்கையின் அருகில் வந்து அவனுடைய தங்கை நின்ற போது, தோளில் கையை வைத்து லேசாக அழுத்திச் சமாதானப்படுத்த முயன்றாள். ஒழித்துப் பெருக்கித் துடைத்து வைத்தது போல இருந்த அவளுடைய முகத்தில் திடீரென உணர்வுகள் பொங்கின. கன்னங்களில் 'புலுபுலு' வென்று கண்ணீர் மாலைகள் வழிந்தன.

"ராபர்ட்டின் வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லைன்னு நினைச்சேன் சிஸ்டர்! இப்போ அதற்கு அர்த்தம் இருக்குதுன்னு புரிஞ்சுக்கிட்டேன். இப்பத்தான் கையெழுத்து போட்டுச் சம்மதம் கொடுத்தேன். இனிமேல் அவனால் பிழைக்க முடியாதுன்னு தெரிஞ்ச பிறகு, டாக்டர் அவனுடைய உறுப்புகளை முடிந்தவரையில் எடுத்துப் பிறருக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதி கேட்டார். நான் 'சரி'ன்னு கையெழுத்துப் போட்டுட்டேன்."

மேலே பேச முடியாமல் அவள் குமுறி அழுது, கைக்குட்டையால் வாயை மூடிக் கொண்டு வெளியே போய் விட்டாள்.

காலியான 'பெட்' சரி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. பெட்ஷீட்டை மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

குறிப்புகளைப் பதிவு செய்து கொண்டு கருணா கிளம்பினாள். கதவை மெதுவாக மூடியபடி மேட்ரனின் அறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள். மென்மையான சத்தம் போடாத கால் செருப்பின் அடிகளில், அவளுடைய கால்களின் அழுத்தம் அடங்கி மறைந்து கொண்டிருந்து. மேட்ரனின் அறைக்கு நேரே நின்றாள். உள்ளே வர அனுமதி கேட்பது போல ஒரு தயங்கிய பார்வை.

"கம் இன் கருணா! எட்டாம் நம்பர் பெட் கேஸ்தானே?" கருணா குறிப்பை மேஜை மீது வைத்தாள். அவளால் பேச முடியவில்லை. உதடுகள் தடித்து அழுந்தின.

"ஆவ்... கருணா! நீ ரொம்ப இதையெல்லாம் மனசுலே போட்டுக்கிறே. இதை ஒரு ட்யூட்டியாக மட்டும்தான் நீ பார்க்கணும் –"

அவள் பதில் சொல்லாமல் தலையை அசைத்து விட்டு அங்கிருந்து நகர்ந்தாள். இப்போது அவளுக்கு அழுகை வரவில்லை. மனத்தில் ஒரு தவிப்போ, கலக்கமோ இல்லை.

ஏதோ ஒரு மகத்தான நிகழ்ச்சி நேருவதற்கு, அவளும் ஓர் அங்கமாக இருந்து கடமையைச் செய்துவிட்ட உணர்வு, அவளுடைய மனத்தில் பெருமிதமாகப் பூரித்து நின்றது...

பொன்னியின் செல்வன்

பதின்மூன்றாம் அத்தியாயம்

வளர்பிறைச் சந்திரன்

இளவரசிகளின் ரதம் கண்ணுக்கு மறைந்த பிறகு, சோதிடர் வந்தியத் தேவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். தம்முடைய ஆஸ்தான பீடத்தில் அமர்ந்தார். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்த அவ் வாலிபனையும் உட்காரச் சொன்னார். அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"தம்பி! நீ யார்? எங்கே வந்தாய்?" என்று கேட்டார். வந்தியத்தேவன் சிரித்தான்.

"என்னப்பா, சிரிக்கிறாய்?"

"இல்லை, தாங்கள் இவ்வளவு பிரபலமான ஜோதிடர். என்னைக் கேள்வி கேட்கிறீர்களே? நான் யார், எதற்காகத் தங்களிடம் வந்தேன் என்று ஜோதிடத்திலேயே பார்த்துக் கொள்ளக் கூடாதா?"

"ஓகோ! அதற்கென்ன? பார்த்துக் கொள்கிறேன். ஆனால் எனக்கு நானே ஜோசியம் பார்த்துக்



கல்கி கலெக்ஷன்



அமரர் கல்கி

கொண்டால், தட்சிணை யார் கொடுப்பார்கள் என்றுதான் யோசிக்கிறேன்."

வந்தியத்தேவன் புன்னகை செய்துவிட்டு, "ஜோதிடரே! இப்போது இங்கே வந்துவிட்டுப் போனார்களே? அவர்கள் யார்?" என்று கேட்டான்.

"ஓ! அவர்களா? நீ யாரைப் பற்றிக் கேட்கிறாய் என்று எனக்குத் தெரிகிறது. தெரியும் தம்பி, தெரியும்! நீ என் சீடனைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தபோது இங்கே இருந்தார்களே, அவர்களைப் பற்றித்தான் கேட்கிறாய், இல்லையா? ரதத்தில் ஏறிக் கொண்டு, பின்னால் புழுதியைக் கிளப்பிவிட்டுக் கொண்டு போனார்களே, அவர்களைப் பற்றித் தானே?" என்று குடந்தை சோதிடர் சுற்றி வளைத்துக் கேட்டார்.

"ஆமாம், ஆமாம்! அவர்களைப் பற்றித்தான் கேட்டேன்..."

"நன்றாகக் கேள். கேட்க வேண்டாம் என்று யார் சொன்னது? அவர்கள் இரண்டு பேரும் இரண்டு பெண்மணிகள்!"

"அது எனக்கே தெரிந்து போய்விட்டது. ஜோதிடரே! நான் குருடன் இல்லை. ஆண்களையும் பெண்களையும் நான் வித்தியாசம் கண்டு பிடித்து விடுவேன். பெண் வேடம் பூண்ட ஆணாயிருந்தால் கூட எனக்குத் தெரிந்து போய்விடும்."

"பின்னே என்ன கேட்கிறாய்?"...

"பெண்கள் என்றால், அவர்கள் இன்னார், இன்ன ஜாதி..."

"ஓகோ! அதையா கேட்கிறாய்? பெண்களில் பத்மினி, சித்தினி, காந்தர்வி, வித்யாதரி என்பதாக நாலு ஜாதிகள் உண்டு. உனக்குச் சாமுத்திரிகா லட்சண சாஸ்திரத்தில் கொஞ்சம் பயிற்சி இருக்கும் போலிருக்கிறது. அந்த நாலு ஜாதிகளில் இவர்கள் பத்மினி, காந்தர்வி ஜாதிகளைச் சேர்ந்தவர்கள்."

"கடவுளே!...

"ஏன்? அப்பனே!"

"கடவுளை நான் கூப்பிட்டால், நீங்கள் 'ஏன்?' என்று கேட்கிறீர்களே?"

"அதில் என்ன பிசகு? கடவுள் சர்வாந்தர்யாமி என்று நீ கேட்டதில்லையா? பெரியவர்களுடைய சகவாசம் உனக்கு அவ்வளவாகக் கிடையாது போலிருக்கிறது! எனக்குள்ளே இருப்பவரும் கடவுள் தான். உனக்குள்ளே இருப்பவரும் கடவுள் தான். நீ இழுத்துக் கொண்டு உள்ளே வந்தாயே, அந்த என் சீடனுக்குள்ளே இருப்பவரும் கடவுள்தான்..."

"போதும், போதும், நிறுத்துங்கள்."

"இத்தனை நேரம் பேசச் சொன்னதும் கடவுள்தான்; இப்போது நிறுத்தச் சொல்வதும் கடவுள்தான்!"

"ஜோதிடரே! இப்போது இங்கேயிருந்து போனார்களே, அந்தப் பெண்கள் யார், எந்த ஊர், என்ன குலம், என்ன பெயர்,- என்று கேட்டேன். சுற்றி வளைக்காமல் மறுமொழி சொன்னால்..."

"சொன்னால் எனக்கு நீ என்ன தருவாய் அப்பனே!"

"என் வந்தனத்தைத் தருவேன்."

"உன் **வந்தனத்தை** நீயே வைத்துக் கொள். ஏதாவது **பொன்தானம்** கொடுப்பதாயிருந்தால் சொல்லு!"

"பொன்தானம் கொடுத்தால் நிச்சயமாய்ச் சொல்லுவீர்களா?"

"அதுவும் சொல்லக்கூடியதாயிருந்தால்தான் சொல்லுவேன்! தம்பி! இதைக் கேள். ஜோதிடன் வீட்டுக்குப் பலரும் வந்து போவார்கள். ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் சொல்லக் கூடாது. இப்போது போனவர்களைப் பற்றி உன்னிடம் சொல்ல மாட்டேன். உன்னைப் பற்றி வேறு யாராவது கேட்டால் அவர்களுக்கும் உன்னைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேன்."

"ஆகா! ஆழ்வார்க்கடியான் நம்பி தங்களைப் பற்றிச் சொன்னது முற்றும் உண்மைதான்."


"ஆழ்வார்க்கடியாரா? அவர் யார், அப்படி ஒருவர்?"

"தங்களுக்குத் தெரியாதா, என்ன? ரொம்பவும் தங்களைத் தெரிந்தவர்போல் பேசினாரே? ஆழ்வார்க்கடியான் நம்பி என்று கேட்டதேயில்லையா?"

"ஒருவேளை ஆளைத் தெரிந்திருக்கும்; பெயர் ஞாபகம் இராது. கொஞ்சம் அடையாளம் சொல்லு, பார்க்கலாம்!"

"கட்டையாயும் குட்டையாயும் இருப்பார். முன் குடுமி வைத்திருப்பார். இளந்தொந்தியில் வேட்டியை இறுக்கிக் கட்டியிருப்பார். சந்தனத்தைக் குழைத்து உடம்பெல்லாம் கீழிருந்து மேலாக இட்டிருப்பார். சைவர்களைக் கண்டால் சண்டைக்குப் போவார். அத்வைதிகளைக் கண்டால் தடியைத் தூக்குவார். சற்றுமுன்னால் 'நீயும் கடவுள், நானும் கடவுள்' என்றீர்களே, இதை ஆழ்வார்க்கடியான் கேட்டிருந்தால் 'கடவுளைக் கடவுள் தாக்குகிறது!' என்று சொல்லித் தடியினால் அடிக்க வருவார்..."

"தம்பி! நீ சொல்லுவதையெல்லாம்



சேர்த்துப் பார்த்தால் திருமலையப்பனைப் பற்றிச் சொல்லுகிறாய் போலிருக்கிறது..."

"அவருக்கு அப்படி வெவ்வேறு பெயர்கள் உண்டா?"

"ஊருக்கு ஒரு பெயர் வைத்துக் கொள்வார் அந்த வீர வைஷ்ணவர்."

"ஆளுக்குத் தகுந்த வேஷமும் போடுவாராக்கும்!."

"ஆகா! சமயத்துக்குத் தகுந்த வேஷமும் போடுவார்."

"சொல்லுவதில் கொஞ்சம் கற்பனையும் பொய்யும் கலந்திருக்குமோ?"

"முக்காலே மூன்றரை வீசம் பொய்யும் கற்பனையும் இருக்கும். அரை வீசம் உண்மையும் இருக்கலாம்."

"ரொம்பப் பொல்லாத மனிதர் என்று சொல்லுங்கள்!"

"அப்படியும் சொல்லிவிட முடியாது. நல்லவர்க்கு நல்லவர்; பொல்லாதவர்க்குப் பொல்லாதவர்."

"அவருடைய பேச்சை நம்பி ஒன்றும் செய்ய முடியாது."

"நம்புவதும் நம்பாததும் அந்தந்தப் பேச்சைப் பொறுத்திருக்கிறது..."

"உதாரணமாக, தங்களிடம் போய்ச் சோதிடம் கேட்டால் நல்லபடி சொல்லுவீர்கள் என்று அவர் கூறியது..."

"அவர் பேச்சில் அரை வீசம் உண்மையும் இருக்கும் என்றேனே, அந்த அரை வீசத்தில் அது சேர்ந்தது."

"அப்படியானால் எனக்கு ஏதாவது ஜோதிடம், ஆருடம் சொல்லுங்கள். நேரமாகிவிட்டது. எனக்குப் போகவேண்டும், ஐயா!"

"அப்படி அவசரமாக எங்கே போகவேண்டும், அப்பனே!"

"அதையும் தாங்கள் ஜோதிடத்தில் பார்த்துச் சொல்லக் கூடாதா? எங்கே போகவேண்டும், எங்கே போகக் கூடாது, போனால் காரியம் சித்தியாகுமா என்பதைப் பற்றியெல்லாந்தான் தங்களைக் கேட்க வந்தேன்."

"ஜோதிடம், ஆருடம் சொல்வதற்கும் ஏதாவது ஆதாரம் வேண்டும், அப்பனே! ஜாதகம் வேண்டும்; ஜாதகம் இல்லாவிடில், பிறந்தநாள், நட்சத்திரமாவது தெரியவேண்டும்; அதுவும் தெரியாவிடில், ஊரும் பேருமாவது சொல்ல வேண்டும்.

"என் பெயர் வந்தியத்தேவன்!"

"ஆகா! வாணர் குலத்தவனா?"

"ஆமாம்."

'வல்லவரையன் வந்தியத்தேவனா?"

"சாட்சாத் அவனேதான்."

"அப்படிச் சொல்லு, தம்பி! முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா? உன் ஜாதகம் கூட என்னிடம் இருந்ததே! தேடிப் பார்த்தால் கிடைக்கும்."

"ஓஹோ! அது எப்படி?"

"என்னைப் போன்ற ஜோதிடர்களுக்கு வேறு என்ன வேலை? பெரிய வம்சத்தில்

பிறந்த பிள்ளைகள்- பெண்கள் இவர்களுடைய ஜாதகங்களையெல்லாம் சேர்த்து வைத்துக் கொள்வோம்-"

"நான் அப்படியொன்றும் பெரிய வசம்சத்தில் பிறந்தவன் அல்லவே..."

"நன்றாகச் சொன்னாய்! உன்னுடைய குலம் எப்பேர்ப்பட்ட குலம்! வாணர் குலத்தைப் பற்றிக் கவிவாணர்கள் எவ்வளவு கவிகளையெல்லாம் பாடியிருக்கிறார்கள்! ஒருவேளை நீ கேட்டிருக்க மாட்டாய்."

"ஒரு கவிதையைத்தான் சொல்லுங்களேன், கேட்கலாம்."

ஜோதிடர் உடனே பின்வரும் பாடலைச் சொன்னார்:

"வாணன் புகழுரையா
வாயுண்டோ மாகதர்கோன்
வாணன் பெயரெழுதா
மார்புண்டோ-வாணன்
கொடிதாங்கி நில்லாத
கொம்புண்டோ உண்டோ
அடிதாங்கி நில்லா அரசு!"

ஜோதிடர் இசைப்புலவர் அல்லவென்பது அவர் பாடும்போது வெளியாயிற்று. ஆயினும் பாடலைப் பண்ணில் அமைத்து மிக விளக்கமாகவும் உருக்கமாகவும் பாடினார்.

"கவி எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"கவி காதுக்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் என்னுடைய கொடியை ஏதாவது ஒரு மாட்டின் கொம்பில் நானே கட்டி விட்டால்தான் உண்டு. அரசமரத்துக் கிளைமேல் ஏறி நின்றால்தான் அரசு என் அடியைத் தாங்கும். அதுகூடச் சந்தேகம்தான். கனம் தாங்காமல் கிளை முறிந்து என்னையும் கீழே தள்ளினாலும் தள்ளும்!" என்றான் வந்தியத்தேவன்.

"இன்றைக்கு உன் நிலைமை இப்படி; நாளைக்கு எப்படியிருக்கும் என்று யார் கண்டது?" என்றார் ஜோதிடர்.

"தாங்கள் கண்டிருப்பீர்கள் என்று எண்ணியல்லவா வந்தேன்?" என்றான் வல்லவரையன்.

"நான் என்னத்தைக் கண்டேன், தம்பி! எல்லாரையும்போல் நானும் அற்ப ஆயுள் படைத்த மனிதன்தானே? ஆனால் கிரகங்களும் நட்சத்திரங்களும் வருங்கால நிகழ்ச்சிகளைச் சொல்லுகின்றன. அவை சொல்லுவதை நான் சிறிது கண்டறிந்து கேட்பவர்களுக்குச் சொல்கிறேன், அவ்வளவுதான்!"

"கிரஹங்களும் நட்சத்திரங்களும் என் விஷயத்தில் என்ன சொல்கின்றன, ஜோதிடரே?"

"நீ நாளுக்கு நாள் உயர்வாய் என்று சொல்லுகின்றன."

"சரியாகப் போச்சு! இப்போதுள்ள உயரமே அதிகமாயிருக்கிறது. உங்கள் வீட்டில் நுழையும்போது குனிய வேண்டியிருக்கிறது! இன்னும் உயர்ந்து என்ன செய்வது? இப்படியெல்லாம் பொதுவாகச் சொல்லாமல் குறிப்பாக ஏதாவது சொல்லுங்கள்."

"நீ ஏதாவது குறிப்பாகக் கேட்டால், நானும் குறிப்பாகச் சொல்லுவேன்."

"நான் தஞ்சாவூருக்குப் போகிற காரியம் கைகூடுமா? சொல்லுங்கள்.

"நீ தஞ்சாவூருக்கு உன் சொந்தக் காரியமாகப் போகிறதானால் போகிற காரியம் கைகூடும். இப்போது உனக்கு ஜயக் கிரகங்கள் உச்சமாயிருக்கின்றன. பிறருடைய காரியமாகப் போவதாயிருந்தால், அந்த மனிதர்களுடைய ஜாதகத்தைப் பார்த்துச் சொல்ல வேண்டும்!"


வந்தியத்தேவன் தலையை ஆட்டிக் கொண்டு மூக்கின் மேல் விரலை வைத்து, "ஜோதிடரே! தங்களைப் போன்ற சாமர்த்தியசாலியை நான் பார்த்ததேயில்லை!" என்றான்.

"முகஸ்துதி செய்யாதே, தம்பி!" என்றார் ஜோதிடர்.

"இருக்கட்டும். கேட்க வேண்டியதைத் தெளிவாகவே கேட்டு விடுகிறேன். தஞ்சாவூரில் சக்கரவர்த்தியைத் தரிசிக்க விரும்புகிறேன், அது சாத்தியமாகுமா?"

"என்னைவிடப் பெரிய ஜோதிடர்கள் இருவர் தஞ்சாவூரில் இருக்கிறார்கள். அவர்களைத்தான் கேட்கவேண்டும்."

"அவர்கள் யார்?"



"பெரிய பழுவேட்டரையர் ஒருவர்; சின்ன பழுவேட்டரையர் ஒருவர்."

"சக்கரவர்த்தியின் உடல்நிலை மிக மோசமாகியிருப்பதாகச் சொல்கிறார்களே? அது உண்மையா?"

"யாராவது ஏதாவது சொல்லுவார்கள்! சொல்லுவதற்கு என்ன? அதையெல்லாம் நம்பாதே! வெளியிலும் சொல்லாதே!"

"சக்கரவர்த்திக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அடுத்த பட்டம் யாருக்கு என்று சொல்ல முடியுமா?"

"அடுத்த பட்டம் உனக்குமில்லை; எனக்குமில்லை; நாம் ஏன் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்?"

"அந்த மட்டில் தப்பிப் பிழைத்தோம்!" என்றான் வந்தியத்தேவன்.

"உண்மைதான், தம்பி! பட்டத்துக்குப் பாத்தியதை என்பது சாதாரண விஷயம் அல்ல; மிக்க அபாயகரமான விஷயம் இல்லையா!"

"ஜோசியரே! தற்சமயம் காஞ்சியில் இருக்கிறாரே, இளவரசர் ஆதித்த கரிகாலர்."

"இருக்கிறார். அவருடைய சார்பாகத் தானே நீ வந்திருக்கிறாய்!"

"கடைசியாகக் கண்டு பிடித்து விட்டீர்கள். சந்தோஷம். அவருடைய யோகம் எப்படி இருக்கிறது?"

"ஜாதகம் கைவசம் இல்லை, தம்பி! பார்த்துத்தான் சொல்ல வேண்டும்."

"இளவரசர் மதுராந்தகரின் யோகம் எப்படி?"

"அவருடையது விசித்திரமான ஜாதகம். பெண்களின் ஜாதகத்தை ஒத்தது. எப்போதும் பிறருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பது..."

"இப்போதுகூடச் சோழ நாட்டில் பெண்ணரசு நடைபெறுவதாகச் சொல்கிறார்களே? அல்லி ராஜ்யத்தைவிட மோசம் என்கிறார்களே?"

"எங்கே தம்பி அப்படிச் சொல்லுகிறார்கள்?"

"கொள்ளிடத்துக்கு வடக்கே சொல்கிறார்கள்?"

"பெரிய பழுவேட்டரையர் புதியதாக மணம் புரிந்து கொண்ட இளைய ராணியின் ஆதிக்கத்தைப்பற்றிச் சொல்கிறார்கள் போலிருக்கிறது."

"நான் கேள்விப்பட்டது வேறு."

"என்ன கேள்விப்பட்டாய்?"

"சக்கரவர்த்தியின் திருக்குமாரி குந்தவைப் பிராட்டிதான் அவ்விதம் பெண்ணரசு செலுத்துவதாகச் சொல்கிறார்கள்!"

ஜோதிடர் சற்றே வந்தியத்தேவன் முகத்தை உற்றுப் பார்த்தார். சற்றுமுன் அந்த வீட்டிலிருந்து சென்றது குந்தவை தேவி என்று தெரிந்து கொண்டுதான் அவ்விதம் கேட்கிறானோ என்று முகத்திலிருந்து அறிய முயன்றார். ஆனால் அதற்கு அறிகுறி ஒன்றும் தெரியவில்லை.

"சுத்தத் தவறு, தம்பி! சுந்தர சோழ சக்கரவர்த்தி தஞ்சையில் இருக்கிறார். குந்தவைப் பிராட்டி பழையாறையில் இருக்கிறார். மேலும்..."

"மேலும் என்ன? ஏன் நிறுத்தி விட்டீர்கள்?"

"பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும்; இரவில் அதுவும் பேசக் கூடாது. ஆனாலும் உன்னிடம் சொன்னால் பாதகமில்லை. இப்போது சக்கரவர்த்திக்கு அதிகாரம் ஏது? எல்லா அதிகாரங்களையும் பழுவேட்டரையர்கள் அல்லவா செலுத்துகிறார்கள்!"

இப்படிச் சொல்லிவிட்டுச் ஜோதிடர் வந்தியத்தேவனுடைய முகத்தை மறுபடியும் ஒரு தடவை கவனமாகப் பார்த்தார்.

"ஜோதிடரே! நான் பழுவேட்டரையரின் ஒற்றன் அல்ல. அப்படிச் சந்தேகப்பட வேண்டாம். சற்றுமுன்னால் ராஜ்யங்களும் ராஜவம்சங்களும் நிலைத்து நில்லாமை பற்றிச் சொன்னீர்கள். நான் பிறந்த வாணர்குலத்தையே உதாரணமாகச் சொன்னீர்கள். தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள். சோழ வம்சத்தின் வருங்காலம் எப்படியிருக்கும்?"

"உண்மையைச் சொல்கிறேன். சந்தேகம் சிறிதுமின்றிச் சொல்கிறேன். ஆனிமாதக் கடைசியில் காவேரியிலும் காவேரியின் கிளை நதிகளிலும் புதுவெள்ளம் வரும். அப்போது அது நாளுக்குநாள் பெருகப்போகும் புது வெள்ளம் என்பது காவேரி தீரத்தில் உள்ளவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆவணி, புரட்டாசி வரையிலும் வெள்ளம் பெருகிக் கொண்டுதானிருக்கும். கார்த்திகை, மார்கழியில் வெள்ளம் வடிய ஆரம்பிக்கும். இது வடிகிற வெள்ளம் என்பதும் காவேரிக் கரையில் உள்ளவர்களுக்குத் தெரிந்து போகும். சோழ சாம்ராஜ்யம் இப்போது நாளுக்குநாள் பெருகும் புதுவெள்ளத்தை ஒத்திருக்கிறது. இன்னும் பல நூறு வருஷம் இது பெருகிப் பரவிக் கொண்டேயிருக்கும். சோழப் பேரரசு இப்போது வளர்பிறைச் சந்திரனாகஇருந்து வருகிறது. பௌர்ணமிக்கு இன்னும் பலநாள் இருக்கிறது. ஆகையால் மேலும் மேலும் சோழ மகாராஜ்யம் வளர்ந்து கொண்டேயிருக்கும்..."

"இத்தனை நேரம் தங்களுடனே பேசியதற்கு இந்த ஒரு விஷயம் தெளிவாகச் சொல்லி விட்டீர்கள். வந்தனம், இன்னும் ஒரு விஷயம் மட்டும் முடியுமானால் சொல்லுங்கள். எனக்குப் கப்பல் ஏறிக் கடற் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் ரொம்ப நாளாக இருக்கிறது..."

"அந்த விருப்பம் நிச்சயமாகக் கைகூடும். நீ சகடயோகக்காரன். உன் காலில் சக்கரம் இருப்பது போலவே ஓயாமல் சுற்றிக் கொண்டிருப்பாய். நடந்து போவாய்; குதிரை ஏறிப் போவாய்; யானைமேல் போவாய்; கப்பல் ஏறியும் போவாய்; சீக்கிரமாகவே உனக்குக் கடற் பிரயாணம் செய்யும் யோகம் இருக்கிறது."

"ஐயா! தென்திசைப் படையின் சேனாபதி, தற்சமயம் ஈழத்திலே யுத்தம் நடத்தும் இளவரசர் அருள்மொழிவர்மரைப்பற்றித் தாங்கள் சொல்லக் கூடுமா? கிரஹங்களும் நட்சத்திரங்களும் அவரைப் பற்றி என்ன சொல்லுகின்றன?"

"தம்பி! கப்பலில் பிரயாணம் செய்வோர் திசையறிவதற்கு ஒரு காந்தக் கருவியை உபயோகிக்கிறார்கள். கலங்கரை விளக்கங்களும் உபயோகப்படுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம்விட, நடுக்கடலில் கப்பல் விடும் மாலுமிகளுக்கு உறுதுணையாயிருப்பது எது தெரியுமா? வடதிசையில் அடிவானத்தில் உள்ள துருவ நட்சத்திரந்தான். மற்ற நட்சத்திரங்கள்-கிரஹங்கள் எல்லாம் இடம்பெயர்ந்து போய்க் கொண்டேயிருக்கும். ஸப்தரிஷி மண்டலமும் திசைமாறிப் பிரயாணம் செய்யும். ஆனால் துருவ நட்சத்திரம்

மட்டும் இடத்தைவிட்டு அசையாமல் இருந்த இடத்திலேயே இருக்கும். அந்தத் துருவ நட்சத்திரத்தைப் போன்றவர் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் கடைக்குட்டிப் புதல்வரான இளவரசர் அருள்மொழி வர்மர். எதற்கும் நிலைகலங்காத திட சித்தமுடையவர். தியாகம், ஒழுக்கம் முதலிய குணங்களில் போலவே வீரபௌருஷத்திலும் சிறந்தவர். கல்வியறிவைப் போலவே உலக அறிவும் படைத்தவர். பார்த்தாலும் பசிதீரும் என்று சொல்லக் கூடிய பால்வடியும் களைமுகம் படைத்தவர். அதிர்ஷ்ட தேவதையின் செல்வப் புதல்வர். மாலுமிகள் துருவ நட்சத்திரத்தைக் குறிகொள்வது போல், வாழ்க்கைக் கடலில் இறங்கும் உன்போன்ற வாலிபர்கள் அருள்மொழிவர்மரைக் குறியாக வைத்துக் கொள்வது மிக்க பலன் அளிக்கும்."

"அப்பப்பா! இளவரசர் அருள்மொழி வர்மரைப் பற்றி எவ்வளவெல்லாம் சொல்கிறீர்கள்? காதலனைக் காதலி வர்ணிப்பது போல் அல்லவா வர்ணிக்கிறீர்கள்?"

"தம்பி! காவிரி தீரத்திலுள்ள சோழ நாட்டில் யாரைக் கேட்டாலும் என்னைப் போலத்தான் சொல்வான்."

"மிக்க வந்தனம், ஜோதிடரே! சமயம் நேர்ந்தால் உங்கள் புத்திமதியின்படியே நடப்பேன்."

"உன்னுடைய அதிர்ஷ்டக் கிரகமும் உச்சத்துக்கு வந்திருக்கிறது என்று அறிந்து தான் சொன்னேன்."

"போய் வருகிறேன் ஜோதிடரே. என் மனமார்ந்த வந்தனத்துடன் என்னால் இயன்ற பொன் தனமும் கொஞ்சம் சமர்ப்பிக்கிறேன். தயவு செய்து பெற்றுக் கொள்ள வேணும்."

இவ்விதம் கூறி, ஐந்து கழஞ்சு பொன் நாணயங்களை வந்தியத்தேவன் சமர்ப்பித்தான்.

"வாணர் குலத்தின் கொடைத்தன்மை இன்னமும் போகவில்லை!" என்று சொல்லிக் கொண்டு ஜோதிடர் பொன்னை எடுத்துக் கொண்டார்.

பதினான்காம் அத்தியாயம்

ஆற்றங்கரை முதலை

குடந்தை நகரிலிருந்து தஞ்சாவூர் செல்வோர் அந்தக் காலத்தில் அரிசலாற்றங்கரையோடாவது காவேரிக் கரையின் மேலாவது சென்று, திருவையாற்றை அடைவார்கள். அங்கிருந்து தெற்கே திரும்பித் தஞ்சாவூர் போவார்கள். வழியிலுள்ள குடமுருட்டி, வெட்டாறு, வெண்ணாறு, வடவாறு நதிகளைத் தாண்ட அங்கே தான் வசதியான துறைகள் இருந்தன.

குடந்தையிலிருந்து புறப்பட்ட வல்லவரையன், முதலில் அரிசிலாற்றங்கரையை நோக்கிச் சென்றான். விழியில் அவன் பார்த்த காட்சிகள் எல்லாம் சோழ நாட்டைக் குறித்து அவன் கேள்விப்பட்டிருந்ததைக் காட்டிலும் அதிகமாகவே அவனைப் பிரமிக்கச் செய்தன. எந்த இனிய காட்சியையும் முதல் முறை பார்க்கும்போது அதன் இனிமை மிகுந்து தோன்றுமல்லவா? பசும்பயிர் வயல்களும், இஞ்சி மஞ்சள் கொல்லைகளும், கரும்பு வாழைத் தோட்டங்களும், தென்னை கமுகுத் தோப்புகளும், வாவிகளும், ஓடைகளும், குளங்களும், வாய்க்கால்களும் மாறி மாறி வந்து கொண்டேயிருந்தன. ஓடைகளில் அல்லியும் குவளையும் காடாகப் பூத்துக் கிடந்தன. குளங்களில் செந்தாமரையும் வெண்தாமரையும் நீலோத்பலமும் செங்கழுநீரும் கண்கொள்ளாக் காட்சியளித்தன. 'வெண்ணிறக் கொக்குகள் மந்தை மந்தையாகப் பறந்தன. செங்கால் நாரைகள் ஒற்றைக்காலில்நின்று தவம் செய்தன. மடைகளின் வழியாகத் தண்ணீர் குபுகுபு என்று பாய்ந்தது. நல்ல

உரமும் தழை எருவும் போட்டுப் போட்டுக் கன்னங்கரேலென்றிருந்த கழனிகளின் சேற்றை உழவர்கள் மேலும் ஆழமாக உழுது பண்படுத்தினார்கள். பண்பட்ட வயல்களில் பெண்கள் நடவு நட்டார்கள். நடவு செய்து கொண்டே, இனிய கிராமியப் பாடல்களைப் பாடினார்கள்.

கரும்புத் தோட்டங்களின் பக்கத்தில் கரும்பு ஆலைகள் அமைத்திருந்தார்கள். சென்ற ஆண்டில் பயிரிட்ட முற்றிய கருப்பங்கழிகளை வெட்டி அந்தக் கரும்பு ஆலைகளில் கொடுத்துச் சாறு பிழிந்தார்கள். கரும்புச் சாற்றின் மணமும், வெல்லம் காய்ச்சும் மணமும் சேர்ந்து கலந்து வந்து மூக்கைத் தொளைத்தன.

தென்னந்தோப்புகளின் மத்தியில் கீற்று ஓலைகள் வேயப்பட்ட குடிசைகளும் ஓட்டுவீடுகளும் இருந்தன. கிராமங்களில் வீட்டு வாசலைச் சுத்தமாக மெழுகிப் பெருக்கித் தரையைக் கண்ணாடி போல் வைத்திருந்தார்கள். சில வீடுகளின் வாசல்களில் நெல் உலரப் போட்டிருந்தார்கள். அந்த நெல்லைக் கோழிகள் வந்து கொத்தித் தின்றுவிட்டு, "கொக்கரக்கோ!" என்று கத்திக் கொண்டு திரும்பிப் போயின. நெல்லைக் காவல் காத்துக் கொண்டிருந்த பெண் குழந்தைகள் அக் கோழிகளை விரட்டி அடிக்கவில்லை. "கோழி அப்படி எவ்வளவு நெல்லைத் தின்றுவிடப் போகிறது?" என்று அலட்சியத்துடன் அக் குழந்தைகள் சோழியும் பல்லாங்குழியும் ஆடிக் கொண்டிருந்தார்கள். குடிசைகளின் கூரைகளின் வழியாக அடுப்புப் புகை மேலே வந்து கொண்டிருந்தது. அடுப்புப் புகையுடன் நெல்லைப் புழுக்கும் மணமும், கம்பு வறுக்கும் மணமும், இறைச்சி வதக்கும் நாற்றமும் கலந்து வந்தன. அக்காலத்தில் போர் வீரர்கள் பெரும்பாலும் மாமிச பட்சணி





களாகவே இருந்தார்கள். வல்லவரையனும் அப்படித்தான். எனவே அந்த மணங்கள் அவனுடைய நாவில் ஜலம் ஊறச் செய்தன.

ஆங்காங்கே சாலை ஓரத்தில் கொல்லர் உலைக்களங்கள் இருந்தன. உலைகளில் நெருப்புத் தணல் தகதகவென்று ஜொலித்தது. இரும்பைப் பட்டறையில் வைத்து அடிக்கும் சத்தம் டணார் டணார் என்று கேட்டது. அந்த உலைக்களங்களில் குடியானவர்களுக்கு வேண்டிய ஏர்க்கொழு, மண்வெட்டி, கடப்பாரை முதலியவற்றுடன், கத்திகள், கேடயங்கள், வேல்கள், ஈட்டிக்ள் முதலியன குப்பல் குப்பலாகக் கிடந்தன. அவற்றை வாங்கிக் கொண்டு போகக் குடியானவர்களும் போர் வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு காத்திருந்தார்கள்.

சிறிய கிராமங்களிலும் சின்னஞ்சிறு கோவில்கள் காட்சி அளித்தன. கோவிலுக்குள்ளே சேமக்கலம் அடிக்கும் சத்தமும், நகரா முழங்கும் சத்தமும், மந்திரகோஷமும், தேவாரப் பண்பாடலும் எழுந்தன.

மாரியம்மன் முதலிய கிராம தேவதைகளை மஞ்சத்தில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு பூசாரிகள் கரகம் எடுத்து ஆடிக் கொண்டும் உடுக்கு அடித்துக் கொண்டும் வந்து நெல் காணிக்கை தண்டினார்கள்.

கழுத்தில் மணி கட்டிய மாடுகளைச் சிறுவர்கள் மேய்ப்பதற்கு ஓட்டிப் போனார்கள். அவர்களில் சிலர் புல்லாங்குழல் வாசித்தார்கள்!

குடியானவர்கள் வயலில் வேலை செய்த அலுப்புத்தீர மரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறினார்கள். அப்போது செம்மறியாடுகளைச் சண்டைக்கு ஏவிவிட்டு அவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

வீட்டுக் கூரைகளின்மேல் பெண் மயில்கள் உட்கார்ந்து கூவ, அதைக் கேட்டு ஆண் மயில்கள் தோகையைத் தூக்கமுடியமால் தூக்கிக் கொண்டு ஜிவ்வென்று பறந்துபோய் அப் பெண் மயில்களுக்குப் பக்கத்தில் அமர்ந்தன.

புறாக்கள் அழகிய கழுத்தை அசைத்துக் கொண்டு அங்குமிங்கும் சுற்றின.

பாவம்! கூண்டுகளில் அடைபட்ட கிளிகளும் மைனாக்களும் சோக கீதங்கள் இசைத்தன.

இப்படிப்பட்ட காட்சிகளையெல்லாம் பார்த்துக் களித்துக் கொண்டு வந்தியத்தேவன் குதிரையை மெல்ல செலுத்திக் கொண்டு சென்றான்.

அவனுடைய கண்களுக்கு நிறைய வேலை இருந்தது. மனமும் இந்தப் பல்வேறு காட்சிகளைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தது. ஆயினும் அவன் உள் மனத்திலே இலேசாகப் பனியினால் மூடுண்டது போல், ஒரு பெண்ணின் முகம் தெரிந்து கொண்டேயிருந்தது. ஆகா! அந்தப் பெண் அவனுடைய செவ்விதழ்களைத் திறந்து தன்னுடன் சில வார்த்தை பேசியிருக்கக் கூடாதா? பேசியிருந்தால் அவளுக்கு என்ன நஷ்டமாகியிருக்கும்? அந்தப் பெண் யாராயிருக்கும்? யாராயிருந்தாலும் கொஞ்சம் மரியாதை என்பது வேண்டாமா? என்னைப் பார்த்தால் அவ்வளவு அலட்சியம் செய்வதற்குரியவனாகவா தோன்றுகிறது? அந்தப் பெண் யார் என்பதைச் சொல்லாமலே அந்தச் சோதிடக் கிழவர் ஏமாற்றிவிட்டார் அல்லவா! அவர் கெட்டிக்காரர்; அசாத்தியக் கெட்டிக்காரர். பிறருடைய மனத்தை எப்படி ஆழம் பார்த்துக் கொள்கிறார்? எவ்வளவு உலக அனுபவத்துடன் வார்த்தை சொல்லுகிறார்? முக்கியமான விஷயம் ஒன்றும் அவர் சொல்லவில்லைதான்! இராஜாங்க சம்பந்தமான பேச்சுக்களில் அவர் மிகவும் ஜாக்கிரதையாக எதுவும் சொல்லாமல் தப்பித்துக் கொண்டார். அல்லது எல்லோருக்கும் தெரிந்ததையே விகசித சாதுரியத்துடனே சொல்லிச் சமாளித்துக் கொண்டார். ஆனாலும் தன்னுடைய அதிர்ஷ்ட கிரகங்கள் உச்சத்துக்கு வந்திருப்பதாக நல்ல வார்த்தை சொன்னார் அல்லவா? குடந்தை ஜோதிடர் நன்றாயிருக்கட்டும்!...

இவ்வாறெல்லாம் சிந்தித்துக் கொண்டு வந்தியத்தேவன் சென்றான். அவ்வப்போது எதிர்ப்பட்ட

காட்சிகள் இடையிடையே அவனைச் சிந்தனை உலகத்திலிருந்து இவ்வுலகத்துக்கு இழுத்தன.

கடைசியில் அரிசிலாற்றங் கரையை அடைந்தான். சிறிது தூரம் ஆற்றங் கரையோடு சென்றதும், பெண்களின் கைவளை குலுங்கும் சத்தமும், கலகலவென்று சிரிக்கும் ஒலியும் கேட்டன. அவர்கள் இருக்குமிடம் தெரியாமல் அரிசிலாற்றங் கரையில் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. எங்கிருந்து அப் பெண்களின் குரல் ஒலி வருகிறது என்று கண்டு பிடிக்க வந்தியத்தேவன் ஆற்றங்கரை ஓரத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே சென்றான். திடீரென்று, ''ஐயோ! ஐயோ! முதலை! முதலை! பயமாயிருக்கிறதே!'' என்ற அபயக் குரலையும் கேட்டான். குரல் வந்த திசையை நோக்கிக் குதிரையைத் தட்டி விட்டான். அந்தப் பெண்கள் இருந்த இடம் இரு மரங்களின் இடைவெளி வழியாக அவனுக்குத் தெரிந்தது. அவர்களில் பலருடைய முகங்களில் பீதி குடிகொண்டிருந்தது. அதிசயம்!அதிசயம்! அவர்களிலே இருவர் ஜோதிடர் வீட்டிற்குள்ளே வந்தியத் தேவன் பிரவேசித்ததும் புறப்பட்டுச் சென்றவர்கள்தான். இதையெல்லாம் நொடி நேரத்தில் வந்தியத்தேவன் பார்த்துத் தெரிந்து கொண்டான். அதை மட்டுமா பார்த்தான்? ஓர் அடர்ந்த நிழல் தரும் பெரிய மரத்தின் அடியில், வேரோடு வேராக, பாதி தரையிலும் பாதி தண்ணீரிலுமாக ஒரு பயங்கரமான முதலை வாயைப் பிளந்து கொண்டிருந்தது. சமீபத்திலேதான் கொள்ளிட நதியில் ஒரு கொடூரமான முதலை வாயைப் பிளந்து கொண்டு வந்ததை வந்தியத்தேவன் பார்த்திருந்தான். முதலை எவ்வளவு பயங்கரமான பிராணி என்பதையும் கேட்டிருந்தான். ஆகவே இந்த முதலையைப் பார்த்ததும் அவன் உள்ளம் கலங்கி, உடல் பதறிப் போனான். ஏனெனில், அந்த முதலை சற்றுமுன் கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்த பெண்களுக்கு வெகு சமீபத்தில் இருந்தது. வாயைப் பிளந்து



கொண்டு, கோரமான பற்களைக் காட்டிக் கொண்டு, பயங்கர வடிவத்துடன் இருந்தது. முதலை இன்னும் ஒரு பாய்ச்சல் பாய வேண்டியதுதான். அந்தப் பெண்களின் கதி அதோகதியாகி விடும்! அந்தப் பெண்களோ, பின்னால் அடர்த்தியாயிருந்த மரங்களினால் தப்பி ஓடுவதற்கும் முடியாத நிலையில் இருந்தார்கள்.

வந்தியத் தேவனுடைய உள்ளம் எவ்வளவு குழம்பியிருந்தாலும் அவன் உறுதி அணுவளவும்



குன்றவில்லை. தான் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பற்றியும் அவன் ஒரு கணத்துக்கு மேல் சிந்திக்கவில்லை. கையிலிருந்த வேலைக் குறி பார்த்து ஒரே வீச்சாக வீசி எறிந்தான். வேல் முதலையின் கெட்டியான முதுகில் பாய்ந்து சிறிது உள்ளேயும் சென்று செங்குத்தாக நின்றது. உடனே நமது வீரன் உடைவாளை உருவிக் கொண்டு முதலையை ஒரேயடியாக வேலை தீர்த்துவிடுவது என்ற உறுதியுடன் பாய்ந்து ஓடி வந்தான்.

முன்போலவே, அந்தச் சமயத்தில் அப்பெண்கள் கலகலவென்று சிரிக்கும் சத்தம் கேட்டது. வந்தியத்தேவன் காதுக்கு அது நாராசமாயிருந்தது. இத்தகைய அபாயகரமான வேளையில் எதற்காக அவர்கள் சிரிக்கிறார்கள்? பாய்ந்து ஓடி வந்தவன் ஒரு கணம் திகைத்து நின்றான். அப் பெண்களின் முகங்களைப் பார்த்தான். பயமோ, பீதியோ அம் முகங்களில் அவன் காணவில்லை. அதற்கு மாறாகப் பரிகாசச் சிரிப்பின் அறிகுறிகளையே கண்டான். சற்றுமுன், ''ஐயோ ஐயோ!'' என்று கத்தியவர்கள் அவர்கள்தான் என்றே நம்ப முடியவில்லை. அவர்களில் ஒருத்தி... ஜோதிடர் வீட்டில் தான் பார்த்த பெண்-கம்பீரமான இனிய குரலில், "பெண்களே! சும்மா இருங்கள்! எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று அதட்டும் குரலில் கூறியது கனவில் கேட்பது போல அவன் காதில் விழுந்தது.

முதலையண்டை பாய்ந்து சென்றவன் வாளை ஓங்கியவண்ணம் தயங்கி நின்றான். முதலையை உற்றுப் பார்த்தான். அந்தப் பெண்களின் முகங்களையும் இன்னொரு தடவை உற்றுப் பார்த்தான். அவன் உள்ளத்தை வெட்கி மருகச் செய்த,-உடலைக் குன்றச் செய்த,-ஒரு சந்தேகம் உதித்தது.

இதற்குள்ளாக அந்தப் பெண்மணி, மற்றவர்களைப் பிரிந்து முன்னால் வந்தாள். முதலைக்கு எதிர்ப்புறத்தில், அதைக் காப்பாற்றுகிறவளைப்போல் நின்றாள்.

''ஐயா! தங்களுக்கு மிக்க வந்தனம். தாங்கள் வீணில் சிரமப்பட வேண்டாம்!'' என்றாள்.

(தொடரும்)

மனம் இருந்தால் வழி இருக்கிறது!

இந்தியாவில் எழுத்தறிவு படைத்தவர்கள் எண்ணிக்கை 52 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கும் இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் நமது கவனத்துக்குரியவை...

வோட்டுரிமைக்கும் கல்விக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பதை மறுப்பவர்கள் யாருமில்லை.

அதாவது ஒரு நாட்டில் வாக்குரிமை பெறாதவர்களே இருக்கக் கூடாதெனில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் இருக்கக் கூடாது.

இந்த நியதியை அனுசரித்தே, உலகத்தில் உள்ள சுதந்திர நாடுகளில் சிறுவர், சிறுமியர் யாவரும் கட்டாயக் கல்வி பெறவேண்டும் என்ற முறை அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. எல்லோருக்கும் வயது வந்த பின் வாக்குரிமையும் அளிக்கப்படுகிறது.

அத்தகைய நடுகளில் இருக்கும் மக்களில் 95 சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தால் 75 சதவிகிதம் பேர் வாக்குரிமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஆனால், நேற்று வரையில் அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த இந்தியாவிலே மாத்திரம், நிலைமை தலைகீழாக இருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

நமது நாட்டிலே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை பத்து சதவிகிதத்துக்கும் குறைவாகும். ஆனால், சுதந்திர அரசியல் திட்டத்தின்படி ஐம்பது சத விகிதத்துக்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமை பெறுகிறார்கள்.

முன்னேற்றம் அடைந்துள்ள மற்ற நாடுகளில் இருப்பதுபோல் தொண்ணூற்றைந்து சதவிகிதம் பேர் கல்வியறிவு உள்ளவர்களாக இராவிட்டாலும் குறைந்த பட்சம் நூற்றுக்கு ஐம்பது பேராவது கல்வியறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டாமா?

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் வாக்குரிமை பெற்றவர்களாக இருப்பது இந்தியாவின் பெருமைக்கு இழுக்கு அல்லவா?

நமது நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை ஐம்பது சதவிகிதமாவது உயர்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்ற கேள்விக்குப் பதில் அளிப்பது எளிதல்ல.

தற்போதைய நிலைமை நீடிக்குமாயின் கலியுகம் முடிவதற்குள்ளாவது கல்வித் துறையிலே கதிமோட்சம் ஏற்படுமா என்பது சந்தேகம்தான்!

சென்னை மாகாணத்திலே பள்ளிக் கூடத்துக்குச் செல்லும்

அமரர் கல்கி

வயதுள்ள 70 லட்சம் குழந்தைகள் இருக்கிறார்கள்; இவர்களில் 35 லட்சம் குழந்தைகள் இப்போது பள்ளிக்கூடம் போகிறார்கள்; பாக்கி 35 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூட வசதியில்லாமல் தத்தளிக்கிறார்கள் என்று சென்ற வருஷம் கூறப்பட்டது.

இந்த வருஷத்திலும் சென்னை சர்க்கார் அதே பல்லவியைத்தான் பாடித் தீர்த்திருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்தின் 50 கோடி ரூபாய் வருமானத்தில் 11 கோடி கல்வி இலாகாவுக்காகச் செலவு செய்யப்படுகிறது. மேலும் பணம் செலவு செய்வது சமீபத்தில் இயலாத காரியம் என்று சென்ற வருஷத்தில் சென்னை சர்க்கார் கையை விரித்தார்கள்.

இந்த வருஷத்திலும் நிலைமை அன்றிருந்தது போலவே இருக்கிறது.

சென்னை சர்க்காரின் 1950–51ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தையொட்டி சட்டசபையில் விவாதம் நடந்த போது, "கட்டாயக் கல்வி முறையைப் பரப்ப சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள்?" என்று அங்கத்தினர்கள் வழக்கம் போல் கேட்டனர்.

அந்தக் கேள்விக்கு சர்க்காரும் வழக்கம்போல் பதில் கூறி விட்டார்கள்.

"அங்கத்தினர்கள் அனுஷ்டான சாத்தியமற்ற விஷயத்தைப் பற்றிப் பேசக் கூடாது. தற்போது பள்ளிக்கூடம் போகும் வயதுள்ள குழந்தைகள் சுமார் 70 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் 33 லட்சம் பேர் பள்ளிக்கூடம் போகிறார்கள். இவர்கள் வாசிப்பதற்கே போதிய கட்டட வசதியில்லாமல் சர்க்கார் கஷ்டப்படுகிறார்கள். மிருகங்களை அடைத்து வைத்தால் கூட ஜீவகாருண்ய சட்டப்படி குற்றம் என்று கருதப்படும் இடங்களில் குழந்தைகள் அடைக்கப்பட்டு வருகிறார்கள். எனினும் நினைத்த மாத்திரத்தில் இத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் தேடி விட முடியுமா? பணக்கஷ்டத்தையும் மற்ற நிலைமைகளையும் மனதிற் கொண்டுதான் நாம் எந்தத் திட்டத்தையும் வகுக்க முடியும்" என்று கல்வி மந்திரி கனம் கே. மாதவ மேனன் புகார்களுக்குப் பதில் அளித்தார்.

கனம் கல்வி மந்திரியின் பதில் எதைக் காட்டுகிறது? கல்வித் துறையில் சென்ற வருஷம் இருந்ததைக் காட்டிலும் சென்னை சர்க்கார் ஓர் அடி கூட முன்னேறவில்லை என்பதை அவருடைய பதில் நிரூபிக்கவில்லையா?

இந்த நிலைமையில் அடுத்த வருஷம் முன்னேற்றம் ஏற்படலாம் என்பதற்கான அறிகுறியும் தென்படவில்லை.

இப்போது பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கே போதிய கட்டட வசதி இல்லையென்றால், மற்ற 37 லட்சம் குழந்தைகளுக்கு எந்த யுகத்தில் கதி மோட்சம் ஏற்படும்?

இவர்களைத் தவிர வருஷா வருஷம் பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலம் எப்படி ஆவது?


ஆரம்ப ஆசிரியர்கள் "சம்பளம் போதவில்லை" என்ற கிளர்ச்சியை மறுபடியும் தொடங்கியிருக்கிறார்கள்.

"இப்போதுள்ள உபாத்தியாயர்களுக்குத் தலா ஒரு ரூபாய் வீதம் சம்பள உயர்வு கொடுத்தால் கூட பத்து லட்சம் ரூபாய் தேவையாக இருக்கும். தற்போதுள்ள நிலைமையில் அவ்வாறு கொடுப்பது சாத்தியமில்லாத காரியம்" என்றும் கல்வி மந்திரி கூறுகிறார்.

இந்த நிலைமையிலும் அதிகமான குழந்தைகள் கல்வி பெறுவது எப்படி? அதிகக்

கட்டடங்களுக்கு வழி செய்வது எப்படி? அதிக உபாத்தியாயர்களை நியமிப்பது எப்படி?

மலை போன்ற இந்த மாபெரும் பிரச்னையைத் தீர்ப்பதற்குற்ற சுலபமான ஒரே வழி **"ஒரு வேளைப் பள்ளிக்கூடம்; இரண்டரை மணிப் படிப்பு"** என்று சென்ற வருஷம் நாம் குறிப்பிட்டிருந்தது ஞாபகமிருக்கலாம்.



இந்த முறையைக் கைக்கொண்டால் தற்போதுள்ள கட்டடங்களிலேயே, தற்போதுள்ள உபாத்தியாயர்களைக் கொண்ட, 70 லட்சம் குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கலாம்.

முழு நேரப் பள்ளிக் கூடங்களின் மூலமாகவே பாக்கியுள்ள 37 லட்சம் குழந்தைகளுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுப்பதென்றால், மேலும் வருஷத்துக்குப் பத்துக் கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும்.

பத்து லட்சம் ரூபாய் அதிகச் செலவைச் சமாளிக்க முடியாமலிருக்கும் போது பத்துக் கோடி ரூபாய்க்கு எங்கே போவது?

பணம் கிடைத்தாலும் உபாத்தியாயர்களுக்கு எங்கே போவது? கட்டடங்களுக்கு எங்கே போவது?- போதிய பணமும் உபாத்தியாயர்களும் கட்டடங்களும் தயாராக இன்னும் எத்தனை காலம் ஆகும்? அதற்குள்ளே லட்சக் கணக்கான குழந்தைகள் பெருகிப் பள்ளிக்கூடம் போகத் தயாராகி விடுவார்களே? அவர்கள் எல்லோரையும் என்ன செய்வது?

நம்முடைய யோசனையைக் கட்டாயம் சர்க்கார் கடைப்பிடித்துத்தான் ஆக வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. ஆனால் வேறு எந்த வழியைக் கடைப்பிடித்து இந்த நாட்டில் உள்ள குழந்தைகள் எல்லாரையும் நமது சர்க்கார் படிக்க வைக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். வேறு வழி இருந்தால் அதைச் சொல்லட்டும்.

இந்த வருஷம் நமது மாகாணத்திலே மொத்தம் 68,000

மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்கு எழுதியிருக்கிறார்கள்.

அவர்களில் பாதிப் பேருக்கு மேல் 'பாஸ்' செய்யலாம். பாஸ் செய்தவர்களில் மூன்றில் ஒரு மடங்கு பேர் கலாசாலைகளில் சேர்ந்து கொள்வார்கள்.

மற்றவர்கள் எல்லாரும் என்ன செய்யப் போகிறார்கள்? அந்த இருபதினாயிரம் பேருக்கும் உத்தியோகம் கிடைக்குமா? எந்தத் தொழில் துறையில் ஈடுபடுவதற்குற்ற யோக்கியதை அவர்களுக்கு இருக்கிறது? பாஸ் செய்யாத பதினாயிரக் கணக்கானவர்களின் கதி என்ன ஆவது?

ஒருவேளைப் பள்ளிக்கூடம் என்ற முறை அமுலுக்கு வருமாயின், குழந்தைகளுக்குச் சிறு வயதிலிருந்தே பள்ளிக்கூடப் படிப்பைத் தவிர ஏதாவதொரு தொழிலிலும் பயிற்சியளிப்பது சாத்தியமாக இருக்கும். குழந்தைகள் அவரவருடைய பெற்றோரின் தொழிலிலோ அல்லது இஷ்டமான வேறு தொழிலிலோ பயிற்சி பெறலாம். பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பின் ஜீவனத்துக்கு என்ன செய்வது என்று ஏங்காமல் தாங்கள் பயிற்சி பெற்ற தொழில் துறைகளில் ஈடுபடலாம்.

பள்ளிக் கூடங்களிலேயே தொழிற் படிப்பும் கற்றுக் கொடுப்பது பற்றிப் பேசுகிறார்கள். இது வீண் முயற்சியும் தண்டச் செலவுமேயாகும்

பிள்ளைகள் எல்லாருக்கும் பள்ளிக் கூடப் படிப்புக்கே வழி செய்ய முடியாத சர்க்கார், தொழிற் கல்விக்கு எவ்வாறு வழி செய்ய முடியும்? ஆயிரம் பேர் பள்ளிக்கூடப் படிப்புப் பெறும் இடத்தில் நூறு பேர்தான் தொழில் பயிற்சி பெற முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆங்காங்கு ஆசிரமங்களும் குருகுலங்களும் ஸேவாஸதனங்களும் ஏற்படுத்தி, படிப்புடன் நல்ல முறையில் கைத்தொழிலும் சொல்லிக் கொடுக்கலாம். இந்த மாதிரி சிற்சில ஸ்தாபனங்கள் இருக்க முடியும். சில ஆயிரம் பிள்ளைகள்தான் நன்மையடைய முடியும். மாகாணத்திலுள்ள எழுபது லட்சம் குழந்தைகளுக்கும் உடனடியாகப் பள்ளிக்கூடங்களில் புத்தகக் கல்வியுடன் தொழிற் கல்வியும் புகட்ட இப்போதைக்கு ஏற்பாடு செய்வது அசாத்தியம்.

சாதாரணமாக ஒரு நாகரிக சுதந்திர தேசத்தில் உள்ள குழந்தைகள் 16 வயது வரையில் பள்ளிக் கூடங்களில் கல்வி கற்கவேண்டும். இந்த முறையில் பார்த்தால் 68,000 பேர் எஸ்.எஸ்.எல்.ஸி.பரீட்சைக்குப் போவது பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. நியாயமாக 6 லட்சம் பிள்ளைகள் மேற்படி பரீட்சைக்குப் போக வேண்டும். ஏனெனில் சுமார் பதினாறு வயதுள்ள பிள்ளைகள் 6 லட்சம் பேர் சென்னை மாகாணத்தில் இருக்கிறார்கள். வருஷத்துக்கு 6 லட்சம் பிள்ளைகள் எஸ். எஸ்.எஸ்.ஸி. பரீட்சைக்கோ அல்லது அதற்கு இணையான ஒரு பரீட்சைக்கோ போக வேண்டும் என்றால், இம் மாகாணத்தில் ஹைஸ்கூல்கள் எவ்வளவு பெருக வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இப்போதுள்ள கல்வி முறையை இப்படியே வைத்துக் கொண்டால் மேற் கண்டவாறு ஹைஸ்கூல்கள் பெருகுவது சாத்தியமா? ஒரு வேளைப் பள்ளிக்கூடம் என்று வைத்துக் கொண்டால் ஹைஸ்கூல் பிள்ளைகளின் தொகையை உடனே இரண்டு மடங்கு ஆக்கிக் கொள்ளலாம்.

(என்ன சேதி)

– கல்கி, மார்ச் 26, 1950

அட இதுலே இவ்ளோ விஷயம் இருக்கா?-3

ஹீமோபிலியா: விக்டோரியா ராணியின் பரம்பரைச் சொத்து!

சில சமயம் ரத்தப் பரிசோதனைக்கு டாக்டர் எழுதிக் கொடுக்கும்போது 'Bleeding time, clotting time' கணிக்கச் சொல்வார்.

காயம் பட்ட இடத்தில் ரத்தம் உறைந்து போவது என்பது இறைவன் அளித்த வரப் பிரசாதம். அது தொடர்பாகத்தான் இந்தச் சோதனைகள்.

உடலில் எங்காவது கத்தி அல்லது பிளேடால் லேசாகக் காயம் ஏற்பட்டால், கொஞ்சம் ரத்தம் வெளியாகும்தான். ஏதாவது பல்லைப் பிடுங்கினால் தொடர்ந்து ஐந்து நிமிடங்களுக்கு அங்கே ரத்தம் கொட்டும்தான். (அதற்காகத்தான் பல் டாக்டர் ஒரு பஞ்சு உருண்டையை அங்கே அடைக்கிறார்) குழந்தைகளுக்கு முதலில் தோன்றும் ஒரு செட் பற்கள், தானாக விழுந்து விடும் அல்லவா? அப்போதுகூட லேசாக ரத்தம் வெளியேறும்.

ஆனால் மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ரத்தம் வெளியேறுவது சுலபத்தில் நிற்காமல், பல நிமிடங்களுக்குத் தொடர்ந்தால்?! அப்போதுதான் முதல் வரியில் குறிப்பிட்ட சோதனையை டாக்டர் செய்யச் சொல்வார்.

காதுப் பகுதியில் சின்னதாக ஒரு குண்டூசியால் சட்டென்று குத்தியெடுப்பது போல் செய்வார்கள். அப்போது ரத்தம் வெளியாகும் நேரத்தைக் கொண்டு 'ப்ளீடிங் டைமை'க் கணக்கிடுவார்கள்.

விரலில் இருந்து ரத்தத்தை சாம்பிள் எடுத்து அது உறைந்து போக எவ்வளவு நேரமாகிறது என்பதைக் கொண்டு 'க்ளாட்டிங் டைமை'க் கணக்கிடுவார்கள். இது பொதுவாக ஐந்து நிமிடங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கக் கூடாது.

ஆரோக்கியமான ஒரு மனிதனின் உடலிலிருந்து மூன்றில் ஒரு பங்கு ரத்தம் வெளியேறினால்கூட, அவனால் உயிரோடு இருக்க முடியும்! ஆனால் தொடர்ந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருப்பது - அதுவும் உடல் நலமின்றி இருக்கும்போது - என்பது மிகவும் ஆபத்தானது.

இதற்காகத்தான் இயற்கை, ரத்தத்திற்கு உறையும் சக்தியைக் கொடுத்திருக்கிறது. அதே சமயம் நம் உடலில் ரத்தம் சுற்றிக் கொண்

> 'எவ்வளவு பெரிய காயம் பட்டாலும் இயற்கை அதை முதல்ல கவனிச்சுக்கும்...'



டிருக்கும்போதே கொஞ்சம் உறைந்து போனால் அதுவும் ஆபத்தானதுதான். நல்ல வேளையாக, பொதுவாக ரத்தக் குழாய்களிலுள்ள மெல்லிய திசுக்களின்மீது படுவதால் ரத்தம் உறைந்து விடுவதில்லை. அவ்வளவு ஏன், வழவழவென்ற கண்ணாடிக் குடுவையில் கொஞ்சம் ரத்தத்தை ஊற்றிப் பாருங்கள். ரத்தம் உறைந்து விடாது. ஆனால் ஒரு மரக் குச்சியை அதில் விடுங்கள். உடனே ரத்தம் உறையத் தொடங்கி விடும்! அதாவது, சொரசொரப்பான பொருளின் மீது படும்போதோ, ரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டாலோதான் ரத்தம் உறைகிறது.



"சர்வர்! என்னப்பா இது... ஆர்டர் பண்றப்ப வெங்காய தோசைக்கு ஒரு விலை... டேபிளுக்கு வரும்போது இன்னொரு விலையா?"

"இடைப்பட்ட நேரத்துல வெங்காய விலை ஏறிடுச்சு சார்!"

— அம்பை தேவா

ரத்தம் எப்படி கட்டிக் கொள்கிறது? ரத்தத்தில் 'ப்ளேட்லெட்ஸ்' என்ற சின்ன செல்கள் உண்டு. (இப்படி ஒருவரது உடலில் சுமார் ஒன்றரை லட்சம் என்கிற அளவு எண்ணிக்கையில் இவை இருக்கும்). காயத்தால் ரத்தக் குழாய் பாதிக்கப்படும்போது, இவற்றில் ஒரு பகுதி வேகமாக அந்த இடத்தை அடைகிறது (மூளையின் தானியங்கி உத்தரவு). அங்கே ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு, ஒரு திரை அல்லது வலை போலச் செயல்படுகிறது. தொடர்ந்து வரிசையாக சில வகை ரசாயன மாற்றங்கள். இயற்கையே ஒரு பஞ்சுப் படலத்தை வைத்தது போல் ரத்தம் கட்டிக் கொண்டு, ரத்தம் வெளியேறுவதைத் தடுப்பதோடு, காயம் சீக்கிரம் ஆறவும் வழி செய்கிறது.

சிலருக்குப் பாவம், ரத்தம் சுலபத்தில் உறைந்து விடாது. வேறு சிலருக்கு எவ்வளவு நேரமானாலும் உறையவே செய்யாது. இதை 'ஹீமோபிலியா' என்கிறார்கள். இது ஓரளவு பரம்பரை தொடர்பானது. மிகவும் விசித்திரமானதும்கூட. பொதுவாக இந்த நோய் ஆண்களைத்தான் தாக்குகிறது. என்றாலும், தந்தை மூலம் மகனுக்கு என்று பரவுவதில்லை. தந்தை தன் மகளுக்கு இதை அளிக்க, (இந்த நோயால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாத) மகள் அதைத் தனது மகனுக்கு பாஸ் செய்கிறாள். ஆக, பேரனுக்குத் தாத்தா தம் மகள் மூலம் அளிக்கக்கூடிய 'சொத்து' இது!

விக்டோரியா மகாராணியும் அவரது கணவர் இருவருமே இந்த நோயைத் தங்களது மூதாதையர் மூலம் பெற்றுக் கொள்ளவே அவர்களது பேரன்களில் ஆறு பேருக்கு இந்த நோய் உண்டானது.

எப்போதாவது சிலருக்கு, காயம் எதுவும் பட்டுக் கொள்ளாமலேயே ரத்தக் குழாயில் ரத்தம் கட்டிக் கொள்வதுண்டு. அப்படிக் கட்டிக் கொள்வதால், ரத்த ஓட்டம் தடைப்படும். ரத்தம் கட்டிய இடத்தைத் தாண்டியுள்ள பகுதியில் திசுக்களுக்கு போதிய ஆக்ஸிஜன் மற்றும் பிற சத்துக்களை எடுத்துச் செல்ல முடியாமல் போகும். அதுவும் இதயத்துக்கு அருகே உள்ள ரத்த நாளத்தில் இப்படி ரத்தம் கட்டிக் கொண்டால் அது மாரடைப்புக்கு வழி வகுக்கும். மூளைக் கட்டி என்று நாம் குறிப்பிடுவதில் முக்கிய வகை இப்படி மூளைப் பகுதியில் ரத்தம் கட்டிக் கொள்வதைத்தான். மிக ஆபத்தானது இது.

நிற்காமல் ரத்தம் தொடர்ந்து காயத்திலிருந்து வெளியேறுவதற்கு உடலில் வைட்டமின் கே சத்து குறைவாக இருப்பதும் காரணமாகலாம். இந்த வைட்டமின் மட்டுமே அதிகம் உள்ள உணவு என்று எதையும் குறிப்பிட முடியாது என்றாலும் கீரை, பால், புரதச் சத்து அடங்கிய உணவுகள் என்று மற்ற வைட்டமின்கள் நிறைந்துள்ள உணவு வகைகளில் வைட்டமின் கே-யும் கணிசமாக உள்ளது.

— ஜி.எஸ்.எஸ்



நான் உன்னை சுவாசிக்கிறேன் 7

பட்டுக்கோட்டை பிரபாகர்

காதல் டைரிக் குறிப்பு .

மறு சந்திப்புக்காக அலை பாய்ந்த மனது.
சந்தித்தபோது ஒத்திகை மறந்து போனது.

அருகில் வந்து நின்ற அரவிந்தை நிமிர்ந்து பார்த்த சோமசுந்தரம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''இப்படி உக்காரு!'' என்றார்.

''பரவால்லை, சொல்லுங்க'' என்றான்.

''நேத்து யாமின் கிட்ட என்ன சொன்னே?''

''எவ்வளவோ பேசினோம். நீங்க எதைக் கேக்கறீங்க?''

''கடன் வாங்கப் போறதாச் சொன்னியா?''

அரவிந்த் மௌனமானான்.

''பதில் சொல்லுடா!''

''ஆமாம், சொன்னேன்.''

தூரத்தில் நினற அம்மாவைப் பார்த்தார்.

கேட்டியா? என்ன சொன்னான்னு கேட்டியா? உன் புள்ளை கடன் வாங்கப் போறானாம்.''

அம்மா, ''என்னடா அரவிந்த்? உன் செலவுக்குதான் மாசா மாசம் அப்பா பணம் கொடுக்கறாரே... அது பத்தலைன்னா, கூட வேணும்னு கேட்டு வாங்கிக்க வேண்டியதுதானே?'' என்றாள்.

''அம்மா, நான் என் செலவுக்காக கடன் வாங்கப் போறதாச் சொல்லை. ஆரம்பிக்கப் போற தொழிலுக்காகத்தான் கடன் வாங்கப் போறதாச் சொன்னேன். என்ன தப்பு?''

''என்ன, தப்பா? நான் இது வரைக்கும் ஒரு பத்து ரூபா கூட யார்கிட்டயும் கடன் வாங்கினதில்லைடா!''

''உங்களுக்குத் தேவைப் படலை. வாங்கலை. எனக்குத் தேவைப்படுதே!''

''நான்தான் தர்றேன்னு சொல்லிருக்கனே...''

''இன்னிக்கு பசியோட இருக்கிறவனுக்கு முடிஞ்சா சோறு போடணும். அதை விட்டுட்டு நாளைக்கு வாப்பா, இலை போட்டு விருந்து வைக்கிறேன்னு சொல்றது அநியாயம். நீங்க எல்லா கடமைகளையும் முடிச்சிட்டு எனக்குப் பணம் தர்றப்போ எனக்குத் தொழில் மேல ஆர்வமே குறைஞ்சி போயிருக்கலாம்.''

''உன்மேலேயே உனக்கு நம்பிக்கை இல்லை. மத்தவங்க, எப்படி நம்புவாங்க?''

"அப்பா, சும்மா அதையும் இதையும் பேசாதீங்க, இளங்கோவும், யாமினியும் ஓகோன்னு முன்னேறிட்டிருக்காங்க. ஒரு பக்கம் சந்தோஷமாத்தான் இருக்கு. ஆனா எனக்குச் சவால் விடற மாதிரியும் இருக்கு. சாதிச்சுக் காட்டணும்னு துடிக்கிறேன். நீங்க ஒத்துழைப்புக் கொடுக்கலைன்னா நான் வேற வழிதானே யோசிச்சாகணும்."

"அதுக்காக?"

"சந்துரு கடன் ஏற்பாடு பண்ணித் தர்றேன்னு சொல்லிருக்கான்."

"அவன் சினிமாக்காரன். அவன் ஏற்பாடு பண்ணித் தர்ற கடனுக்கு வட்டி எவ்வளவு கேப்பாங்கன்னு உனக்குத் தெரியுமா?"

"அதெல்லாம் இன்னும் நாங்க பேசலை."

"சட்டிக்காரன் இதுவரைக்கும் இந்த வீட்டு வாசலை மிதிச்சதில்லைடா!"

"இனிமேயும் மதிக்க மாட்டான். வாங்கற கடனை திருப்பிக் கட்டலைன்னாத்தான் கடன் கொடுத்தவன் வீட்டுக்கு வருவான்."


"எப்படிக் கட்டுவே?"

"சம்பாதிச்சுதான்."

"தொழில்ல லாபம்தான் வரும்னு என்ன நிச்சயம்? நஷ்டம் வந்தா?"

'ராத்திரி தூங்கப் போறப்போ காலைல முழிச்சுக்குவோம்னு என்ன நிச்சயம்? காலைல காபிக்கு வேண்டிய பாலை எதுக்குப் போடச் சொல்றோம்? எதுக்கு பேப்பர் போடச் சொல்றோம்? எதுக்கு சட்டையை அயர்ன் பண்ணி வைக்கிறோம்? எதுக்கு சோத்துல தண்ணி ஊத்தி வைக்கிறோம்? நம்பிக்கைதான்ப்பா!"

"விதண்டா வாதமாப் பேசறே



நீ!"

"இல்லை. நம்பிக்கையோட பேசறேன்."

"பிரஸ் ஆரம்பிக்கணும்னு கிடந்து குதிக்கிறியே, உனக்கு என்னடா அனுபவம் இருக்கு அந்தத் தொழில்ல?"

"ஆர்வம் இருக்கு. அதனாலதான் பிரிண்ட்டிங் டெக்னாலஜி எடுத்துப் படிச்சேன். அதனால தொழில் தெரியும்."

"படிப்பு வேற! அனுபவம் வேற!"

"அனுபவம் வெச்சிக்கிட்டு எல்லாத்திலயும் இறங்க முடியாது. கரையில நின்னுக்கிட்டே இருந்தா நீச்சல் கத்துக்க முடியாது. குதிக்கணும். மூச்சு திணறத்தான் செய்யும். தண்ணி வாய்க்குள்ளே போகத்தான் செய்யும். அதுக்கெல்லாம் பயந்துட்டிருந்தா எதுவும் சாதிக்க முடியாது."



சாதனைக்கு வயதில்லை!

ரிட்டயர்டு பள்ளிக்கூட ஆசிரியர் எல்.என். பரத்வாஜ் கல்கத்தாவிலிருந்து அமிருதசரசுக்கு நடந்தே வந்து சேர்ந்திருக்கிறார். இவருக்கு வயது 68. ஒற்றுமையையும் அமைதியையும் வலியுறுத்தி, போகிற இடமெல்லாம் பேசுகிறார் பரத்வாஜ். ஒரு நாளைக்குச் சுமார் 40 கிலோமீட்டர் நடக்கிறார். இரவில் எந்தக் கிராமமாய் இருந்தாலும் அங்கே இருக்கிற ஒரு கிராமவாசியின் வீட்டிலேயே தங்கி விடுகிறார். பரத்வாஜுக்கு இது இரண்டாவது நடைப் பயணம். ஏற்கெனவே பிரிட்டனில் 1400 கி.மீ. நடந்து சாதனை படைத்திருக்கிறார்!

— தம்பி

"சொல் புத்தில புரிஞ்சுக்கறது ஒரு ரகம். பட்டுத் தெரிஞ்சுக்கறது ஒரு ரகம். நீ பட்டும் தெரிஞ்சுக்கலைன்னா உன்னை எந்த ரகத்திலடா சேர்க்கறது? முழுசா ரெண்டு லட்சத்தை விலையாக் கொடுத்தும் பாடம் புரியலைன்னா என்ன பண்றது?"

"அப்பா, அதைப் பத்தி நிறைய பேசிட்டோம். என் ஃபிரண்டு என்னை ஏமாத்துவான்னு நான் எதிர்பார்க்கலைன்னு பல தடவை சொல்லிட்டேன். சும்மா அதையே சொல்லி குத்திக் காட்டாதீங்க."

சோமசுந்தரம் கழற்றிப் பிடித்திருந்த கண்ணாடியின் காதுகளை இணைப்பதும், விலக்குவதுமாக அமைதியாக இருந்தார்.

"நான் ரூமுக்கு போகலாமா? விசாரணை முடிஞ்சிடுச்சா?"

அவனை எரிச்சலோடு பார்த்தார்.

"அரவிந்த், உனக்கு கோபம் இருக்கற அளவுக்கு மத்தவங்களைப் புரிஞ்சுக்கற சக்தி இல்லைடா. எப்படி உன் ஃபிரண்டு நல்லவனா, கெட்டவனான்னு உன்னால புரிஞ்சுக்க முடியலையோ, அந்த மாதிரிதான் என்னையும் புரிஞ்சுக்கலை. நீ கெட்டுப் போகணும்னு நான் நினைப்பேனா? தன் பிள்ளைங்க எல்லாரும் நல்லா இருக்கணும்னுதானே ஒரு தகப்பன் நினைப்பான்."

அரவிந்த் சோபாவின் விளிம்பை நகத்தால் கிறீயபடி மௌனமாக நின்றான்.

"இப்ப உனக்கு நேரம் சரியில்லைப்பா. உனக்கு ஜாதகத்தில நம்பிக்கை இல்லாம இருக்கலாம். எனக்கு இருக்கு. உனக்கு டைம் சரியில்லாததாலதான் நல்லா இருந்த உன் ஃபிரண்டோட மனசு கழிசடையாகி உன்னை ஏமாத்தினான். மறுபடி நீ எதிலயும் ஏமாந்துடக் கூடாதுன்னுதான் நான் கவலைப் படறேன். கொஞ்சம் என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து பொறுமையா இரேன்."

"பொறுமையா இருக்கறதுன்னா சும்மா ஊர் சுத்திக்கிட்டு வேளா வேளைக்கு வந்து சாப்பிட்டுட்டுப் போகச் சொல்றீங்களா? என் வயசும், திறமையும் வேஸ்ட் ஆகுதுப்பா."

"சும்மா ஏன் ஊர் சுத்தணும்? பெங்களூருக்கு வா, வேலை அமைச்சித் தர்றேன்னு இளங்கோ சொல்றான். இங்கயே வேலைக்கு ஏற்பாடு பண்றா யாமினி. எதுக்கும் நீதானே ஒத்துக்க மாட்டேங்கறே!"

"செக்கு மாடு கதையாயிடும்ப்பா. வேலைக்குப் போக ஆரம்பிச்சா தொழில் ஆரம்பிக்கிற துடிப்பு காணாமல் போயிடும்ப்பா."

"நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். ரெண்டு வருஷம் கழிச்சிதான் உனக்கு நேரம் நல்லாருக்கு. அப்புறம் உனக்குச் சேரவேண்டிய சொத்தைப் பிரிச்சிக் கொடுத்துடறேன். நீ என்ன வேணும்னாலும் செஞ்சுக்கோ. அதுக்குள்ளே நிர்மலாவுக்கும் கல்யாணம் பண்ணி வெச்சிடறேன். உனக்கு இஷ்டமிருந்தா உனக்கும் பொண்ணு பார்த்து அந்தக் கடமையையும் முடிச்சிடறேன். இதுக்கு நடுவுலே அவசரப்பட்டு எதையாச்சும் செஞ்சி என் கௌரவத்தைப் பாழடிச்சுடாதே! எனக்கு அவமானத்தைத் தேடித் தந்துடாதே! அவ்வளவுதான் நான் சொல்லுவேன்!"

"உங்களுக்கு எப்படி அவமானம் வரும்னுதான் எனக்குப் புரியலை!"

"நீ எவன் எவன் கிட்டயோ கடன் வாங்கி திருப்பிக் கட்டலைன்னா என்னைத் தானேடா வந்து கேப்பான்? குடும்பத்துக்குத் தானேடா கெட்ட பேரு? இதெல்லாம் யோசிக்காம விறைப்பாப் பேசிட்டே இருந்தா எப்படி?"

சோமசுந்தரத்தின் குரல் மீண்டும் உயர்ந்தது.

"நான் தொழில் ஆரம்பிச்சா கண்டிப்பா நஷ்டப்படுவேன்னு தீர்மானமே பண்ணிட்டிங்க, இல்ல? என் திறமையை இதைவிடக் கேவலப்படுத்த முடியாதுப்பா! அப்பா, நானும் முடிவாச் சொல்றேன். உங்க ஜாதக நம்பிக்கையை எல்லாம் உங்களோட வெச்சிக்கங்க. எந்த நட்சத்திரத்துல குழந்தை பொறக்கணும்னு தீர்மானிச்சி பிரசவம் நடத்தற காலம் இது! உங்க கௌரவத்துக்கு எந்த இடைஞ்சலும் ஏற்படாம என் திறமையை நான் நிரூபிச்சிக் காட்றேன். இதை நான் சாதாரணமாத்தான் சொல்றேன். நீங்க சவாலா வேணும்னாலும் எடுத்துக்கங்க."

அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு வேகமாகத் தன் அறைக்குச் சென்று சத்தமாகக் கதவை அறைந்து சாத்தினான் அரவிந்த்.

கிரேன்மேல் உட்கார்ந்திருந்தான் சந்துரு.

கேமிராவின் வழியாக ஃபிரேம் பார்த்து நிமிர்ந்து, "ராஜு", அந்த பில்லர்கிட்ட ஒரு ஒன் கே.வி. போடு! மூர்த்தி, காருக்கு முன்னாடி ஸ்டாண்ட் போட்டு ஒரு கட்டர் வையயா! சீக்கிரம்! கிரேன் டவுன் பண்ணுங்கப்பா! நைஸா இறங்கணும். கார்த்திக், ஹண்ட்ரட் லென்ஸ்தானே போட்ருக்கே?" என்று சுறுசுறுப்பாக உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

ஒரு பாடல் காட்சியின் படப்பிடிப்புக்காகப் போடப் பட்டிருந்த நாகரிகமான செட்டில் இரண்டு கார்கள் எதிரெதிராக நிறுத்தப்பட்டிருந்தன.

ஹீரோ தள்ளி நின்று ஜிகினா உடையில் சிகரெட் பிடித்தபடி செல்ஃபோனில் பேசிக் கொண்டிருக்க... ஹீரோயினை பாட்டுக்கான அலங்கார உடையில் போட்டோகிராஃபர் சில கோணங்களில் ஒரு பக்கம் புகைப்படம் கிளிக்கிக் கொண்டிருந்தார். உடன் ஆடப் போகிற நங்கையர் கூட்டம் உடம்பு முழுக்க தங்கப் பொடியில் குளித்து, கூட்டமாக நின்று டீ குடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஓர் ஓரத்தில் போட்டிருந்த நாற்காலியில்



"உங்க பையன் என்னோட பொண்ணைச் சுத்திச் சுத்தி வர்றானாம்!"

"அவன் எதையுமே காரண காரியத்தோடதான் செய்வான்... உங்க பொண்ணு பேரு சூரியா. என்னோட பையன் பேரு பூமிநாதன் ஆச்சே!"

— கொங்கணாபுரம் வே. செந்தில்

அமர்ந்து கைகட்டியபடி பார்த்துக் கொண்டிருந்தான் அரவிந்த்.

சந்துரு அந்த ஷாட்டுக்கான லைட்டிங் செய்து முடித்து கேமிரா அசைவை ஒத்திகை பார்த்துக் கொண்டு 'ஷாட் ரெடி' என்று தகவல் சொன்னதும், விசில் ஊதப்பட்டு அவரவர் இடங்களுக்கு அனைவரும் வந்து நின்றார்கள்.

நடன இயக்குநர் மேற்பார்வையில் பாடலின் ஒரு வரிக்கான நடனம் பதிவு செய்யப்பட்ட பிறகு, உணவு இடைவேளை விடப்பட்டது.

சந்துரு தன் துணித் தொப்பியைக் கழற்றி விசிறியபடி வந்து அரவிந்துக்கு அடுத்த நாற்காலியில் அமர்ந்தான்.

"ரொம்ப முடி கொட்டிடிச்சுடா உனக்கு" என்றான் அவன் தலையைப் பார்த்தபடி அரவிந்த்.

"விடு! மறுபடி யாரு பொண்ணு கொடுக்கப் போறாங்க? ஆமாம், நீ ஏன் இளைச்ச மாதிரி இருக்கே? சிகரெட் கொடு."

அரவிந்த் அவனுக்குத் தந்து, தனக்கும் அவனுக்கும் பற்ற வைத்துக் கொண்டு, "சட்டை லூசா இருக்குப்பா, இந்தப் பாட்டோட இந்தப் படத்தோட வொர்க் முழுக்க முடியுதுன்னு சொன்னேல்ல?" என்றான்.

"அப்படித்தான் சொல்லிட்டிருந்தேன். நேத்து ப்ரடியூசர் டபுள் பாசிடிவ் பார்த்தாரு. கிளைமாக்ஸ் அவருக்குத் திருப்தியா இல்லை. மறுபடி ரூம் போட்டு பேசச் சொல்லிருக்கார். அனேகமா ரீஷூட்டிங் இருக்கும்."

"என்னப்பா இது. இதான் கிளை



20,000 கேமராக்கள் தயார்!

வரும் ஜூன் மாதம் பிரான்சு நாட்டில் நடைபெறவிருக்கும் உலகக் கால்பந்தாட்ட போட்டியைப் படம் பிடிக்கவும் நேரடியாக ஒளிபரப்பவும் அனுமதி கேட்டு உலகெங்கிலுமிருந்து இருபதாயிரம் புகைப்படம், மற்றும் ஒளிப்பதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன! இத்துறையை கவனிக்கும் குழு இதுவரை ஒன்பதாயிரம் பேருக்கு அனுமதி வழங்கியுள்ளது. மற்றவை பரிசீலனையில் உள்ளன!

— பாரீஸ் பார்த்தசாரதி

மாக்ஸ்னு தீர்மானிக்காமலேயே படம் ஆரம்பிச்சுடு வாங்களா என்ன?''

"இது பரவால்லையே. இதான் கதைன்னு தீர்மானிக்காமலேயே ஆரம்பிச்சிடறாங்களே... சில பேரு.''

"அதெப்படி முடியும்?''

"ஹீரோ இமேஜ்னு கூப்புட்டு ஒரு தெலுங்குப் படம் கேன்சலாய்டுச்சி, அடுத்த வாரத்திலேர்ந்து இருபது நாள் டேட்ஸ் இருக்கு, யூஸ் பண்ணிக்கிறீங்களான்னு கேட்டால் போதும், ஒரு வாரத்துக்குள்ளே மூணு பாட்டு பதிவு செஞ்சி பூஜை போட்டு சாங் ஷூட்டிங் ஆரம்பிச்சிட்டு, ராத்திரி உக்காந்து பேசிப் பேசி ஒரு மாதிரி கதை பண்ணிடறாங்க.''

"என்ன கதைன்னு தெரியாம பாட்டு எப்படிப் போடறது?''

"என்ன கதையா இருந்தாலும் டூயட் நிச்சயம் இருக்கும்னு நிச்சயமாத் தெரியுமே.''

"சரி, இது உங்க பிரச்னைப்பா. லால் சந்த்தைப் பார்த்துப் பேசறேன்னு சொன்னியே சந்துரு.''

"உன்னைப் பத்திச் சொன்னேன் அரவிந்த். அவரு சினிமாவுக்குத் தவிர வெளில ஃபைனான்ஸ் பன்றதில்லை, என்னை வெச்சி ஒரு டைரக்டரை மடக்கி படம் தயாரிக்கிற பிளான்ல இருக்கார். அதனால அவருக்கு என் தயவு தேவைப்படுது. உன்னோட நேர்ல பேசிட்டுச் சொல்றேன்னார். ப்ராஜக்ட் ரிப்போர்ட் எல்லாம் ரெடியா வெச்சிருக்கியா நீ?''

"தயாரா இருக்குப்பா.''

"அப்போ அவர்கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணித் தரட்டுமா?''

"செய் சந்துரு. இனிமே லேட் பண்றதா இல்லை.''

"அன்னைக்கு அவர் நம்பர் கொடுத்தனே, குறிச்சி வெச்சியே, பாரு.''

அரவிந்த் தன் பாக்கெட்டிலிருந்து சிறிய பாக்கெட் நோட் எடுத்துப் புரட்டி எண் பார்த்துச் சொன்னான்.

சந்துரு தன் செல் போனில் அந்த எண்ணை முயன்று கொண்டிருக்க, பாக்கெட் நோட்டை எடுத்தபோது தவறிக் கீழே விழுந்த அந்த விலாச அட்டையை கவனித்து எடுத்தான் அரவிந்த்.

அது பிருந்தாவின் ஆபீஸ் முகவரி.

அவள் புன்னகை பொங்கும் முகம் மனதிற்குள் வந்து போனது.

அவள் விஷயமாக யாமினி வீட்டிற்குச் சென்று பேச வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது.

அதற்கு முன் அவளின் குரலை ஒருமுறை கேட்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது.

"லால்சந்த் ஏர்போர்ட்டுக்கு யாரையோ ரிசீவ் செய்றதுக்காகப் போயிருக்காராம். ஈவினிங் பேசறேன்'' என்றான் சந்துரு.

"சந்துரு, போனைக் கொடேன்'' வாங்கி பிருந்தாவின் எண்களைத் தொட்டு, "கேன் ஐ ஸ்பீக் டு மிஸ் பிருந்தா?'' என்றான்.

"ஸ்பீக்கிங்.''

"பிருந்தா, நான் அரவிந்த் பேசறேன்.''

"சார், நான் உடனடியா உங்களைப் பார்க்கணும். ப்ளீஸ்...'' என்றாள் பிருந்தா அவசரமாக.

(தொடரும்)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை-600 063. தொலைபேசி:2376129



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு , உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக் கொள்கிறோம்..

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/ DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்,
சுவாமி சர்வாத்மானந்தர்.



தேர்தல் ஜுரத்தில் பல தலைவர்களும் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறி, தாங்கள் மாறியதற்குக் காரணமும் சொல்லி, மக்கள் காதில், மூக்கில் எல்லாம் முழ நீளத்துக்குப் பூ சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாறுதலுக்காக, கலைஞர், மூப்பனார், ஜெயலலிதா என்று ஒவ்வொருவரும் கட்சி மாறி, கடிதம் எழுதி, பிரசாரமும் செய்தால் ரசிக்கலாமே என்று நம் கற்பனையைக் கட்டவிழ்த்து விட்டோம். விளைவு :

நாங்கள் மட்டும் கட்சி மாறக் கூடாதா?



ஜெயலலிதா:

நான் பா.ஜ.க.வில் சேர்ந்து விட்டது தமிழ்நாட்டில் பலருக்கும் வியப்பைத் தந்திருக்கிறது. நான் முதல்வராக இருந்த ஐந்து வருட காலத்தில், ஒரு தடவை கூட பா.ஜ.க.வைப் பழித்துப் பேசியது இல்லை என்பதை, பழைய 'துக்ளக்' இதழ்களிலிருந்து என் அருமை நண்பர் சோ சமீபத்தில் வெளியிட்டிருப்பதைப் படித்தவர்கள் அறிவார்கள். பாப்ரி மசூதியை வாஜ்பாயும், அத்வானியும் இடித்தார்களா என்று கேட்கிறேன். அவர்கள் வெறும் கடப்பாறையைத்தான் கையில் வைத்திருந்தார்கள். முழுதும் இடித்த பிறகு, வாஜ்பாய் ரொம்பவும் வருத்தப்பட்டு ஓவென்று அழுதார். அதை பி.பி.சி.யில் காண்பித்தார்கள். இங்கே நானும் அழுதேன். அதை ஏனோ பி.பி.சி.யில் காட்டவில்லை. அதற்குப் பிறகு பா.ஜ.க.வில் சேருவது பற்றி யோசித்துக் கொண்டுதான் இருந்தேன். இப்போது உ.பி.யில் பா.ஜ.க. அமைச்சரவையில் ஏராளமான







கிரிமினல்களும், கொள்ளைக்காரர்களும் சேர்ந்து, அமைச்சர்களாகவே ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்ததும்தான், இதைவிட நல்ல கட்சி நமக்கு வேறு எதுவும் இருக்க முடியாது என்று தீர்மானித்தேன். வரும் தேர்தலில் பா.ஜ.க. மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும். அப்போது எனக்கு அமைச்சர் பதவி வர அத்வானிஜியிடம் கேட்டிருக்கிறேன். மறுபடி ஒரு ரூபாய் மட்டுமே சம்பளம் வாங்குவேன். நான் நடித்துச் சம்பாதித்த 66 கோடி ரூபாயை, ஆயிரம் கோடி ரூபாய் என்று பிரசாரம் செய்தார்கள். மீதி 934 கோடி ரூபாயை, மத்திய அமைச்சராக இருந்து ஒரு ரூபாய் சம்பளம் வாங்கியே சம்பாதித்துக் காண்பிக்கிறேன் என்பதை என் ரத்தத்தின் ரத்தமான உங்களுக்கும், குறிப்பாக என் உ.பி.ச.வுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கலைஞர் :

நான் 'மந்திரி குமாரி' திரைப்படத்துக்கு வசனம் எழுதும்போதே மறைந்த மாமேதை, பாரத ரத்னா, என் கெழுதகை நண்பர், எம்.ஜி.ஆர். சொன்னார், நான் முதலில் மந்திரி ஆகி பிறகு முதல் மந்திரி ஆவேன் என்று. இன்றைக்கு வங்கக் கடலோரம் மீளாத்துயில் கொள்ளும் என் தங்கத் தலைவன் அறிஞர் அண்ணா இருந்திருந்தால், 'தம்பி வா, தானைத் தலைவனே வா, அண்ணா தி.மு.க.வுக்குத் தலைமை ஏற்க வா!' என்று மனமார, உளமார, நெஞ்சார, நெஞ்சின் மேல் உள்ள தோல் ஆர அழைத்திருப்பார். ஜெயலலிதா அம்மையார் எப்போது இந்தக் கட்சியை உதறிவிட்டு, பாரதிய ஜனதாக் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டாரோ, அப்போதே நான் எடுத்த முடிவுதான், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். உருவாக்கிய அண்ணா தி.மு.க.வில் சேர்ந்து விடுவது என்பது.





'அங்கே போகாதீர்கள். போனால் நீங்கள் காணாமல் போய்விடுவீர்கள்' என்று கையைப் பிடித்துக் கொண்டு கதறிட்ட என் நெடுநாளைய நண்பர், ஆர்.எம்.வீ. அவர்களையும் கையைக் காலை எல்லாம் இயன்ற மட்டும் இழுத்துப் பார்த்தேன். அவர் ஏனோ வரவில்லை. காலத்தின் கட்டாயம் என்று சொல்லிக் கொண்டு அவராக வரட்டும். அதுவரை காத்திருப்பேன்!



மூப்பனார் :

நான் ஆரம்பித்த த.மா.கா.வையே விட்டு விட்டு, தாய்க் கட்சியான காங்கிரசுக்குப் போவேன் என்று நீங்கள் யாருமே எதிர் பார்த்திருக்க மாட்டீர்கள். இந்த மாங்காடு காமாட்சி அம்மனே கூட எதிர்பார்த் திருக்கமாட்டாள். ஆனால் சோனியா அம்மையார் எதிர்பார்த்தார். இதுதான் உண்மை. எப்போது 5000 பக்க ஜெயின் கமிஷன் அறிக்கையில் அந்த நீதியரசர் தி.மு.க.வை ராஜீவின் படுகொலைக்கு மறைமுகமாகக் காரணம் காட்டினாரோ, அப்போதே இந்த உறவைத் துண்டித்துக் கொள்ளுவது என்று தீர்மானித்தேன். சிதம் பரம் சம்மதிக்கவில்லை. வேட்டி கட்டின தமிழன்தான் இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறான் என்று சொல்லிச் சொல்லியே, ஆசை காட்டி மோசம் செய் தார்கள். ஒரு பான்ட் போட்ட, மிகச் சிறிய தாடி வைத்தவரைப் போய்க் கடைசியில் பிரதமராகத் தேர்ந்தெடுத்து என்னை அவமானப்படுத்தியபோதே, நான் தாய்க் கட்சியாம் காங்கிரசுக்கு மாறி, சோனி யாவின் தலைமையை ஏற்றிருக்க வேண்டும். தொலைபேசியில் பலமுறை பெரியவர் கேசரி அழைப்பு விடுத்தபோதாவது சேர்ந் திருக்க வேண்டும். செய்யவில்லை. ஆனால் இப்போது தேர்தல் அறிவித்த பிறகு, மத்தி யில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கிற வாய்ப்பு, சோனியா அம்மையாரால் அதிகமாகி வரு வதைப் பார்த்த பிறகு, இனியும் தொடர்ந்து த.மா.கா.வில் நான் தலைவராக நீடித் திருப்பது அதர்மமானது என்று, என் பழைய நண்பர்களின் தோளோடு தோள் இடித்துப் புண்ணாகிப் போகும் அளவுக்குப் பணியாற்ற என்னை இப் பேரியக்கத்தில் அர்ப்பணித்துக் கொள்ளுகிறேன். இதற்கு ரஜினிகாந்த் என்ன சொல்லப் போகிறார் என்பதை, அவர் இமயமலையில் இருந்து இறங்கி வந்து, அறிக்கை தயாரித்து, சத்திய நாராயணாவிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லுவார் என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

சுப்பிரமணியம் சுவாமி :

எப்போது தி.மு.க.வை விட்டு வைகோ சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி ம.தி.மு.கவை ஆரம்பித்தாரோ, அப்போதே சொன்னேன் அவர் அந்தக் கட்சியையும் விட்டு ஒரே வருடத்தில் மறுபடி தி.மு.கவி லேயே சேர்ந்து விடுவார் என்று. எனவே தான், அவரை நம்பி இந்தக் கட்சியில் சேர்ந்த ஏராளமான இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக ம.தி.மு.கவில் என்னை இணைத்துக் கொண்டேன். வைகோ ஈழப் பிரச்னையை மறந்து விட்டார். பிரபாகரனையும் மறந்து விட் டார். ஏன், தம் பெயரையே மறந்து விட் டார். வைக்கோல் என்றும், தவிடு - புண் ணாக்கு என்றும் கெஸட்டில வெளியிடு கிறார்! அடுத்த 24 மணி நேரத்தில் ம.தி.மு.க தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்கப் போகிறது. அப்போது வைகோவைப் பிடித்துச் சிறையில் தள்ளத்தான் போகிறேன்!

டாக்டர் ராமதாஸ் :

என்னுடைய கட்சிக்காரர்கள் பெரிய பெரிய மரங்களை எல்லாம் வெட்டிப் போட்ட போது, மனிதர்களை வெட்டாமல் மரங்களைத்தானே வெட்டுகிறார்கள் என்று பெருமிதத்துடன் இருந்தேன். அப்போது கூட தலித் எழில்மலை, நிலைகுலையாமல் இருந்தார். தீரன் மட்டும் தீரமிழந்து, வீர மிழந்து ஓடிப் போய்க் கலைஞர் காலில் விழுந்து அடிபட்டுக் கொண்டார். நான் ஆலோசித்து எடுத்த முடிவுதான் இது. வாழப்பாடியார் விட்டு விட்டு ஜனதாக் கட்சிக்குப் போனாலும், இந்தத் தமிழக ராஜீவ் காங்கிரசில் சேர்ந்து மரத்தையும், மக்களையும் வெட்டாமல் காப்பாற்றத்தான் போகிறேன்!

வாழப்பாடி ராமமூர்த்தி :

தாவுவதற்கு அடுத்த கட்சி சரியாகக் கிடைக்கிற வரை, ஜனதா தள கட்சியில் சேர்ந்து உழைப்பது என்ற என் முடிவை, இந்த உலகத்தில் உள்ள எந்தச் சக்தியாலும் மாற்ற முடியாது! தமிழக ராஜீவ் காங்கிரசில் இருந்தவரை ஒரு அறிக்கை கூட விட முடி யாமல் கையைக் கட்டிப் போட்ட மாதிரி தவித்தவன் நான். ஜனதா தளக் கட்சியில் அந்தக் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. எந்தத் தலைவரை யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் தாக்கி அறிக்கை விட வாய்ப்புகள் உண்டு. இதுவே எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரே ஒரு சீட் எனக்கு மட்டும் கேட்டிருக்கிறேன். குஜ்ரால் தருவதாகச் சொல்லியிருக்கிறார். அதற் காகத்தான் ஜனதாதளக் கட்சியில் இன்று சேர்ந்தேன்.

வைகோ :

கலைஞர் தி.மு.கவை விட்டு வெளியேறி விடுவதற்கு மாறனும், ஸ்டாலினுமே கார ணம் என்று இதுவரை நீங்கள் நம்பி யிருந்தீர்கள், இல்லையா? அது தவறு. நான் ம.தி.மு.க.வில் இருந்து பொன். முத்து ராமலிங்கத்தோடும், மதுராந்தகத்தாரோடும் வெளியேறி தி.மு.க.வில் என்னை இணைத் துக் கொள்ளப் போகிறேன் என்று அறிந்த உடனேயே, கலைஞர் என்னைக் கண்டு பயந்து, அலறிப் புடைத்துக் கொண்டு அண்ணா தி.மு.கவை நோக்கி ஓட்டம் எடுத் திருக்கிறார் என்பதுதான் உண்மை. இதைப் பேராசிரியர் மட்டுமே அறிவார். அவர் அறிவுறுத்தியபடி என் பெயரைப் பழையபடியே வை. கோபால்சாமி என்று அடுத்த கெசட்டில் அறிவிப்பு வெளியிடு வேன். அதைத் தடுக்கக் கலைஞர் முயன் றால், அதன் பின்விளைவுகளைச் சந்திக்க அவர் தயாராக இருக்க வேண்டும்.

தங்கபாலு :

எப்போது நான் நரசிம்மராவ் அவர் களை ஆதரித்து அறிக்கை விட்டு அவர் பின்னால் ஒளிந்து கொண்டேனோ, அன் றைக்கே சீதாராம் கேசரி என்னைத் தமிழக காங்கிரசின் தலைமைப் பதவியிலிருந்து விரட்ட முயற்சிகள் எடுத்தார். இப்போது தேர்தலில் நிற்க சீட்டும் தர மறுத் திருக்கிறார். நான் அவர் கீழே துணை



''அந்தத் தலைவர் என்ன இரண்டு இடத்துல போட்டி போடறார்?''

''கூட்டணித் தலைவி இவரோட கட்சிக்கு ரெண்டு சீட் கொடுத்துட்டாங்களாம்; இவர் கட்சியில்தான் இரண்டாவது ஆளே இல் லையே!''

— சீர்காழி வி.ரேவதி

அமைச்சராக இருந்த போது அவர் நாற் காலியை, அவருக்கும் தெரியாமல் எனக்கும் தெரியாமல் உடைத்ததுதான் காரணம் என்று இப்போது சொல்லுகிறார். இப் பேர்ப்பட்ட அபாண்டமான பழியைச் சுமந்து கொண்டு இனியும் இந்தக் கட்சியில் இருப்பதில்லை என்பதை லட்சோபலட்சம் தொண்டர்களின் கருத்தைக் கேட்டு அறிந்தேன். என்னை த.மா.கா.வில், இந்தத் தொண்டர்களோடு இணைத்துக் கொள்ளத் தீர்மானித்தேன். 40 இடங்களிலும் நாங்களே போட்டியிட்டு, நாற்பதிலும் நாங்களே வெல்லுவோம். இதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

— சாருகேசி

தெரசாவை ஏற்று, சோனியாவை மறுப்பதா..?



• கண்ணாடிப் பாத்திரக் கதை!



• ஒன், டூ, த்ரீ!

• இர. ரூபன், கோபாலசமுத்திரம்.

? எம்.ஜி.ஆர். பெயரை எல்லா கட்சியினரும் முன்வைத்துப் பிரசாரம் செய்கிறார்களே... உங்களுக்குக் குழப்பமாக இல்லையா?...

! எம்.ஜி.ஆர். ஏதோ ஒரு கட்சியின் ஏக போக உரிமை என்பது போல காட்டிக் கொண்டு வோட்டு அறுவடை செய்வதை விட அனைவருக்கும் அவர் சொந்தமாகி விடுவது எவ்வளவோ மேல். இதனால் கட்சிகள் சொந்தக் காலில் நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

• வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? சோனியாவைத் தொடர்ந்து ப்ரியங்கா, அவரைத் தொடர்ந்து ராகுல், அடுத்ததாக வதேராவும் பிரசாரத்துக்கு வந்து விடுவாரா...?

! வந்தாச்சே சார்! பேப்பர்ல போட்டோ பார்க்கலியா!

• கே. ஆர். உபேந்திரன், தஞ்சாவூர் - 6.

? நடிகர் ராமராஜன் பிரசாரம் செய்கிறார் என்று தெரிந்ததும் சவ ஊர்வலத்தில் வந்த சிலர் பிணத்தை அப்படியே போட்டுவிட்டு அவரைக் காணச் சென்று விட்டார்களாமே?!

! இதிலென்ன வியப்பு? சிம்ரனோ, ரம்பாவோ வந்திருந்தால் பிணமே கூட எழுந்து ஓடியிருக்கும்!

• ராஜி, கமுதி.

? ஜெயலலிதா நடக்க மலர்ப்பாதை போட ஆரம்பித்து விட்டார்களே...?

! தவறான பாதையிலிருந்து அவர் இன்னும் கொஞ்சம் கூட



• சங்கீத...



• ....சர்க்கஸ்!

விலகவேயில்லை என்பது தெரிகிறது.

• த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? ப்ரியங்கா, இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆவாரா...?

! நிச்சயம் ஆவார். பின்னால் காங்கிரஸ் தலைவர் ஆவதற்கும் பிரதமர் ஆவதற்கும் அதுதானே முதல் படி...?

• ரேவதிப்ரியன், ஈரோடு - 1.

? கதிரி - குன்னக்குடி - ஒப்பிடவும்....

! இருவருமே ஜனரஞ்சக ஜாம்பவான்கள்; விரல்களில் மந்திரம் வைத்திருப்பவர்கள். சங்கீத சர்க்கஸ் நிகழ்த்தும் இரைச்சல் மன்னர்களாகவும் அவர்கள் இருப்பதுதான் கஷ்டமாயிருக்கிறது.



• வந்தே விட்டார்



• அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? மதுரை தொகுதியில் வெற்றி பெற்றால், மத்தியில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் அமைச்சராகத் தம்மைச் சேர்க்கும்படி அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவிடம் கேட்டுக் கொள்ளப் போவதாகக் கூறுகிறாரே சு. சுவாமி...?

! கண்ணாடிப்

• ...மறுப்பும்!



• ஏற்றம்....



• விலகாத பிடிவாதம்



• பொதுச் சொத்து!

பாத்திரங்கள் விற்று, கற்பனையில் ராஜ குமாரியைக் கல்யாணம் செய்து கொண்டு, எட்டி உதைத்த அல்னாஷயர் கதைதான்!

● **எம். கதீஜா ஹனீஃபா, திருச்சி - 6.**

? எல்லா அரசியல் தலைவர்களும் தேர்தல் காலத்தில் சுறுசுறுப்பாக இருப்பது போல் மற்ற காலங்களில் சுறுசுறுப்பாக இருந்தால் நாடு முன் னேறும் அல்லவா...?

! வோட்டுக்காக உழைப்பது போல் நாட்டுக்காக உழைக்க யார் தயாராயிருக்கிறார் கள்!

● **என். உஷா தேவி, மதுரை - 9.**

? நம் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக் கைக்கும் பிறர் நம் மீது கொண்டுள்ள நம்பிக் கைக்கும் என்ன வித்தியாசம்...?

! பிறர் நம் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என் பதே நம் தன்னம்பிக்கையையும் பொறுப் புணர்ச்சியையும் ஒருங்கே உயர்த்துகிற விஷயந் தான்.

● **ஆர். அப்துல் சலாம், திருச்சி - 20.**

? அனைத்து மதத்தினருக்கும் பொதுச் சட்டம் கொண்டு வர பாடுபடுவோம் என்று பா.ஜ.க. தேர்தல் அறிக்கை கூறுகிறதே?

! பொது சிவில் சட்டம் என்பது அவசியமான ஒன்றுதான். அதற்கான அஸ்திவார வேலை களை முதலில் செய்ய வேண்டும் - எல்லா சமுதாயத்தினரையும் தரமான கல்வி மூலம் உயர்த்த வேண்டும். பின்னர் சட்டத் திருத்தங் கள் அமுலுக்கு வந்தால் பாதுகாப்புணர்வுக்கு பங்கம் ஏற்படாது.

● **வ. குலோத்துங்கன், கும்பகோணம்.** ❑

? பாராளுமன்றத் தேர்தலில், வடக்கே உள்ள தலைவர்களை முன்னிறுத்திப் பேசும் நிலை மாறி, வடக்கத்தித் தலைவர்களே தெற்கே இருக்கும் தலைவர்களை முன்னிறுத்தித் தேர் தலை சந்திக்கத் தயாராகிறார்களே...?

! தென்மாநிலங்களின் ஆதரவில்லாமல் நாடாளு மன்றத்தில் மெஜாரிடி பெற முடியாது என்பதை சமீப கால அரசியல் போக்குகள் உணர்த்தி யிருப்பதுதான் காரணம்...

● **கே. வி. சூர்யா, நல்லத்துக்குடி.**

? சினிமாவில் அதிகம் வீணாவது ஆண்களா? பெண்களா?

! இன்றைய தேதியில், சினிமா வில் அதிகம் வீணாவது அர சியல்தான்!

● **மணிமதியண்ணன், கப்பராயர்புரம்.**

? தேர்தல் பரபரப்பில் எல் லோரும் வீரப்பனை மறந்து விட்டார்களே?

! நீங்கள் எந்த வீரப்பனைச் சொல்கிறீர்கள்...?

● **வித்தகன், சென்னை - 44.**

? பகவத் கீதையைத் தம் வழி காட்டி நூலாகக் கொண்ட காந்தியடிகள், எந்த நிலை யிலும் அஹிம்சாவாதியாகத் திகழ்ந்தது முரண்தானே?

! பகவத் கீதையையும் காந்தி யத்தையும் நன்கு புரிந்து கொண் டால் அவற்றிடையே முரண்பாடு இல்லை என்பது தெரியவரும்.

● **கே. ஆர். வேலுச்சாமி, அன்னூர்.**

? நடிகைகள் இழுத்துப் போர்த்திக் கொண்டு நடித்தால், பத்திரிகைகளின் பாடு திண்டாட் டம்தானே...?

! ஆமாமாம்! 'இடைத் தேர்தல் வெற்றி'ப் படங் களைப் போட்டோ, 'ஷோ' காட்டியோ பத் திரிகை விற்க முடியாது அல்லவா!

● **செ. சல்மான், பாம்பன்.**

? அன்னை தெரசாவை நம் நாட்டவர் என்று ஏற்றுக் கொண்ட அரசியல் வாதிகள், சோனி யாவை மட்டும் வெளிநாட்டவர் என்று பரிகா சம் செய்வது எதைக் காட்டுகிறது?

! அயல்நாட்டவர் ஒருவர் இங்கு வந்து, தன்னலமற்ற சமுதாயப் பணியாற்றுவது வேறு; அரசியலில் புகுந்து - அதுவும் குறுக்கு வழியில் - நாட்டை ஆள்வது வேறு. - இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தி யாசம் உள்ளது!

● **செ. ஆசைத்தம்பி, தாரமங்கலம் அஞ்சல்.**

? ரவுடிகள், திருடர்கள், ஏமாற்றுக்காரர்கள், ஊழல்வாதிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து மாநாடு போட்டால் என்ன பேசுவார்கள்?

! அரசியல் பேசுவார்கள்! ◙

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
வ. குலோத்துங்கன்,
57 G, சிங்காரந்தெரு வடக்கு,
கும்பகோணம் - 612 001.

நீங்கள் கேட்டவை - தராசு

22.2.98 கல்கி

பெரியகுளம் தொகுதி:

ஜெயித்தாலும் தோற்றாலும்....

பெரியகுளம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் சேடப்பட்டி முத்தையாவின் பிரசாரம் எப்படியிருக்கிறது என்று விசாரித்தபோது, "ஏதோ நான்கு பேரோடு தெருத் தெருவாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்!" என்று சொன்னார் தேனியைச் சேர்ந்த நண்பர் ஒருவர்.

அ.இ.அ.தி.மு.க.விலிருந்து திடீரென்று நீக்கப்பட்ட கொள்கைப்பரப்புச் செயலாளர் செல்வேந்திரன் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்தான். அவர் தி.மு.க.வில் இணைந்து விட்டதால் இந்த வட்டாரத்தில் அ.தி.மு.க. கூடாரம் கொஞ்சம் ஆடித்தான் போயிருக்கிறது.

இது தவிர, ம.தி.மு.க. தளபதி பொன். முத்துராமலிங்கம் தி.மு.க.வுக்குத் தாவியது மட்டுமல்லாமல், தொகுதியிலேயே தங்கி தி.மு.க. வெற்றிக்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். எனவே தி.மு.க. வேட்பாளர் காந்திமதியின் வெற்றி என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்று என்று சொல்கிறார்கள் பகுதி மக்கள்.

கிட்டத்தட்ட பதினொரு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட பெரியகுளம் தொகுதியில், முக்குலத்தோரும், நாயக்கர்களும் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். நாயக்கர் இனத்தைச் சேர்ந்தவர் காந்திமதி. அது தவிர பெண்மணி, படித்தவர் என்றெல்லாம் கூடுதல் தகுதிகள் இருக்கின்றன. திருப்பரங்குன்றத்தில் பிளாஸ்டிக் ஒயர் தொழிற்சாலை நடத்தி வரும் இவருக்கு சீட்டு கிடைக்க அழகிரியின் சிபாரிசும் காரணம் என்கிறார்கள். பொன்.முத்து, செல்வேந்திரன் போன்ற முக்குலத்தோர் பிரமுகர்கள் தி.மு.க.வுக்கு வேலை செய்வதால் அவர்களது வோட்டுகளும் தி.மு.க.வுக்குத்தான் கிடைக்கும்.

தி.மு.க. வேட்பாளர் காந்திமதியின் அப்பா கோபால்சாமி, தி.க., தி.மு.க. காரர். *1962*ல் திருப்பரங்குன்றத்தில் தி.மு.க. மாநாட்டை முன்னின்று நடத்தியவர். காந்திமதியின் சகோதரர்களில் ஒருவரான தளபதியும் கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். தளபதி, இப்போது சேடப்பட்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். "சென்ற சட்டமன்றத் தேர்தலில் அண்ணனிடம் தோற்ற சேடப்பட்டி, இந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் தங்கையிடம் தோற்கப் போகிறார்" என்று மக்கள் கிண்டலடிக்கிறார்கள். ஆனாலும் "செல்வேந்திரன் விலகியதால் கட்சிக்குப் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை. அவர் தனி மரமாகத்தான் சென்றிருக்கிறார்" என்று நம்மிடம் சொன்னார், அ.தி.மு.க. மாவட்ட மாணவரணி அமைப்பாளரான விஜய ராமசாமி.

சென்ற முறை தி.மு.க.



• காந்திமதி

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஞான குருசாமி மீது புகார்கள் இருந்ததால் வேட்பாளரை மாற்றி விட்டார் கலைஞர். அதுவும் படித்த பெண்ணாக நிற்க வைத்து இருப்பதால் நாய்க்குலத்தின் வாக்கு வங்கி தி.மு.க.வுக்கு ஆதரவாகத் திரும்ப வாய்ப்பு உண்டு. அ.தி.மு.க.வை பொறுத்த வரை ஜெயலலிதாவின் பிரசாரத்தைத் தான் முழுக்க நம்பியிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் மதி.மு.க.வுக்கும் செல்வாக்கு உண்டு. நாயக்கர் வோட்டுக்களை வளைத்துப்போட வைகோவின் உதவியை நாடியிருக்கிறார் சேடப்பட்டி.

"சேடப்பட்டி இருமுறை இந்தப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் தொகுதிக்கு எந்தப் பலனும் இல்லை. இன்னும் கேட்டால் சுயநலத்தின் காரணமாக சில வளர்ச்சி வேலைகளைத் தடை செய்தவர் சேடப்பட்டி. தி.மு.க. வேட்பாளரும் நன்கு அறிமுகமானவரல்ல" என்று சொன்னார் டி.கல்லுப்பட்டியில் நாம் சந்தித்த பூச்சிமருந்து கடைக்காரர் ஒருவர்.

இன்னொருவர் சொன்னார்: "சேடப் பட்டி ஜெயித்தாலும் ஒரு சாதாரணப் பெண்ணிடம் போட்டியிட்டு ஜெயித்ததில் பெருமை கொண்டாட முடியாது. தோல்வியுற்றாலும் ஒரு சாதாரணப் பெண்ணிடம் போய் தோற்று விட்டோமே என்று கூடுதலாக வெட்கப்பட வேண்டும்!"

பாவம், சேடப்பட்டி!



• சேடப்பட்டி

கல்கி-சரவணா ஸ்டோர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு பட்டுப் புடைவை!

பட்டுப் புடைவையைப் பெறுவதற்கான இந்த வாரக் கேள்வி:

தொகுதி நிலவரம் பற்றிக் கூறிய ஓர் அரசியல்வாதி நமது நிருபர்களைத் 'தலைவரே' என்று அழைத்தார். யார் அந்த அரசியல்வாதி?

இந்த இதழ் முழுவதையும் கவனமாகப் படித்துவிட்டு அந்த அரசியல்வாதியின் பெயரைக் கண்டுபிடித்துக் கீழுள்ள கூப்பனில் எழுதி அனுப்புங்கள்.

ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். அத்தனை கூப்பன்களும் ஒரிஜினலாக இருக்க வேண்டும். ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.

கூப்பன்கள், ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை-600 097 என்ற முகவரிக்கு வந்து சேரக் கடைசித் தேதி: 2.3.98.

உறையின் மேல் 'பட்டுப் புடைவைப் போட்டி - 7' என்று தவறாமல் குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பட்டுப்புடைவை பரிசுப் போட்டி - 7

நமது நிருபர்களை 'தலைவரே' என்று அழைத்த அந்த அரசியல்வாதியின் பெயர் :

....


பெயர்: ....

முகவரி: ....

....

....

....



வில்லை. அது வலதுபுறம் போயிற்று! பஸ்ஸோ மிக அருகில் வந்து விட்டது. வேக மாக வந்த டிரைவர் சட்டென்று பஸ்ஸை நிறுத்தினார். நேராக கடுங்கோபத்துடன் இறங்கி வந்தார். கிராமங்களில் எல்லாம் பஸ் என்பது பெரிய விஷயம். அவர் வண்டி ஓட்டுபவனை நாலு அறை விட்டிருப்பார்!

''ஏய்!'' என்று சொல்லிக் கொண்டு வந்தபோது என் தாய் கையெடுத்துக் கும்பிட்டு, "ஐயா அவன் சின்னப் பையன். மாடு அவன் சொன்னபடி கேட்கவில்லை. நீங்கள் மன்னிக்கணும்" என்றார். அவ்வளவுதான். பஸ் டிரைவரும் கண்டக்டரும் அப்படியே ஒருகணம் நின்றார்கள். திரும்பிப் போய் விட்டார்கள். வண்டியை ஒரு பக்கமும் ஓட்டாமல் நிறுத்து என்று என் தாய் சொன்னார்கள்.

பாம்புடன் நினைத்தும்..

என் தாய்க்கு கையெழுத்துக் கூடப் போடத் தெரியாது. எனினும் படிப்பின் மேன்மையை உணர்ந்தவர். எனது ஆசிரியர் ரமணி அய்யர் வீட்டுக்கு வரும்போதெல்லாம் முதலில் திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை போடுவார். வீட்டில் உள்ளவர்களிடம் பேசிக் கொண்டிருப்பார். என் தாய், "ஐயா அவன் கண்களைத் திறந்து விடுங்கள். அவன் நன்றாகப் படிக்க வேண்டும்" என்பார்கள்.

அவர்கள் அதிகம் படிக்கவில்லையே தவிர அவர்களுக்கு உலக ஞானம் அதிகம். பிற விஷயங்களைப் பற்றி முடிவெடுப்பதில், நல்லவர்கள் கெட்டவர்கள் என்று புரிந்து கொள்வதில் மிகுந்த திறமை கொண்டவர். எல்லாவித முடிவுகளும் என் தாய் சொல்லி விட்டால் சரி. என் தந்தை கடை விஷயங்களையும் ஊர் விஷயங்களையும் மட்டுமே கவனிப்பார்.

எங்கள் வீட்டில் ஒற்றை மாட்டு வண்டி இருந்தது. மாயவரம் போய் விட்டு நானும் என் தாயும் வந்து கொண்டிருந்தோம். இரவு மணி எட்டு இருக்கும். வண்டியை ஓட்டுபவன் ஒரு சிறு இளைஞன். அவனைப் பார்த்தாலே, மாடு அவனை ஓட்டப் பார்க்கும்! பின்னால் பஸ் வந்து கொண்டிருந்தது. பஸ்ஸிற்கு இடம்கொடுப்பதற்காக வண்டியை இடதுபுறம் ஓட்டினான். மாடு கேட்க

பஸ் எங்க
ை ள க்
கடந்து போயிற்று.

சமயோசிதமாக அவர் அந்த சம்பவத்தைக் கையாண்ட விதத்தை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

எங்கள் தெருவில் யார் வீட்டில் பிரசவம் ஆனாலும் என் தாயைத்தான் கூப்பிடுவார்கள். பிரசவத்திற்குத் துணையாக உதவுவார். அதே போல அவர்கள் வீட்டில் குழந்தைகளுக்கு ஏதாவது நோய் என்றாலும் அங்கே போய் இரவு பூராவும் அவர்களோடு கண் விழித்துக் கொண்டிருப்பார்; தைரியம் சொல்லிக் கொண்டிருப்பார்.

அதே போல என் மனைவியும் இருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எங்களுக்குப் பின்னால் அமெரிக்காவுக்கு வந்த திருமணமான பெண்கள் பலருக்கும் பிரசவித்த குழந்தையை எப்படிக் குளிப்பாட்டுவது, வளர்ப்பது என்பதெல்லாம் தெரியாது. என் மனைவிதான் கூப்பிட்ட வேளைக்குப் போய் நிற்பார்.

ஒரு சமயம் அருகிலுள்ள என் நண்பன்

என்னைச் செதுக்கிய எண்ணங்கள் – 7

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

வீட்டில் பாம்பு உள்ளே வந்து விட்டது. பெரிய பாம்பு. ஐந்தாறடி நீளம் இருக்கும். நாங்கள் சிறுவர்கள். எங்களால் அடிக்க முடியவில்லை. ஓர் இருண்ட அறைக்குள் புகுந்து விட்டது. எனக்குப் பத்து வயது இருக்கும். கையில் ஒரு கழியை எடுத்துக் கொண்டு உள்ளே போனேன். இடுப்பளவு உயரமுள்ள மரப் பெட்டிக்குப் பின்னால் தான் பாம்பு வேகமாகச் சென்றது. ஒரு கழியால் அதைக் குத்தினேன். ஆனால் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள் பாம்பு என் கால்களுக்கிடையே புகுந்து வெளியேறி விட்டது. என்னை அது கடித்திருக்கலாம். எனக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. பயந்து போய், வெளியே ஓடினேன். என் தாயிடம் சொன்னேன்.

என் படபடப்பையும் நான் பயந்ததையும் கண்ட என் தாய் என்னை அணைத்துக் கொண்டு திட்டினார்கள்.

“பாம்பைப் போய் அடிக்கலாமா? நம் குடும்பத்தில் நாக தோஷம் இருக்கிறதென்று நாக பூஜையெல்லாம் செய்தோமே. உனக்கும் அண்ணனுக்கும் முன்னால் நான்கு குழந்தைகள் செத்துப் போனார்களே. பாம்பு நமக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கிறதே, நமக்கு ஒரு தீங்கும் செய்யாது என்று. நீ போய் அதை அடிக்கலாமா?'' என்று கோபித்துக் கொண்டார்கள். எனக்குப் பயம் தெளிய, 'கொழு மோர்' காய்ச்சி குடிக்கச் சொன்னார்கள். அதாவது அடுப்பு நெருப்பின் இரும்புக் கரண்டியை அது கனிந்து சிவப்பாகும் வரை சொருகி இருப்பார்கள். பின் அதை எடுத்து ஒரு தம்ளர் மோரில் சொருகுவார்கள். 'புஸ்'ஸென்று நீராவி கிளம்பும். அதுதான் கொழு மோர். அந்தக் காலத்தில் பயத்தைப் போக்குவதற்கு செய்யும் பரிகாரம் இது.



அதன் பிறகு நான் பாம்பை அடிப்பதில்லை. கொல்லையில் எப்போதாவது பாம்பு தென்பட்டால் என் தாயிடம் போய்ச் சொல்வேன். அவர் உடனே வந்து பார்த்துக் கும்பிடுவார். “போ! போ! யாருக்கும் கெடுதல் செய்யாதே போய் விடு'' என்று சொல்வார். அதுபாட்டுக்குப் போய் விடும்.

எங்கள் கொல்லையின் கோடியில் ஒரு பாம்புப் புற்று இருந்தது. அதற்கு பால் வைத்து பூஜை செய்கிற வழக்கம் எங்கள் குடும்பத்தில் இருந்தது.

சமீபத்தில் நான் வார்தாவுக்குச் சென்றிருந்தேன்.

மகாத்மா காந்தி வாழ்ந்த இடம். அதற்கு முன் வெறும் புதராக இருந்ததாம். அதை எல்லாம் அழித்து அவர்கள் வாழ்வதற்கு வீடு கட்டி இருக்கிறார்கள். நமது ஊர் போல ஓட்டு வீடு. அங்கே பாம்பு நடமாட்டம் ஆரம்ப காலத்தில் அதிகமாக இருந்திருக்கிறது. அங்கே வாழ்ந்த ஒரு பெரியவர் சொன்னார். “பாம்பை யாரும் அடிக்கக் கூடாது என்று காந்தி சொல்வார். பாம்புக்காக ஒரு பெட்டியை வீட்டுக்கு அப்பால் வைத்திருந்தார்கள். பாம்பைப் பிடித்து அந்தப் பெட்டியில் போட்டு விடுவார்கள். பிறகு அந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய்த் தொலைவில் உள்ள காட்டுப் பிரதேசங்களிலே விட்டு விடுவார்கள்'' என்றார்.

அஹிம்சையைக் கடைப்பிடிப்பவர் – “பாம்பைக் கூட அடிக்கக் கூடாது'' என்று சொல்லக் கேட்கும் போது, நாம் நமது அனுபவ அறிவைக் கடந்து எங்கோ போய் விடுகிறோம். என்னுடைய தாயார் சொன்ன வாசகம், “பாம்பு சத்தியம் செய்து கொடுத்திருக்கிறது'' என்பது இன்றும் என் மனத்தை விட்டு அகலாத வாக்கியம். அதே சமயம் எனது விஞ்ஞான அணுகுமுறை பாம்புக்கு பய உணர்வும் பத்திரமாக ஓட வேண்டும் என்ற உணர்வும் இருப்பது போல நியாய உணர்வு, தீர்மானிக்கும் உணர்வு எல்லாம் இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டே

யிருக்கிறது.

நாங்கள் அப்போது அமெரிக்காவில் குடியிருந்தோம். பெரிய வீடு. புதிய வீடு. லூசியானாவில் லாபயெட் என்ற நகரம். வீட்டின் விருந்தினர்களை வரவேற்கும் ஹாலில் உட்கார்ந்தால் அழகாகத் தோற்ற மளிக்கும். தோட்டத்தைப் பார்க்கலாம். பின் பக்கம் பூராவும் கண்ணாடிக் கதவுகள், ஜன்னல்கள்.

புதிய வீட்டிற்குக் குடிபுகுந்த மறுநாள். நான் வெளிச்சம் பெற வேண்டி காலையில் கண்ணாடி ஜன்னலுக்கருகே உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தேன். ஏதோ "டொக் டொக்"கென்று சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு பாம்புக் குட்டி கண்ணாடி ஜன்னல் என்று தெரியாமல், "என்னை உள்ளே விடு" என்று கண்ணாடி ஜன்னலைக் கொத்திக் கொண்டிருந்தது. நான் பாம்பைப் பார்த்த அதிர்ச்சியில் எழுந்து ஓடினேன்.

ஒரு கணத்தில் சுதாரித்துக் கொண்டேன். என் இளைய மகன் அசோகனைக் கூப்பிட்டேன். இரண்டு பேருமாக அதை ஓர் அட்டைப் பெட்டியில் பிடித்துப் போட்டோம். காரின் 'டிக்கி'யில் வைத்து வெகு தொலைவில், காட்டுப் பிரதேசத்தில் கொண்டு விட்டு வந்தோம்.

ஒரு சமயம் பாண்டிச்சேரிக்குப் போயிருந்தேன். எனது நண்பர் ஒருவர் ஒரு குறி சொல்லும் தன்மை கொண்ட இளைஞரை அறிமுகப்படுத்தினார். என் மனைவி அப்போதுதான் அமெரிக்காவில் புற்றுநோய்க்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டு திரும்பி வந்திருந்தார்.

அந்தப் பாண்டிச்சேரி இளைஞர் கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்தார் ஒருகணம். எடுத்த எடுப்பில், "ஐயா! உங்கள் மனைவிக்கு கனவில் பாம்பு வந்ததா?" என்று கேட்டார். "அதெல்லாம் ஒன்றுமில்லையே!" என்று பதில் சொன்னேன். அவர் தொடர்ந்து சொன்ன விஷயங்கள் எல்லாம் எனக்குச் சம்பந்தமில்லாதவையாக - தவறாகப்பட்டன. நான் எழுந்து விட்டேன். அதன் பிறகு அதை மறந்தே போய் விட்டேன்.

ஒரு பத்துப் பதினைந்து நாள் கழித்து காரில் செல்லும் போது என் மனைவியைப் பார்த்துக் கேட்டேன். "நீ ஏதாவது கனவு கண்டாயா?"

"ஆமாம். ஒரு பத்து நாட்களுக்கு முன், ஒரு பெரிய பாம்பு வந்தது. வீட்டை விட்டு வெளியே போயிற்று. வீட்டுக்கு வெளியே போட்டிருக்கும் தென்னங்கூரை போட்ட சாய்ப்பில் படுத்துக் கொண்டது. அதன் அருகில் இரண்டு குட்டிகள் குண்டு குண்டாக இருந்தன."

எனக்குத் திக்கிட்டது. பாண்டிச்சேரி மனிதர் சொன்னது நினைவுக்கு வந்தது.

என் மனைவியின் உடல்நிலை காரணமாக நாங்கள் மீண்டும் அமெரிக்கா சென்ற போது, என் மனைவிக்கு வேறிடத்தில், மூச்சுக் குழலுக்கு அருகில் மீண்டும் கட்டி வளர்ந்திருப்பதாகவும் அதை அறுவை சிகிச்சை செய்ய முடியாதென்றும் சொல்லி விட்டார்கள்.

என் மனைவி சகஜமாக கனவு காண்பவரோ அது பற்றிப் பேசுபவரோ அல்ல. ஆனாலும், "ஏதோ ஒன்று" நமக்கு சில விஷயங்களை ஆழ்மனத்தின் மூலம் - கனவு மூலம் - சில அடையாளங்களின் மூலம் - நமக்கு ஏதோ ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கிறது.

நமது நாட்டில் பதஞ்சலியின் குண்டலினி யோக சூத்திரத்திலிருந்து, வழிபடும் சிவன் கோவில் - சிவனைச் சுற்றி பாம்பு வடிவத்தில் ஒரு செப்பு உருவ அமைப்பை அணிவிப்பது வரை - எல்லாம் பாம்பு சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆற்றங்கரையோரத்தில் பாம்புச் சிலை பதித்த கற்களைப் பார்க்கிறோம்.

இன்று மனவியல் அறிஞர்கள் நமது ஆழ் மனத்திற்கும் நமது பிரபஞ்ச மனம் எனப்படும் ஏதோ ஒரு சக்திக்கும் தொடர்பிருப்பதைப் பற்றி ஆச்சரியமான விஷயங்களைச் சொல்கிறார்கள். இதுபோன்ற நமது நம்பிக்கைகளை "சமுதாய மனத்தின் அறிவாற்றல் (Collective Consciousness) என்று குறிப்பிடுகிறார்கள். அவை அடையாளங்களாக (symbols) வந்து நமக்கு உதவுகின்றன என்கிறார்கள். பாம்பு போன்ற தீமை செய்யும் ஜீவன்களையும் தனது நண்பர்களாகப் பாவித்து, இப் பிரபஞ்சத்தின் எல்லா ஜீவன்களுடனும் பொருள்களுடனும் மனிதன் இசைந்து வாழக் கற்றுக் கொண்டதன் அடையாளங்கள் - செயல்முறைகள்தான் - பாம்பு வழிபாடு.

"காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்." - பாரதி.

(தொடரும்)

பெண்கள் தெய்வத்தின் அடிமைகளா?

காபூலில் இருக்கிற முக்கிய மருத்துவமனைகளில் இனிமேல் பெண் நோயாளிகளுக்கு அனுமதி இல்லையாம்! எல்லாம் தாலிபன் கோஷ்டியின் சட்டம். லேடீஸுக்காகப் போனாப் போகுதுன்னு ஒரு பழைய ஹாஸ்பிடலை, ஊருக்கு ஒதுக்குப்புறமா, ஒதுக்கியிருக்காங்க. அங்கே ஆண் வாடையே கூடாதாம் - டாக்டர்கள் உட்பட! இங்கே தண்ணீர், மின்சாரம், அறுவை சிகிச்சைக்கான வசதிகள் எதுவுமே போதிய அளவுக்குக் கிடையாதாம். என்ன ஒரு அக்கிரமம் பாருங்க! இந்த மருத்துவமனைக்குள்ளே தனது குழு அனுமதிக்கப்படணும்னு கட்டாயப்படுத்தினார் எம்மா போனினோ - ஐரோப்பிய யூனியன் அமைப்பைச் சேர்ந்த ஒரு குழுவின் தலைவி. ஆப்கானிஸ்தானில் பல ப்ராஜெக்ட்களுக்கு ஐரோப்பிய யூனியன் நிதி உதவி செய்திருக்கு. அந்தப் பணமெல்லாம் ஒழுங்கா செலவழிக்கப்பட்டிருக்கான்றதை நேரடியா அறிந்து கொள்ளத்தான் அந்தக் குழு ஆப்கானிஸ்தானுக்குப் போச்சு. அப்போதான் அந்த லேடீஸ் ஒன்லி மருத்துவமனைக்குள்ளே போக விரும்பினார் எம்மா. 'யம்மா போனினோ!' வாம்மான்னு ஆரத்தியா எடுத்துருவாங்க அந்த ஊர்ல...?!

"ஒரு பெண்ணின் தலைமையில் நம்மை கண்காணிக்க ஒரு குழுவா?"ன்னு ஏற்கெனவே தாலிபன் ஆட்களுக்கு இருந்த கோபம், இப்போ இன்னும் விர்ருனு ஏறிச்சி. இருந்தாலும் கடன் கொடுத்த மகராசனுங்களாச்சே! வேண்டா வெறுப்பா அனுமதி தந்தாங்க. சும்மா இல்லே. உடம்பு முழுதும் ஒரு அங்கியும், முகத்தை மறைக்கும் நீல ஸ்கார்பும் அணிஞ்சுக்கணும்னாங்க. ஒதுக்கிட்டு உள்ளே நுழைஞ்சது அந்தக் குழு. ஆனா போதாத காலம், அவங்க குழுவிலிருந்து ஒருத்தர் ஹாஸ்பிடலை ஒரு போட்டோ எடுத்துட்டார்.

உடனே ஒரே களேபரம்! போலீஸ் வந்திரிச்சி. யாரும் வெளியே போக முடியாத அளவுக்கு ஹாஸ்பிடல் கதவை சாத்திட்டாங்க. கொஞ்ச நேரத்தில் சிவப்பு டயோடா கார்களில் தாலிபன் குழுவினர் வேகமா சினிமா க்ளைமாக்ஸ் மாதிரி வந்து, "நீங்க இரான் நாட்டு ஒற்றர்கள்"னு சொல்லிக்கிட்டே குழுவினரை துப்பாக்கிக் கைப்பிடியால் மாறிமாறித் தாக்கினாங்க. உடைந்த நாற்காலிகளை எடுத்து வீசினாங்க. பிறகு சுகாதார அமைச்சர் தலையிட்டு, மன்னிப்புக் கடிதத்துக்கு ஏற்பாடு செய்ய, விஷயம் அப்போதைக்கு முடிஞ்சுது. இதிலே ஒரு விஷயம் பாருங்க. மன்னிப்புக் கடிதம் கொடுத்தது எம்மா போனினோ!

ஆப்கன் நிலவரம் இப்படி. கானா தெரியுமா கானா? உடனே "அண்ணாநகர் ஆண்டாளு அயனாவரம் கோபாலு ஐ.சி.எப்ல எடுக்கிறாண்டா தண்டாலு"ன்னு 'தேவா'ரம் பாடக்கூடாது. ஆப்பிரிக்கா - அதான் 'இருண்ட கண்டம்'னுவாங்களே, அதிலே ஒரு 'துண்டம்'தான் இந்த கானாங்கிற நாடு.

அங்கே வசிக்கிற 'அப்லா கொடர்'ங்கிற பன்னெண்டு வயசு சிறுமியோட வாழ்க்கையைப் பற்றிக் கேள்விப்பட்டதும், என் கண்ணிலே நயக்ரா கொட்ட ஆரம்பிச்சிடுச்சி.

அந்த நாட்டின் பழைமையான மதங்களிலே ஒண்ணு ஜுஜு. அந்த மத

பெண்ணுலகம்

குரு ஒருவர் வீட்டிலே வேலை செய்துகிட்டிருக்கா அந்தப் பொண்ணு. சமைப்பதிலே இருந்து விவசாயம் செய்வது வரை அவளோட பொறுப்பு. இதெல்லாம் தவிர, வேறு ஒரு வகை உடல் உழைப்புக்கும் அவ தயாராக இருக்கணும். அந்த மதத் தலைவரின் 'எல்லா' விருப்பங்களுக்கும் இணங்கியாகணும்!

"என் அப்பா என்னை இங்கே விட்டுட்டுப் போயிட்டாரு. ஆனா ஏன் இப்படிச் செய்தார்னு தெரியல்லே. எங்கக் குடும்பத்திலே யாரோ ஏதோ தப்பு செய்துட்டாங்களாம். அதனால்தான் என்னை இங்கே விட்டுட்டாங்கன்னு அவள் சொல்லியிருக்கா!



ஏதோ இந்தச் சிறுமி மட்டுமில்லே, இதுமாதிரி பல ஆயிரக் கணக்கான பெண்கள் அடிமைகளாய் இருக்காங்க கானாவின் தென்கிழக்குப் பகுதியிலே! இவங்களை யெல்லாம் 'ட்ரோ கோஸி'ன்னு கூப்பிடறாங்க. அதாவது "தெய்வத்தின் அடிமைகள்"னு அர்த்தம். அட நம்ம நாட்டு தேவதாசிகள் மாதிரியான்னு கேட்கறீங்களா? அப்படி ரெண்டையும் ஒப்பிட முடியாது.

தேவதாசிகள் முறை இங்கே ஒழிஞ்சிடுச்சி. தவிர நடனம்ங்கிற அற்புதமான கலையை அவங்க வளர்த்தாங்க.

ஆனா கானாவிலே இந்தப் பெண்களுக்கு எந்தவிதக் கலையும் கத்துக் கொடுப்ப தில்லை. அது பரம்பரைத் தொழிலும் இல்லே. அந்தப் பகுதியிலே இருக்கிற யாராவது தெய்வக் குற்றம் செய்ததா நினைச்சா, அவங்களே தங்களுடைய உறவுக்காரச் சிறுமி ஒருத்தியை இப்படி மத குருவிடம் அனுப்பிச்சுடுவாங்க. அப்போதான் கடவுளின் கோபத்திலிருந்து தப்பலாமாம்!

ஐ.நாவில் மனித உரிமை அமைப்பு இது பற்றிக் கடுமையாக ஓர் அறிக்கை விட்டிருக்கு. பிரயோஜனமில்லை! அப்படி அவர்கள் சிரமம் எடுத்து மீட்ட சில சிறுமிகளையும் கூட அவங்களுடைய அப்பா, அம்மா திரும்பவும் சேத்துக்க மறுத்துட்டாங்களாம்!

என்ன கொடுமைடா இது!

— சுமி





கேட்டறியுங்கள்
உங்கள்
புதிய
ஜாதகபலன்
ஜோதிட
போன்
இந்த
வாரபலன்கள்
0011 222 222 0+
31 32 33 34 35 36
37 38 39 40 41 42
மன
ஜோதிடம்
உங்கள் வருங்கால
ரகசியங்களை
அறிந்திடுங்கள்
0011 222 222 030
பொருத்தம்
0011 22 2222 868
பட்சி சாஸ்திரம்
0011 222 222 025



தலைவா! தலைவா!

"கூட்டணிக் கட்சித் தலைவர் கடைசி நேரத்திலே இப்படிக் கழுத்தை அறுப்பார்னு நினைக்கலே...."

"ஏன், என்ன செய்துட்டார்?"

"நாற்பது தொகுதியிலேயும் நம்ம கட்சியையே நிற்கச் சொல்லிட்டு, தப்பிச்சுக்கிட்டார்!"

— கபிஸ்தலம் எஸ். இராஜேந்திரன்

"அந்தத் தலைவர் என்ன இரண்டு இடத்துல போட்டி போடறார்?"

"கூட்டணித் தலைவி இவரோட கட்சிக்கு ரெண்டு சீட் கொடுத்துட்டாங்களாம்; இவர் கட்சியிலதான் இரண்டாவது ஆளே இல்லையே!"

— சீர்காழி வி. ரேவதி

"தலைவர் வோட்டுப் போடப் போய், தேர்தல் பூத் ஏஜெண்டுகிட்ட ஏதோ கேட்கிறாரே.... என்னது?"

"தன்னோட கட்சிச் சின்னம் என்னன்னு!"

— சீதாமகன்

"ஏன், தலைவரு அந்தப் பத்திரிகை மீது ரொம்பக் கோபமா இருக்காரு?"

"அவருடைய தேர்தல் அறிக்கையை 'ஜோக்ஸ்' பகுதியில பிரசுரம் பண்ணிட்டாங்களாம்!"

— தே. கண்ணன்

"தலைவர், ஏன் கோபமா இருக்கார்?"

"டிக்கெட் கிடைக்கலையாம்!"

"அதனால் என்ன! அடுத்த ஷோ பார்க்க வேண்டியதுதானே!"

— பச்சை மணிமைந்தன்

"தலைவர் ஏன் வேற தொகுதியில போட்டியிடுறாரு?"

"பழைய தொகுதியில இருந்த புறம்போக்கு நிலம் எல்லாம் தீர்ந்து போச்சாம்."

— எஸ். கே. மூர்த்தி



மீன ராசிக்காரரான கார்ட்டூனிஸ்ட் நடனத்துக்கு இது வளர்ச்சியான வாரமாம். வெளி நாட்டுத் தொடர்பு மூலமா அதிர்ஷ்ட வாய்ப்புகள் இருக்குதாம்! கலக்குங்க சார்!

நடக்குமென்பார், நடக்கும்!

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*




அட்டகாசமா ஆரம்பிக்குது, இந்த வாரம். குறிப்பா பெண்களுக்கு. நீண்ட நாள் ஆசை, ஏக்கம் ஏதாவது இருந்திச்சின்னா, இந்த வாரம் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான சாத்தியங்கள் நல்லா தெரியுது. சிலருக்குத் திருமணம் கைகூடி வரும். வெளியூர் அல்லது வெளிநாட்டுலேருந்து மனமகிழ்ச்சி உண்டாக றாப்பல ஏதாச்சும் நல்ல செய்தி கிடைக்கும். மாணவர்கள், அரசியல்வாதிகளுக்கு வளர்ச்சி தெரியற வாரம். கணவன்-மனைவி உறவு, சுமுகமா, சந்தோஷமா இருக்கும். தாராளமான பணப் புழக்கமும் உண்டு.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*



கொஞ்ச நாளா இருந்து வந்த மனக்குழப்பம், பிரச்னைகள்லேருந்து விடிவு கிடைக்கும் சார்! வெற்றி வாய்ப்புகள் தேடிவரும். குடும்பத்துல ஏதாவது குழப்பம் இருந்து வந்ததுன்னா, பேச்சுவார்த்தை மூலமாவே தீர்த்துக்கலாம். தாயார் உடல் நலத்துல கொஞ்சம் அக்கறை காட்டுங்க. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு இது சாதகமான வாரம். பாராட்டுக்குப் பஞ்சம் இருக்காது. வாரக் கடைசில தோள், இடுப்புப் பகுதில ஏதாவது உபாதை வந்து நீங்கும். அரசியல்வாதிகளுக்கு இது ஆர்ப்பாட்டமான வாரம். புகழ் கூடும். பெருமை சேரும்.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*



திட்டமிட்டுக் காரியம் செய்யற உங்களுக்கு இந்த வாரம் உற்சாகத்துக்குக் குறைவு இருக்காது. ஏன்னா, ஈடுபடற எல்லா விஷயத்துலயுமே வெற்றிதான்! அப்புறம் கேட்கணுமா! நண்பர்களால இந்த வாரம் சில உபயோகமான உதவிகள் கிடைக்கும். வெளியூர் பயணங்களாலயும் ஆதாயம்தான்! வீட்டு உபயோகப் பொருள்கள் சிலது வாங்குவீங்க. ஷேர், ஸ்பெகுலேஷனெல்லாம் லாபம் தரும். வீடு, மனை வாங்கற யோகம் சிலருக்கு இருக்கும். சிறு விபத்துக்கு சாத்தியம் இருக்கு. டூ-வீலர்ல போறவங்க கவனமா இருங்க.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*



ரொம்ப விழிப்போட இருக்க வேண்டிய சமயம். புதிய நண்பர்கள், அந்நியர்களோடு பழகும் போது கவனமா இருங்க. கூட இருந்தே குழிபறிக்க ஒரு கோஷ்டி தயாரா இருக்குது, உங்களைச் சுத்தி! பொருளாதார நிலைமை சீரா இருக்காது. கடன் வாங்காதீங்க. என்ன கஷ்டம் வந்தாலும்! எதிலும், யார் கிட்டேயும் அதிகம் எதிர்பார்க்காதீங்க. ஏமாற்றம்தான் மிஞ்சும்! வீட்டுல சண்டை சச்சரவுகள், மனக் கஷ்டம், கருத்து வேறுபாட்டால மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கறது எல்லாம் அப்பப்ப எட்டிப் பார்க்கலாம்! ரொம்ப உணர்ச்சிவசப் படாதீங்க. எல்லாம் பத்து நாள்ல சரியாப் போயிடும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*




குரு மாற்றத்தால, உங்க கஷ்டங்கள் நீங்கி, நல்ல பலன்கள் வரத் தொடங்கற நேரம் இது. நிர்வாகத் திறமை, சொல்வன்மை எல்லாம் பளிச்சிடும். கௌரவம் உயரும். வீட்டுலயும் சரி, வெளியலயும் சரி – நீங்க சொல்றதை மத்தவங்க கேட்பாங்க. கூட்டுத் தொழில் செய்யறவங்களுக்கு இந்த வாரம் ரொம்ப முக்கியமான திருப்பம் ஒண்ணு இருக்கும். நல்ல திருப்பம்தான்! வெளிநாடு போக சிலருக்கு வாய்ப்பு கூடிவரும். சிலருக்கு வெளிநாட்டுத் தொடர்புகளால ஏதாவது நல்லதும் நடக்கலாம். வீட்டுல சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. பிரயாணத்தின் போது மட்டும் பிக்-பாக்கெட் ஆசாமிங்க விஷயத்துல கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*




குரு மாற்றம் உங்களுக்கு அத்தனை சாதகமா இல்லாட்டாலும் இந்த வாரம் பலன்களைப் பொறுத்தவரைக்கும் பிரச்னை ஒண்ணும் பெரிசா இருக்காது. மேல்படிப்புக்காக சீட் எதிர்பார்த்துட்டிருக்கிற மாணவர்களுக்கு, அது கிடைக்கும்! தொழிலும் வளர்ச்சிப் பாதையில தான் போகும். ஆனா, கணவன்-மனைவி உறவுல மனஸ்தாபங்கள்

வரலாம். விட்டுக் கொடுத்துப் போங்க. பணக் கையிருப்பு அத்தனை பிரமாதமா இருக்கும்னு சொல்ல முடியாது. ஆனா, சில பேருக்கு, எதிர் பாராத இடங்கள்லேருந்து உதவிகள் கிடைக்கலாம். ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்றவங்களுக்கு இது லாபகரமான வாரம்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

உற்சாகமான வாரம். காரணம் – புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கற யோகம் பலருக்கு இருக்கு. மேலும் தாராள பண வரவு, புகழ், எடுத்த காரிய வெற்றி. உற்சாகம் இல்லாமல் பின்ன எப்படி? பெண்களுக்குத் திருமண யோகம் கூடிவரும். பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவங்க, கணக்குப் பிள்ளைங்க (அதாங்க, அகவுண்டண்ட்ஸ்) இவங்கல்லாம் நல்ல பாராட்டுப் பெறுவாங்க. வயசானவங்கள்ல சிலருக்குத் தீர்த்த யாத்திரை மாதிரி பயண யோகம் இருக்கும். பணம் ஏதும் வசூலாக வேண்டி இருந்ததுன்னா, இப்ப ஆகும்! சிலருக்கு வீடு மாறும் நேரம் இது!




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

காலமறிந்து செயல்படறதுங்கற உங்க குணம் இருக்கே, அதான் சார் உங்களோட பெரிய பிளஸ்பாயின்ட்! உங்க புத்திக் கூர்மை, செயல் திறமை எல்லாம் பிரகாசமா பளிச்சிடற வாரம் இது! கம்ப்யூட்டர், மெஷின் சம்பந்தமான துறைல இருக்கறவங்களுக்கும் புகழ் சேரும் வாரம் இது. எழுத்தாளர்கள், சினிமா, இசைன்னு மீடியாவில இருக்கறவங்களுக்குப் பரிசும் பாராட்டும் கூடும்! சிலருக்குப் புதிய ஒப்பந்தங்கள் மூலமா பண வரவு இருக்கும். வீடு நிலம் வாங்கற விஷயத்துல யோசித்துச் செயல் பட்டீங்கன்னா நஷ்டம் இருக்காது! பெண்களுக்கு பெற்றோர்களாலும் ஆண்களுக்கு மாமியார் வீட்டினராலும் பலன் ஏற்படும் வாரம் இது!




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பண விஷயத்துல கொடுக்கல் வாங்கல் வேணாம். வீண் பழி, அபவாதம் வரும். உடல் நலத்திலேயும், கவனமா இருக்கணும். செலவு கட்டுக்குள்ள இருக்காது. ஆனாலும் பணவரவில் குறையிருக்காது. வீட்டுல சிறு சண்டைகள் வந்து மறையும். கணவன்-மனைவிக்குள்ள விட்டுக் கொடுக்கற போக்கு இப்ப ரொம்ப அவசியம். கலைத் துறைல இருக்கறவங்களுக்கு இது சாதகமான வாரம். அலைச்சல் இருக்கும்; ஆனா பலன் குறைவாத்தான் இருக்கும். பல்லைக் கடிச்சிட்டு இந்த வாரத்தை சமாளிச்சிடுங்க. பிறகு சரியாயிடும்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

கேளிக்கை மிகுந்த வாரம். ஸ்டார் ஓட்டல் பார்ட்டி, இல்லாட்டாலும் டீக்கடை 'ஜாயின்ட்'டாவது இந்த வாரத்துல ரெண்டு மூணு சாயங்காலத்தை உல்லாசமாக்கப் போவுது. உறவினர்கள் வருகை. சில சுப நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கலாம். சில பேருக்கு வீடு மாறுதல் இருக்கும். மேலும் சில பேருக்கு உத்யோக ரீதில இடமாறுதலும் வரலாம். பையனோ, பொண்ணோ வெளிநாட்டுல இருந்தா அவங்க மூலமா ஏதாவது நல்ல செய்தி வரும். பாராட்டு, புகழுக்குக் குறைவில்லை. செலவுக்கும்!



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

அலைச்சல், கடும் உழைப்பு, உடல்நலக் கோளாறு – இதெல்லாம் இருக்குமே? காரணம் வேற யாரும் இல்லை. நீங்களே தான்! பொறுப்புகளைப் பகிர்ந்து குடுத்துட்டு ஹாயா இருங்கன்னா, ஏன் கேக்கமாட்டேங்கறீங்க? உங்களைச் சுத்தி இருக்கறவங்க, உங்களைத் தலை மேல தூக்கி வெச்சு ஆடத் தயாரா இருக்காங்க. அவங்களோட உணர்வுகளைப் புரிஞ்சுக்கிட்டு, சின்னச் சின்ன விஷயங்களில் விட்டுக் கொடுத்துட்டும் போனீங்கன்னா, ராஜா மாதிரி வாழலாம். இந்த வாரம் – வீண் வம்பு அரட்டைகளைத் தவிர்த்துடுங்க. அநாவசிய மனஸ்தாபங்களுக்கு இடம் கொடுக்காதீங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

வியாபாரிகளும் தொழிலதிபர்களும் கலைத்துறையினரும் வளர்ச்சி காணற வாரம் இது! திட்டமிட்டு வேலை செஞ்சா, எல்லாருமே வளர்ச்சி காணலாம்தான். ஆனாலும் நிதானமில்லாத போக்கைத் தவிர்த்தால் பிரமாதமான முன்னேற்றம் நிச்சயம்! இந்த வாரம் பொருளாதார ரீதில வலுவாத்தான் இருப்பீங்க. ஆனாலும் செலவு பண்ணும் போது கவனமா இருங்க. அலாஸ்டா இருந்துட்டு, அஞ்சு பத்து இழக்கற 'யோகம்' சிலருக்கு இருக்குது! உறவினர் வருகை வீட்டுல சில சுப நிகழ்ச்சிகள், கேளிக்கைன்னு சிலர் எஞ்சாய் பண்ணப் போறாங்க. சில பேருக்கு வெளி நாட்டுத் தொடர்புகள் மூலமா ஏதாவது அதிர்ஷ்ட வாய்ப்புகள் நேரலாம்! ●

காதல் பரிமாணங்கள்

யோகி

சங்கர் வேலைக்குப் போய் விட்டான். தனித்தீவில் விட்ட மாதிரி இருந்தது ரேவதிக்கு.

பசித்தது. நேற்றிரவு சாப்பிடவில்லை. சாப்பாடு இல்லை. ஒருவர் சம்பளத்தில் மூன்று வயிறு. இப்போது தன்னையும் சேர்த்து நான்கு வயிறு- கழுவப்பட வேண்டும். அதுவும் சங்கருக்குப் பெரிய வருமானம் இல்லை. சங்கரின் அப்பா இருக்கிறார். அவர் தன் சாப்பாட்டிற்கு மட்டும் கணக்காய்ப் பணம் கொடுப்பாராம்!

நேற்று சங்கரின் அக்காவும், அவள் கணவரும் வந்து விட்டார்கள். அவர்களைப் பட்டினி போட முடியுமா? எல்லோரும் சாப்பிட்டு முடித்தபின் சங்கரின் அம்மா , "உனக்கும், அவனுக்கும் சோறு வைச்சிருக்கேன். சாப்பிடு" என்றாள். ரேவதி அடுக்களைக்குப் போய் சோறு உள்ள பாத்திரத்தைத் திறந்தாள். ஒருத்தருக்குக் கூட அந்தச் சாப்பாடு போதாது. இதைத் தானும் கணவனும் சாப்பிட வேண்டுமா? வேலை பார்த்துக் களைத்து வரும் அவருக்கு, சாப்பாடு வேண்டுமே என்று ரேவதி சாப்பிடவில்லை.

அழுகையாய் வந்தது. சாப்பாடு இல்லை என்கிற காரணத்தால் அல்ல. இவர்களில் ஒருவர் கூடத் தன்னோடு பேசாமல், தன்னை விரோதியைப் பார்ப்பது போல் பார்க்கிறார்கள் என்கிற காரணத்தால்... தினசரி சங்கர் வந்ததும் - அவன் தோளில் முகம் புதைத்து அழுதால்தான் ரேவதிக்கு அமைதி, சுகம்.

"ஏய்... ஏன் அழுறே... யாரும் ஏதும் சொன்னாங்களா?"

யாரும் ஏதும் சொன்னாலும் பரவாயில்லை. கடுமையான வார்த்தைகளை விட மௌனம்தான் மிக மோசமான பிரயோகம். நேற்று அவன் தோளில் சாய்ந்து அழக்கூட முடியவில்லை. ஊரிலிருந்து வந்திருந்த சங்கரின் அக்காவும், அவள் கணவரும் நேற்று படுக்கையறையில் படுத்துக் கொண்டார்கள். அடுக்களையில் ரேவதி படுத்துக் கொண்டாள். ஹாலில் சங்கர், சங்கரின் அப்பா, அம்மா, தங்கை - அப்புறம் சங்கரின் அக்காவின் குழந்தை... ஐந்து பேர் படுத்தாலே ஹால் நிறைந்து விடும். ஆகவே, நேற்று மனம் விட்டுப் பேச முடியவில்லை. அது ஒரு பாரமாய் இருந்தது. சாப்பிடாமல் படுத்தது வேறு. வயிறு குத்திக் கொண்டிருந்தது.

ரேவதி எழுந்தாள். அடுக்களைக்கு வந்தாள். நான்கு இட்லி இருந்தது. சாப்பிட்டாள்.

சாப்பிட்டு விட்டுத் தட்டைக் கழுவ வெளியே போனாள். அதற்குள் சங்கரின் அம்மா குறுக்கிட்டு, "இந்தா... தட்டை வை. நீ கழுவிட்டு உள்ளே வந்துடுவே. அப்புறம் காம்பவுண்ட்ல உள்ள ஒவ்வொருத்தியும் உம் மருமக தளுக்கிக்

குலுக்கி நடக்கிறா. வீட்டுல அடங்கி இருக்காளான்னு ஏதாவது பேசுவாங்க. தட்டை வை. நாங்க கழுவிக்கிறோம்.”

தட்டை அடுக்களையிலேயே வைத்தாள். பத்துக் குடித்தனம் உள்ள வீட்டிற்குப் பொதுவான பாத்ரூம், கக்கூஸ். பாத்ரூமுக்கோ, கக்கூஸுக்கோ போகும் போது ஏனைய போர்ஷன்காரர்கள் குசுகுசுவென்று பேசிக் கொள்வார்கள். “இவதான். சங்கர் இழுத்துட்டு வந்தது இவளைத்தான்...”


“ஆளு நல்லாத்தான் இருக்கா.”

“நல்லா சிவப்பாதான் இருக்கா.”

“அதான் பையன் கவுந்திட்டான்.” – காதில் விழாத மாதிரி உள்ளே வந்து விடுவாள் ரேவதி. கொஞ்ச நாளைக்குப் பேசுவார்களா... பேசிவிட்டுப் போகட்டும். காதல் மணம் புரிதல் தவறா... ஆச்சர்யமாய்த்தான் உள்ளது. இதுவரை வந்த எல்லா தமிழ்ச் சினிமாக்களிலும் நாயகன் நாயகியைக் காதலித்தே மணம்முடித்துக் கொண்டு இருப்பதாய்க் காட்டி இருக்கிறார்கள். நாவல்களிலும் கூட அப்படித்தான். ஆனால் நிஜ வாழ்வில் – காதல் எல்லாம் பெரிய வார்த்தை! கௌரவத்தைக் குலைக்கும் வார்த்தை.

சங்கர் பணிபுரியும் பேப்பர் கம்பெனி ஒன்றில்தான் ரேவதியும் பணிபுரிந்தாள். நட்பு, காதலானது. சங்கர் தன் தங்கைக்குக் கல்யாணத்தை முடித்த பின் தன் கல்யாணத்தைப் பற்றி யோசிக்க





வேண்டும் என்றான். ஆனாலும் சூழ்நிலை – திருமணம் செய்தாக வேண்டும் என்று அறிவுறுத்தியது. சங்கருக்கு ஒரு இடத்தில் பெண் கொடுக்க முன்வந்தார்கள். பெண் கொடுத்துப் பெண் எடுப்பதாய்ப் பேச்சு. வந்த வரன் வசதியான இடம். ஒழுக்கமான பையன் என்பதால் வந்தார்கள். அதோடு, சங்ருக்கு ஒரு கடை வைத்துத் தரக் கூட முடிவு பண்ணினார்கள். சங்கரின் வீட்டில் எல்லோருக்கும் சந்தோஷம். கூரையைப் பிய்த்துக் கொண்டல்லவா அதிர்ஷ்ட தேவதை குதிக்கப் போகிறாள்?

தான் ஒருத்தியைக் காதலிப்பதை, அவளை மணக்க விரும்புவதை எல்லாம் இவர்களுக்குச் சொல்லி வைத்து விளக்க



"எதைத்தான் தேர்தல் வாக்குறுதியா தரதுன்னதுக்கு ஒரு எல்லையே இல்லாம போச்சு, தலைவருக்கு...."

"ஏன் என்ன சொன்னாரு?"

"தான் தேர்தல்ல ஜெயிச்சா, 'கிளிண்டன் – மோனிகா' விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவேன்னு சொன்னாரே!"

– அரிச்சந்திரன்

இயலாது. அத்தோடு எல்லாவற்றையும் குழப்பி விடுவார்கள். கோவிலில் தாலி கட்டிக் கொண்டு இருபது நாளைக்கு முன்னால்– ஜோடியாய் திடுதிடுப்பென்று வந்து நின்றார்கள்... வீடு அதிர்ந்தது.

ஆனால் என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஆர்ப்பரித்து எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டார்கள். சங்கர்தான் சம்பாதிக்கும் பிள்ளை. அவனை ஏதாவது சொல்லப் போக, தனிக்குடித்தனம் போய் விட்டால் என்ன பண்ணுவது? சங்கரின் அப்பாவோ, எதற்கும் லாயக்கில்லாதவர். பேசாமல் இருந்தனர். ஆனால் ரேவதியை வார்த்தைகளால் சீண்டினர்.

தமக்குக் கிடைக்க இருந்த ஒரு நல்வாழ்க்கையைக் குலைத்த பாவியாய் ரேவதியைப் பார்த்தார்கள்.

அடுக்களைக்கு சங்கரின் அம்மாவும், தங்கையும் வர, ரேவதி எழுந்தாள். சங்கரின் அப்பா கடையில் இருந்து மீன் வாங்கி வந்தார். மீன் நாற்றம் பிடிக்காது ரேவதிக்கு. ரேவதியின் வீட்டில் எல்லோரும் சைவம் தான்.

"அத்தை... நா வேணும்னா கூடமாட வேலை பார்க்கவா..." என்று கேட்டாள்.

"அத்தையாம் அத்தை. சொத்தை..." என்ற சங்கரின் அக்கா சிரிக்க, மற்ற இருவரும் சிரித்தனர். ரேவதிக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. வேலை பார்க்காமல் சும்மா இருப்பது எரிச்சலாய் இருந்தது. சும்மா இருக்க, இருக்க ஒருவித பயம் வருகிறது. எதனால் என்று தெரியவில்லை. வேலை செய்வது என்பது யாரோடோ பேசுவது போன்றது. யாரோ ஒருவர் அருகில் துணைக்கு இருப்பது போன்றது. நேரமும் போவதே தெரியாது.

இரண்டு நாளாய் சங்கர் தன் துணிகளைத் துவைக்கவில்லை. அவன் தன் துணிகளைத் தானே துவைத்துக் கொள்வான்.

"சின்ன வயசுல இருந்து பழகிடுச்சு" என்றான்.

"நான் துவைக்கிறேனே" என்று கேட்டதற்கு, "இப்ப உன்கிட்ட துவைக்கக் கொடுத்தா, எனது தினசரி வேலைகளில் ஏதோ ஒன்று குறையற மாதிரி இருக்கும். ஒரு இழப்பு ஏற்பட்டாற்போல் தோன்றும். பழகினதை சட் என்று விட இயலாது" என்று சிரிப்பான்.

அந்தச் சிரிப்பு இதமாய் இருக்கும். "நீங்க துவைக்க வேண்டாம். நானே துவைக்கிறேன். நீங்க போனதும் எனக்கு இங்க ஒரு வேலையும் இல்லை. சாப்பிட்டு, சாப்பிட்டுட்டு சும்மா இருக்கப் பிடிக்கலை என்றதற்கு, "டீவி பார்க்க வேண்டியது தானே!" என்றான்.

டீ.வி., போட்டுப் பார்க்கும் அளவுக்கு இன்னும் தனக்கு இந்த வீட்டில் எந்த உரிமையும் தரப்படவில்லையே...

சங்கரின் துணிகளையும், தன் துணிகளையும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"இந்தாடியம்மா, சோப்பை ரொம்ப கரைக்காதே" என்றாள் அத்தை.

"சரி அத்தை" என்று நடந்தாள் ரேவதி.

"அத்தையாம் அத்தை!" கொல்லென்று

சிரிப்புச் சப்தம்.

சங்கரின் அப்பா வெளியே போய் விட்டார். சங்கரின் அக்காவின் கணவரைக் காணோம். எங்காவது போய் இருப்பார். நேற்று ஒரே நாளில் அவரைப் பற்றிப் புரிந்து கொள்ள முடிந்தது. தண்ணியடிப் பார் போலும்! நேற்று இரவு கூடச் சாப் பிட்டு வந்திருந்தார். "இங்க வந்த இடத்தி லாவது தண்ணியடிக்காம இருக்கலாம்ல" என்று சங்கரின் அக்கா முணுமுணுக்க, அவள் கணவர் கெட்ட வார்த்தைகளால் திட்டியதும், அடுக்களையில் படுத்து இருந்த ரேவதிக்குத் தெளிவாய்க் கேட்டது. சங்கர் ஒழுக்கமான கணவனாய் இருப்பது கூட இவர்களை எரிச்சல் அடையச் செய்திருக்க லாம்.

ரேவதி துவைத்து முடித்திருந்தாள். பாத்ரூமை ஒட்டின போர்ஷன் பெண்மணி ரேவதியின் வாயைக் கிண்டிக் கொண்டிருந் தாள். ரேவதி பேசினாள். ஆனால் தேவை யில்லாத விஷயங்களைத் தவிர்த்தாள். துணி யைக் காயப் போட மொட்டை மாடிக்குப் போனாள்.

சங்கரின் அக்காள் கணவர் வந்துவிட எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டனர். ரேவதி அடுக்களையில் அமர்ந்திருந்தாள். எல்லோரும் சாப்பிட்டு முடித்தனர். சங் கரின் அக்காவும், அவளது கணவரும் படுக் கையறையில் பேசிக் கொண்டிருந்தனர். சங்கரின் அம்மா ஹாலில் ஓர் ஓரமாய்ப் படுத்து விட்டாள். சங்கரின் தங்கை டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். திடீர் என்று அம்மா தலையை நிமிர்த்தி, "இந்தா சாப்பிடு... அப்புறம் சாப்பிடச் சொல்ல லைன்னு எம் பையன்கிட்ட வத்தி வைக் காதே..." என்றாள். ரேவதிக்குப் பசிக்கத் தான் செய்தது. மீன் குழம்பு மட்டும்தான் வைத்திருந்தார்கள். ரசம் கூட வைக்க வில்லை. சோறை வைத்து கொஞ்சமாய் இருந்த மோரை ஊற்றி, ஊறுகாய் வைத்துச் சாப்பிட்டாள். அடுக்களையில் உட்கார்ந்த வாறே தூங்கிப் போனாள்.

யாரோ உலுக்க, கண் திறந்தாள். சங்கர்... அதற்குள் வந்து விட்டார்! மணி பத்தாயிற்றா என்ன... அவ்வளவு நேரமா தூங்கி விட்டோம்... "என்ன அதுக்குள்ள வந்துட்டீங்க."

"கடைக்கு சாயங்காலத்துக்கு மேல லீவ் போட்டுட்டேன்."

"எதுக்குங்க வேஸ்ட்டா?"

"வேஸ்ட்டா... உன்னை இந்த இருபது நாள்ல எங்கேயும் கூட்டிப் போகலையே..."

"காசுதான் செலவாகும்!"

"கோவிலுக்குத்தானே போறோம். சினிமாவுக்கு இல்லையே... அதோட நேத்து நைட் நம்மால் பேச முடியலையே... நீ டல்லா இருந்தே. என்னோட வெளியே வந்தா உன் மனப்பாரம் குறையும். ஆமா... மீன் குழம்பு நீ சாப்பிட மாட்டியே... என்ன சாப்பிட்டே?"

"மோர் ஊத்திக்கிட்டேன்" என்றாள். "சாப்பாடு வைக்கவா?"

"ம்."

சாப்பிட்டு ஆனதும் வெளியே கிளம்பினார்கள்.

"என்ன எதுவும் பேசாம வரே..." என்று சங்கர் ரேவதியைப் பார்த்துக் கேட்டான். ரேவதியின் கண்கள் கலங்கியிருந்தன. "யேய்... ஏன் அழுறே. யாரும் ஏதும் சொன் னாங்களா?"

ரேவதி தலையசைத்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள். "இல்ல... உங்ககிட்ட பேசறதை விடவும், உங்களை கட்டிக்கிட்டு அழுவதுதான் எனக்கு ரொம் பப் பிடிக்குது..." என்றாள்.

"எனக்கும்தான்" என்றான் சங்கர் சன்னமான குரலில்.



"தலைவர் ஏன் இவ்வளவு டென் ஷனா இருக்கார்?"

"தலைவர் நின்றால் மாநாடு, நடந்தால் பேரணி, படுத்தால் ஆஸ்பத்திரின்னு விளம்பரம் செஞ்சு தொலைச்சிட்டாங்க."

– கொங்கணாபுரம் வே. செந்தில்

இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் எப்படிப்பட்ட மனோ நிலையில் இருக்கிறார்கள்? தமிழகத்தின் மேற்குப் பகுதியான சேலம், கோவை, நீலகிரி தொகுதிகளில் நிருபர் *கா.சு. வேலாயுதன்* பயணம் செய்தார். தெற்குப் பகுதியில் உள்ள சிவகங்கை, மதுரை, பெரியகுளம், சிவகாசி, திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய தொகுதிகளில் நமது துணையாசிரியர் *இளங்கோவன்*, நிருபர் *ஸ்ரீநிவாசன்* ஆகியோர் சுமார் **3,400** கி.மீட்டர்கள் பயணம் செய்து மக்களைச் சந்தித்தார்கள்...

ஆளும் கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைக்குமா?

சாப்பிடுகிற ஹோட்டல்களில் பரிமாறுகிற சர்வர்கள், தங்குகிற ஹோட்டல்களில் பணிபுரிகிற ரூம்பாய்கள் முதல் டாக்ஸி, ஆட்டோ டிரைவர்கள், சின்னச் சின்ன கிராமங்களில் வயல் வேலை செய்து கொண்டிருப்பவர்கள், டீக்கடைகளில் டீ குடித்துக் கொண்டிருப்பவர்கள், இளநீர் விற்பவர்கள், புல் கட்டுகளைச் சுமந்து வரும் பெண்கள், ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருப்பவர்கள், கிராமத்துச் சாலைகளில் சைக்கிள்களில் வருபவர்கள், நடந்து செல்பவர்கள் என்று பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசினோம்.

பேசினோம் என்றால், 'இந்தத் தேர்தலில் நீங்கள் யாருக்கு வோட்டுப் போடப் போகிறீர்கள்?' என்கிற மாதிரியான கேள்விகளால் அல்ல. பொதுவாக அரசியல் நிலை எப்படி என்கிற மாதிரியான உரையாடல்கள்.

"அ.தி.மு.க. ஆட்சி போச்சுங்க. அம்புட்டுத்தான். பணப் புழக்கமே சுத்தமாப் போச்சு. முன்னெல்லாம் பாருங்க... வாரத்துல அஞ்சு நாள் எனக்குச் சவாரி கிடைக்கும். இப்பப் பாருங்க. ரெண்டு நாள் கிடைக்கிறதே பெரிசா இருக்கு..." என்று ஒரு டாக்ஸி டிரைவர் நம்மிடம் சொன்னபோது நமக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எதை வெச்சு இப்படிச் சொல்றீங்க?"


"முன்னெல்லாம் எக்கச்சக்கமா லஞ்சம் இருந்திச்சு. அதனால பணப் புழக்கமும் அதிகமா இருந்துச்சு. இப்ப அப்படி இல்லையே...!" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் அவர்.

"அப்படியானா லஞ்ச ஊழலோட ஒர் ஆட்சி நடக்கறது நல்லதுதான்னு சொல்றீங்களா?"

"எந்த ஆட்சியா இருந்தா என்னங்க? பணப் புழக்கம் வேண்டாமா? இல்லீன்னா எங்களை மாதிரி ஆளுங்க எப்படிப் பொழைக்கிறது?"

'எட்டு சதவிகிதத்துக்கு மேல் இருந்த பணவீக்கம் இப்போது நான்கு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது' என்று ப. சிதம்பரம் சொல்கிற பொருளாதாரப் புள்ளி விவரக் கணக்கை இந்த டாக்ஸி டிரைவருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று நமக்குப் புரியவில்லை!

சென்ற பொதுத் தேர்தலின் போதும் நாம் சுற்றுப் பயணம் செய்தோம். அப்போது வேட்பாளர்களுக்கு சேஷனின் கெடுபிடிகள் அதிகமாகவே இருந்தன. அதே கெடுபிடிகள் இப்போதும் தொடர்கின்றன. ஆனாலும் சென்ற தேர்தலின்போது எங்கு பார்த்தாலும்






தேர்தல் நடப்பதற்கான அறிகுறிகள் பளிச் சென்று தெரிந்தன. இப்போது என்பது சத விகித இடங்களில் தேர்தல் நடக்கிறது என்கிற உணர்வு இருக்கிற மாதிரியே தெரியவில்லை. காரணம் என்ன? அந்த டாக்ஸி டிரைவர் சொன்ன மாதிரியான 'பணப் புழக்கம்' இல்லாததா? அல்லது ப. சிதம்பரம் சொல்கிற மாதிரி, இது யாருக்குமே விருப்பம் இல்லாத தேர்தல் என்பதா?

கடந்த தேர்தலில் சென்ற ஆட்சியின் லஞ்ச-ஊழலுக்கெதிரான ஓர் அலை, மக்கள் மனத்தில் எழுந்தடித்ததைப் போல, இப்போது 'நிலையான ஆட்சி' என்கிற கோஷத்துக்கு ஆதரவான ஓர் அலை எழவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சிறுபான்மையினராக இருக்கிற மக்கள் கூட, பி.ஜே.பி. வந்து விடக்கூடாது என்பதில் காட்டுகிற அக்கறைதான் பெரிதாக இருக்கிறதே தவிர, 'நிலையான ஆட்சி' என்பதன் மேல் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

இன்னும் சொல்லப் போனால், சென்ற தேர்தலில் லஞ்ச-ஊழலுக்கு எதிராக உறுமிக் கொண்டு எழுந்த அலை கூட இப்போது, கரையில் நிற்பவர்களின் கால்களை மெத்தென்று தடவிக் கொடுக்கிற அலையாகச் சீற்றமிழந்து போயிருக்கிறது என்பதுதான் வருத்தப்படச் செய்கிற உண்மை!

வெங்காய விலையேற்றம் பற்றி எதிர்க் கட்சிக் கூட்டணிகள் பேசுகிற போது உண்டாக்குகிற தாக்கம், எட்டு சதவிகிதமாக இருந்த பணவீக்கம் நான்கு சதவிகிதமாகக் குறைக்கப்படிருக்கும் சாதனை பற்றிப் ப. சிதம்பரம் பேசுகிறபோது ஏற்படவில்லை. ''நல்ல வேளையாக இந்த வருஷம் எப்போதும் இல்லாத அளவுக்கு மழை பெய்தது. இல்லையானால் கிராமப்புறங்களில் தைரியமாகப் போகவே முடியாமல் போயிருக்கும்!'' என்று அமைச்சர் ஆலடி அருணா நம்மிடம் கூறியது முற்றிலும் உண்மை.

இப்போது இன்னொருவிதமான மனோநிலையும் மக்களிடையே எழுந்திருக்கிறது. வோட்டுக் கேட்கிற போது மட்டும் தெருத் தெருவாகச் சுற்றி வரும் அரசியல்வாதிகள், அதற்கப்புறம் எட்டிப் பார்ப்பதேயில்லை என்று பலரும் கோபப்படுகிறார்கள். இது நியாயமான கோபம்தான் என்றாலும் 'நாங்



"ஒரு உப்புச்சப்பு இல்லாத விஷயத்துக்குப் போய் எனக்கும் என் காதலிக்கும் சண்டை வந்துடுச்சுடா..."

"அப்படி என்ன விஷயம்?"

"சுண்டல் வாங்கினதுல நானே நிறைய தின்னுட்டேனாம்!"

— அரிச்சந்திரன்

கள் ஆசையாக வளர்த்த நாய்க்குட்டி அகால மரணமடைந்த போது, இந்த எம்.பி. எட்டிப் பார்க்கவேயில்லை; குறைந்தபட்சம் ஓர் அனுதாபத் தந்தி கூட அனுப்பவில்லை' என்கிற அளவுக்கு மக்களுடைய எதிர்பார்ப்புகள் ரொம்ப ரொம்ப அதிகரித்து விட்டன. ஓர் அமைச்சரிடம் எதிர்க்கட்சியினர் கூறிய குற்றச்சாட்டுகள் பற்றி நாங்கள் விளக்கம் கேட்டு விட்டுப் புறப்பட்டபோது கிராமவாசியொருவர் ஓடி வந்து, "ஒரு கேள்வி கேட்டாலும் நறுக்குனு கேட்டீங்க சார்!" என்று எங்கள் கைகளைப் பற்றிக் குலுக்கினார். இதையெல்லாம் ஆளுங்கட்சியினர் புரிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்று.

இந்த நிலையில் தமிழக மக்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறார்கள்? வெங்காய விலையேற்றம் பற்றிப் பேசுகிற எதிர்க்கட்சிக் கூட்டணிக்கா? லஞ்ச-ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாமல் அதே சமயத்தில் அவற்றைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டும் இருப்பதாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் ஆளுங்கட்சிக் கூட்டணிக்கா?

நிலைமை ஆளுங்கட்சிக் கூட்டணிக்கே சாதகமாக இருந்த போதிலும் இது சென்ற தேர்தல் மாதிரி அல்ல. சென்ற தேர்தலில் மக்கள், வெற்றிக் கனிகளைத் தாம்பாளத்தில் ஏந்தியபடி தி.மு.க. - த.மா.கா. கூட்டணியினரைத் தேடிப் பிடித்துக் கொடுத்தனர். இந்தத் தேர்தலிலோ, 'இதோ நாங்க இங்கேதான் நிக்கறோம்!' என்று மக்களைக் கூவியழைத்துப் பெற வேண்டிய நிலையில் இருக்கின்றனர் ஆளுங்கட்சிக் கூட்டணியினர்.

நம்முடைய இந்தக் கணிப்பை ஆளுங்கட்சிக் கூட்டணியினர் அப்படியே ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, பொதுவாகப் பேசுகிறபோது, ஆளுங்கட்சிக் கூட்டணி வேட்பாளர்களும் அவர்களின் வெற்றிக்காகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிற மு.க. அழகிரி, மதுரை மேயர் குழந்தைவேலு போன்றவர்களும் சென்ற தேர்தலைப் போல் அல்லாமல், இந்தத் தேர்தலில் தங்களுடைய வோட்டு வித்தியாசம் குறையத்தான் செய்யும் என்பதை ஒப்புக் கொள்ளவே செய்கிறார்கள்.

இருந்தாலும் கூட "சென்ற தேர்தலைப் போலவே தாங்கள் இப்போதும் அமோக வெற்றி பெறப் போவதில் சந்தேகமே இல்லை!" என்கிறார்கள். ஆனாலும் கூட அவர்களும் நம்மைப் போலவே உண்மையைப் பூரணமாக உணர்ந்திருப்பார்கள் என்றே நம்புகிறோம்!

— இளங்கோவன்

அட்டை வண்ணப் படங்களும், படமும் : **யோகா**



"நான் உங்கள் வீட்டுப் பிள்ளை'ன்னு தேர்தல் போஸ்டர் அடிச்சது வம்பாப் போச்சு!"

"ஏன்?"

"வாக்குக் கேட்டு வீடு வீடா போறப்ப, 'எங்கேடா ஊர் சுத்திட்டு வர்றே'ன்னு கேட்டு மண்டைல குட்டுறாங்க!"

— அம்பை தேவா

கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

ஸ்ரீராம் டிரஸ்ட் வழங்கும் சந்தா முதலீட்டுத் திட்டம்!

ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள். 5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு) பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன்

● 4 இலக்கிய பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.



ரூ. 10,000 (ரூ. பத்தாயிரம்) 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102. தொலைபேசி எண் : 628 6869, 628 7879

---

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி...

முகவரி :...

....

....

2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :

முழுப்பெயர் :...

3. வாரிசுதாரர் :...

4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :...

....

....

CHEQUE/D.D. No. Dt. ON

Rs. .... அன்புள்ள

இடம் ....

தேதி .... முதலீட்டாளர் கையொப்பம்

இன்று வாழலாம்

7

குப்தா எமகாதகன்; ஊடுருவும் கண்கள்.

"என்ன ஜீவா... ஒரு மாதிரி இருக்கிறாய்? ஏதும் பிரச்னையா?"

"இல்லை. குடும்பம் பற்றிய நினைவு. ஃபோன் செய்ய வேண்டும்" என்று சமாளித்தான்.

"இங்கிருந்து வேண்டாமே! பிறகு, வெளியே போய் ஃபோன் செய்யலாம்."

யோசித்தபடி பாத்ரூமுக்குள் சென்றான் ஜீவா. யார் அந்த மர்ம மனிதன்? திடுமென்று தோன்றுகிறான். வா என்கிறான். அதுவும் தனியாக!

ஷவரைத் திறந்தான். என்ன ரகசியச் செய்தி? ஜீவாவால் அனுமானிக்க முடியவில்லை. குப்தாவிடம் கூடச் சொல்லாதே என்கிறான். ஏன்?

சோப்பு வில்லையை எடுத்தான். ஒன்று உறுதி. அவனிடம் நிச்சயம் எதிர்பாராத ஒரு செய்தி. எல்லோருக்கும் தன் பெயர் தெரிந்திருக்கிறது! எப்படி?

ஜில் குளியல் ஜீவாவின் களைப்பை விரட்டியது. ஒட்டுத் தாடி அழைத்துள்ள இடம், அருகேதான். பத்தே நிமிடத்தில் போய்த் திரும்பி விடலாம். ஆனால், குப்தாவுக்குத் தெரியாமல் எப்படி என்பதுதான் சிக்கல்....

மேசை மேல் காப்பி காத்திருந்தது. எடுத்துப் பருகினான். குப்தா, ஏதோ ரோடு மேப்பில் கவனமாயிருந்தான்.

"என்ன ஜீவா?"

"உன் சொல்படி, உன்னுடன் இந்தப் ப்ராஜக்டில் ஒத்துழைக்கிறேன்."

"ஆம்!"

"நீ இன்னமும் என் துப்பாக்கியைத் திருப்பித் தரவில்லையே...!"

"ஓ... மறந்தே போனேன்! சாரி ஜீவா" என்றவன் தன் பெட்டியிலிருந்து அந்தத் துப்பாக்கியை எடுத்து ஜீவாவிடம் தந்துவிட்டு, "உன்னிடமும் துப்பாக்கி இருப்பது நம் பாதுகாப்பிற்கு உதவும்! அதுவும், நீ ஒரு துப்பாக்கி வேந்தன்!"

"உன்னை விடவா? ஏதோ பழைய ஞாபகத்தில் சும்மா ஜல்லியடிக்கிறேன்! உனக்கு 'உதவி' என்று ஒப்பேற்றிக் கொண்டிருக்கிறேன். அதையும் சிலாகிக்கிறாய் பார்! கஷ்டம்!"

"சை. அப்படிச் சொல்லாதே! ஆயிரம் பேர் சேர்ந்தாலும் ஒரு ஜீவாவுக்கு ஈடாகுமா? அதுதான் சொல்கிறேன். என்னுடன் நிரந்தரமாக..."

போலி அலுப்புடன் இடைவெட்டி, "ஆரம்பித்து விட்டாயா?" என்று சிரித்தான்.

"சிரிக்காதே! சீரியஸாக இரு. நான் சொல்வதைக் கேள் ஜீவா. எனக்கு ஒரு லட்சியம் இருக்கிறது. ஜீவா மாதிரி என்னுடன் சிலர் இருந்தால் போதும். உலகையே புரட்டி எடுத்து விடுவேன்!" என்றான் கண்கள் ஒளிர. "என்னுடன் சேர்வதால், உனக்கு ஒரு பெரும் பயன் இருக்கிறது!"

"என்ன அது?"

"காத்திரு ஜீவா! சொல்ல இன்னமும் நேரம் வாய்க்கவில்லை. சூழ்நிலை சரியாகவில்லை." என்றான் குப்தா; அவன் ஏதோ யோசனையில்.

"சஸ்பென்சா?" என்று முறுவலித்தான் ஜீவா. அவன் உள்ளுக்குள் பதற்றம். விரையும் நேரம்.

நேரம் 7:45. 'ரகசிய முகூர்த்தம்' எட்டு மணிக்கே. குத்துக்கல்லாக குப்தா அருகில். எப்படி ஏமாற்றி விட்டுச் செல்வது? குப்தா ஒரு சாதாரண மனிதன் இல்லை; மிகவும் தேர்ந்த உளவாளி; தந்திரசாலி.

7:50. தாமதமானால், மர்ம ஆசாமி சென்று விடுவானா...?

7:52. ஜீவா அவசரமாக யோசித்தான். சட்! ஒட்டுத் தாடி, வேறு நேரம் தேர்ந்திருக்கக் கூடாதா? என்ன செய்யலாம்...?

7:53. சட்டென்று பிரச்னை தீர்ந்தது. குப்தாவே வழிவகுத்து விட்டான்.

"செமை பசி ஜீவா! ரெஸ்டாரெண்ட் போய் ஒரு கை பார்ப்போம்! வா!"

வா!

பத்மா ரவிசங்கர்



"நீ முன்னால் செல். சில நிமிடங்களில் வந்து விடு கிறேன்!"

"ஏன் ஜீவா?"

"வயிற்றில் கொஞ்சம் பிரச்னை!" என்று சங்கடமுடன் சிரித்தான்.

குப்தா அகன்றதும் பரபரப்பானான் ஜீவா. எதற்கும் மாறுவேடம் உசிதம். அவசரத்திற்குத்தானே ஒட்டுத் தாடியும், தொப்பியும்.... நிலைக் கண்ணாடியில் பார்த்தான். ஹேய், நீ யாரப்பா...!

பின்புற வழியாக, ஜீவா வேகமாக நடந்தான். குப்தா அறைக்குத் திரும்பினால் குட்டு வெளிப்பட்டு விடும். அதற்குள்.... அதற்குள்....

அவன் உள்ளுக்குள் ஒரு திடும் சிவப்பு சிக்னல்! பின்னங் கழுத்தில் குறுகுறு. தலையைத் திருப்பினான்.

ஹோட்டல் பணியாளர் சீருடையில் ஒரு தடியன் பின் தொடர்வதைப் பார்த்தான்! ஹோட்டல் சிப்பந்தியா? அல்லது சீருடை மாறுவேடமா? அவன் தேர்ந்தவன் இல்லை என்பது தெரிந்தது. காகக் காக வேலை செய்யும் கிரிமினல் போலும். ஆனால், அவன் தன்னை விட மூன்று மடங்காவது பலசாலி என்பது தெளிவு.

சீருடைத் தடியன் வெகு வேகமாக வந்தான். என்ன அவன் நோக்கம்? தாக்க வருகிறானா? தடுக்க வருகிறானா? அல்லது... அல்லது... தீர்க்க வருகிறானா? விடை இன்னும் சில வினாடிகளில்...

பாய்ந்து வந்தான் தடியன். எவ்வளவு வேகம்! அவ்வளவு விருப்பமா, என் மீது? வா நரி மகனே! ஜீவாவும் விரைந்தான். இந்த இடம் தோதாக இல்லை. இங்கே நடமாட்டம்.

பின்புற வழியாக வெளிப்பட்டதும் உள்ளுக்குள் மலர்ந்தான், வாடையில் மூக்கைச் சுளித்தான். வலப்புறம் ஒரு குறுகிய சந்து; சாக்கடையும் குப்பைக் குன்றுகளும் உலவும் பன்றிகளுமாக...

சந்தில் நிதானித்தான். 'தபதப'வென்று காலணிகளின் கூடும் ஒலி. நெருங்குகிறான். 'இஸ் புஸ்' என்று மூச்சு இரைக்கும் ஒலி. நெருங்கி விட்டான். இதோ... இப்போது...

தக்! ஒரு மலை வந்து மோதியது மாதிரி இருந்தது! 'ஹக்' என்ற விநோத விக்கல் ஒலி ஜீவாவிடமிருந்து எழுந்தது. எதிர்பார்த்ததை விட, தடியன் மிக.. மிகப் பலசாலி! எப்படிச் சமாளிப்பது...

அவன், யோசிக்க விட்டால்தானே.

அவகாசம் தந்தால்தானே. ஜீவாவை அப்படியே அணைத்துப் பிடித்து இறுக்கினான்.

ஜீவா திணறினான். உதற முடியாமல் விலக்க முடியாமல் என்ன ஒரு அசாத்தியமான வலுவு! இந்த நிலை இன்னும் சற்றே நீடித்தாலும், மயக்கந்தான். ஜீவா திடீரென்று துவண்டது போல் அப்படியே முன்புறம் சரிய, இதை எதிர்பாராத தடியனும் உடும்புப் பிடியை விலக்காமலே உடன் வர, இரும்பு இறுக்கத்தில் சில சிறு மில்லி மீட்டர் அளவே தளர்வு ஏற்பட –

"ஆஆ!"

அலறலுடன் தடியன் விலுக்கென்று விலகிப் பின்வாங்கினான்! வலியை மீறிய வியப்பு அவனிடம்.

ஜீவா, எப்படிச் செய்தான்? எப்போது செய்தான்? எங்கிருந்து எடுத்தான்? ஏதும் புரியாமல் நம்ப முடியாமல் விழித்தான் தடியன்.

தடியனின் மணிக்கட்டில் கீறியதில், ஊறும் ரத்தம்! ஜீவாவின் கையில் முளைத்திருந்த கத்தி! ஜீவா முன் சென்றான். மற்றொரு மின்னல் வீச்சு. காற்றில் விஷ்க்கென்ற ஒலி. இன்னொரு கீறல். தடியனிடம் பீறும் பிறிதொரு ரத்தக் கோடு. பீதியுடன் ஓடத் தொடங்கினான்.

ஜீவா துரத்திச் செல்லவில்லை. கூலிக்கார அம்பு இவன். எய்தவன் எவனோ; எங்கோ! மேலும், ஒட்டுத் தாடி வேறு காத்திருப்பான். 8:05. வேகமாக நடக்கத் தொடங்கினான். தன்னை மயக்கப்படுத்தத்தான் இந்தத் தாக்குதல். ஏன் ஜீவா? ஒட்டுத்தாடி சொல்லும் ரகசியத்தைத் தான் அறிந்து கொள்வதை எவரோ விரும்பவில்லை. பரபரப்பானான். ம். வேகம்... வேகம்...

ஒரு கிளைச் சாலை. கடந்ததும், குறிப்பிட்ட தெரு. பிரியும் ஒரு அழுக்குச் சந்து. கடைசியில் பச்சைப் பெயிண்டில் பழைய வீடு. நான்கு நிமிடங்கள் காலி.

உளுத்திருந்த மர கேட். திறந்து உள்ளே சென்றான். 8:10.

ஜீவா தன் சட்டைக்குள்ளிருந்து துப்பாக்கி உருவிக் கொண்டான். வாசல் கதவு திறந்திருந்தது. எங்கே? எங்கே அந்த மர்ம மகன்?

மிகப் புராதனமான வீடு. எவரும் வசித்த சுவடையே காணோம். வியர்த்தது. சாத்தியிருந்த ஜன்னல்கள். எங்கும் ஒட்டடை. எதிலும் தூசு. ஏதோ நெடி. ஒவ்வொரு அறையாகப் பார்த்தான்.

"ஹலோ..." என்று குரல் கொடுத்தான். 'கிச்சனுக்குள்' சென்றான். மறுபடியுமா என்று மலைத்தான் ஜீவா. அங்கே –

மர்ம மனிதன் தரையில் கிடந்தான்! புல்லட் பாய்ந்து, கொலையாகியிருந்தான்! சில நிமிடங்கள் முன்தான்! காயாமல் இன்னமும் பெருகும் ரத்தம்...

யார் இவன்? எதற்காக அழைத்தான்? ஏன் கொலையானான்? இறுகும் மர்ம முடிச்சுகள். ஜீவாவுக்கு மண்டை காய்ந்தது. தொடரும் இந்த விளையாட்டில், எவனோ ஒருவன் அழைக்கிறான்; ஏதோ ரகசியம் என்கிறான்; ஜீவா செல்வதற்குள் அவன் சொல்வதற்குள் கொலையாகி விடுகிறான்! எவரோ, எதற்காகவோ முந்திக் கொள்கிறார்கள்....

ஒட்டுத் தாடியைப் பிய்த்து எடுத்தான். அப்போதும், யார் என்றே தெரியவில்லை. கொலையாகும் அளவு, அப்படி என்ன ரகசியம் இவனிடம்....

பிரேதத்திடம், எந்த ஆயுதமும் சிக்கவில்லை; யாதொரு அடையாளமும் இல்லை. ஒரு ஸ்கூட்டர் கடந்து சென்ற ஒலி கேட்டது. உஷார் ஜீவா! ஆபத்து! எந்த நேரமும் எவரும் வரலாம். அங்கு குப்தா. இங்கு பிணம். இன்னும் ஏன் தாமதம்? புதைத்த வரை போதும்! ஓடு ஜீவா!

ஹோட்டல் பின்புறம் அடைந்ததும், மாறுவேடத்தைக் கலைத்தான். அறைக்குத் திரும்பினான். குப்தா இன்னமும் வராததில் நிம்மதியானான். ஒட்டுத் தாடியைப் பத்திரப்படுத்தி விட்டுக் கிளம்பினான்.

ரெஸ்டாரெண்ட்டில் குப்தா, "எவ்வளவு நேரம் காத்திருப்பது..." என்று அப்பாவித்தனமாக அலுத்துக் கொண்டான்.

இவனைப் போய் ஏமாற்றினோமே என்று நொந்து கொண்ட ஜீவா, "பாழும் வயிற்றுத் தொல்லை!" என்று சிரித்தான்.

மதியம் ஓய்வு. மாலை கிளம்பினார்கள். காரில் மறுபடி சுற்றத் தொடங்கினார்கள்.

"ஏன் இந்தச் சுற்று, குப்தா?"

புன்னகைப்பது, இப்போது குப்தாவின் முறை.

"எவருமே பின்தொடராததில் நிம்மதியாக இருக்கிறது" என்ற குப்தா ரிலாக்ஸ்டாக இருந்தான்.

நெடுஞ்சாலை. மெல்ல இருட்டத் தொடங்கியது. ஜீவா கார் 80 கி.மீ.

வேகத்தில். ஒரு பைக் ஓவர் டேக் செய்து அவர்களைக் கடந்து சென்றது. அந்தப் பைக்கில் உலகை மறந்த காதல் பறவைகள்! அதுதான் அந்தப் பரவச வேகம்!

முதலில் ஜீவாவும் மோட்டார் பைக்தான் வைத்திருந்தான். ஷீலாவுடன் சேர்ந்து சென்னையில் சுற்றாத இடமில்லை.

பைக்கின் அனாயாச வேகம். விஸ்ஸென்று சீறும் காற்று. ஷீலாவின் இறுக்கமான அணைப்பு. அவ்வப்போது காதருகே கிசுகிசுப்பு. எதிர்பாராமல் கிடைக்கும் அதிர்ஷ்டத்தின் முத்தங்கள்....

"பைக்கில் செல்ல எனக்கு ரொம்பப் பிடிக்கும் ஜீவா!"

விடை தெரிந்தும், "ஏன் ஷீலு டார்லிங்?" என்றான்.

"என் ஜீவாவைக் கட்டிப் பிடித்துச் செல்ல பைக் ஒரு நல்ல சாக்கு!"

"மோட்டார் பைக்குகளைக் காதலர்களின் தேசிய வாகனமாக அறிவித்து விட வேண்டும்!"

ஒரு போன் பூத்தின் முன் கார் நின்றது. ஜீவாவை எட்ட இருக்கச் சொன்ன குப்தா, போன் செய்துவிட்டுத் திரும்பினான்.

"யாருக்கு குப்தா?"

"ஆத்மாவுக்குத்தான்!"

"நீ செய்தது ரிஸ்க் இல்லையா? பில்லில் ஆத்மா போன் எண் வந்திருக்குமே!"

"எனக்குத் தெரியாதா? இந்த நேரம் மட்டுமே செல்லும் ஒரு தாற்காலிக நம்பர் அது! ஆத்மாவிற்கு எல்லாம் விளக்கி விட்டேன். அடுத்து என்னவென்றும் தெரிந்து கொண்டேன். எல்லாம்.... எல்லாமே திட்டப்படி தான்!" என்று குப்தா கண் சிமிட்டினான்.

பூத்திற்குள் சென்றான் ஜீவா. போன். இனிய போன்! ஆருயிர் ஷீலாவின் காதல் குரல் கேட்க உதவும் அற்புதம்! சுழற்றத் துடிக்கும் விரல்கள். அடித்துக் கொள்ளும் மனம். தீட்டப்பட்ட காதுகள்.

டயல் சுழற்றினான். எதிர்முனையில் எடுக்கப்பட்டது...

"ஷீலா!" என்றான் மென்மையாக.

"ஜீவா!" என்று வெடித்த ஷீலாவின் குரலில் எத்தனை ஜீவன்!

"எப்படி இருக்கிறாய் ஷீலா?"

"கேள்வி அபத்தம்! நீங்கள் அருகில் இல்லாமல் ஏதோ இருக்கிறேன்!"

"இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"சொன்னால் நம்புவீர்களா?"



"தேர்தல் அறிக்கையைத்தான் தலைவர் படிச்சு முடிச்சுட்டாரே! இன்னொரு அறிக்கை ஏதோ கையில் வச்சிருக்காரே! அது என்ன?"

"அது 'தேறுதல்' அறிக்கை! தேர்தல் முடிவு வந்த பிறகு, தொண்டர்களுக்கு 'தேறுதல்' சொல்றதுக்காக!"

— சம்பத் குமாரி

"உன் வார்த்தை எனக்கு வேதம்!"

"உங்கள் போட்டோவைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"..................................."

"என்ன பேச்சையே காணோம்?"

"என்னால் பேச முடியவில்லை அன்பே! கௌதம் எப்படி இருக்கிறான்?"

"நன்றாக. எப்போதும் கண்ணாமூச்சி ஆட்டத்திற்கு நச்சரிக்கிறான்!"

நானும் கண்ணாமூச்சி ஆட்டத்தில்தான்! என்று பெருமூச்சு விட்டான்.

"விரைவில் வந்து விடுங்கள். ஜீவா!" ஷீலாவின் குரலில் இருந்த அந்தப் பரிதாபக் கெஞ்சல் அவனை என்னவோ செய்தது.

மதுரை அடைந்தபோது இரவு 8:00. நகரம், பிரகாசமாக இருந்தது. சுறுசுறுப்பாக இருந்தது.

"இங்கு தங்குவோம் ஜீவா!"

"Danny's Guest என்ற அருமையான ஹோட்டல் மதுரையில். அங்கு செல்வோமா குப்தா?"

"பெயரே வித்தியாசமாக உள்ளது!"

"தரமான நட்சத்திர ஹோட்டல்!"

அங்கே, அறை எடுத்தார்கள். காலையில், மீண்டும் அந்த முறுக்கு மீசை கண்ணில் பட்டான்! எப்படி என்று அதிர்ந்தான் ஜீவா. இந்தக் கழுகுகளைத் தவிர்க்கவே முடியாதா...?

அவன் முற்றிலும் எதிர்பாராத திருப்பங்கள் துவங்கின....!

(தொடரும்)



நாம் இருவர் நமக்கு இருவர்

மீனாவின் மீது ஆசைப்பட்டு, மகேஸ்வரியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் பிரபுதேவாவுக்கு. இருவரையும் சமாளிக்க இரட்டை வேடமெடுக்கிறார். சிக்கல்கள் தொடங்குகின்றன.

வீட்டுக்குள் வில்லன் கோஷ்டி தேடுகிறது. குளியலறையில் தன் தாடியை தியாகம் செய்துவிட்டு "நான் தாடிக்காரனின் தம்பி" என்றபடி ரைட்ராயலாக வெளியேறுகிறார் பிரபுதேவா (அப்படி ஓர் ஆரண்ய தாடியை ஆறே நொடிகளில் எப்படி ஷேவ் செய்து கொள்ள முடிந்தது என்ற வித்தையை அறிவித்தால் பிரபுதேவா தந்தைக்குலத்தின் கோடானுகோடி நன்றியைப் பெறலாம்).

மைனஸ் தாடியுடன் வரும் காட்சிகளில் பிரபுதேவாவின் போலி அடக்கமும், அடங்கிய குரலும் தான். முக்கியமாக சாக்ஸபோன் காஸட்டை ஒலிக்கவிட்டு, தானே அந்த ட்யூனை இசைப்பதுபோல் மீனாவிடம் அபிநயிக்கும் காட்சியிலும், மீனாவை அசத்த தாவரவியல் நிபுணர் போல (செட்டப் செய்த) வெளிநாட்டவரிடம் உளறும் இடத்திலும். ஆனால் க்ளோஸப்பில் அவர் முகத்தைக் காட்டும்போது வயிறு கலங்குகிறது. தாடியே சரணம்! (நல்லவேளை மணிவண்ணனுக்கும் டபுள் ரோல் கொடுத்து தாடியை நீக்கவில்லை).

நாலு அனாதைக் குழந்தைகளை வளர்க்கத்தான் ஹீரோ வைரத்தைத் திருடுகிறாராம். (ஆனால் ஆரம்ப ரீலைத் தவிர ஒப்புக்குக் கூட அவர்களைப் பிறகு காட்டவில்லை). இந்தக் 'கதை'யும், பணக்காரத்தாத்தா ஜெமினிகணேசனோடு அவர் தங்க மறுக்கும் முடிச்சும் ரொம்பக் கவலையாக, கதைக்கு ஒட்டாமல் இருக்கிறது.

கதைக்கும் உதவவில்லை, காமெடிக்கும் உதவவில்லை எனும்போது எதற்கு எஸ்.எஸ். சந்திரனுக்கு இரண்டு மனைவிகள்?

பாடல்கள் ரிச்சாகப் படமாக்கப் பட்டிருக்கின்றன. ஊட்டியின் பசுமையையும், தென்னாப்ரிக்காவின் புதுமையையும் செந்தில் குமார் கண்ணுக்கு நிறைவாக காமெராவில் சிறைப்பிடித்திருக்கிறார்.

படம் பார்க்கும்போது பாடல்கள் தாளம் போடவைத்தால் போதுமா? 'அன்னக்கிளி அறிமுகத்தின் வாரிக' என்றால் படத்துக்கு ஒரு பாடலாவது மனத்தில் பெவிகால் போட்டு ஒட்டிக் கொள்ள வேண்டாமா? மற்றபடி கார்த்திக்ராஜாவின் பின்னணி இசை பொருத்தம்.


மீனா, பிரபுதேவாவின் காதலியாக, அதிநவீன உடைகளில் வெகு வேடிக்கையாகத் தோற்றமளிக்கிறார்.

காமெடிக்கு நிறைய ஸ்கோப் உள்ள கதை; சிரிப்பு சூழல்களுக்கும் பஞ்சமில்லை. என்றாலும் தியேட்டரில் வெடிச்சிரிப்புக்கு பதிலாக ஆங்காங்கே மெல்லிய சிரிப்பலைகள் மட்டுமே பரவுவது ஏன் என்பதை சி. சுந்தர் யோசிக்கலாம். நகைச்சுவை நட்சத்திரப் பட்டாளம், கல்யாணச் சூழல், ஆள்மாறாட்டம், உருட்டுக் கட்டை, துரத்துதல், ஒளிதல் – இப்படி சகலவித வழக்கமான உத்திகளும் பழைய நெடியுடன் இடம் பெறுவதால்தான் ரசிகர்கள் உள்ளத்தை அள்ளித்தரத் தயங்குகிறார்கள். ○

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

தொண்டைக் கரகரப்பா?





கிர்ர்ர்ர்ர் முழுங்கணும்.



ஆம். நன்கு கொப்பளித்து, பின்பு முழுங்கவும்.

அறிமுகம் ஸ்மைல். இது ஒப்பற்ற ஆயுர்வேத இரட்டை ஆற்றல் கொண்ட ஸோர் த்ரோட் ரிலீவர். இது கொப்பளித்து, விழுங்கிய உடனேயே சிறந்த ஆற்றல் அளிக்கும்.

ஸ்மைலைக் கொப்பளிப்பதால் உங்கள் தொண்டை இளகுவதோடு எரிச்சலைக் குறைத்து மற்றும் தொற்று நோய் பாதிப்பு உள்ளதா-வென்றும் சோதிக்கிறது. ஸ்மைலை விழுங்குவதால், உங்களுடைய அடித் தொண்டைக்கு இதமும், நீண்ட நேர பாதுகாப்பும், சுகமும் அளிக்கிறது. வேறெதுவும் தர முடியாத தொண்டைக் கரகரப்பிலிருந்து விடுதலையை, ஸ்மைல் இரட்டை ஆற்றலுடன் செயல்பட்டு ஆறுதல் அளிக்கிறது. ஸ்மைல், உடனடி நீடித்த ஆறுதலுக்கு.

Sore Throat Reliever

Smyle

Kopran

ஸ்மைல் பிரபல மருந்துக் கடைகளில் கிடைக்கிறது.

தொண்டைக்கரகரப்பிலிருந்து விடுதலையுடன் இதமளிக்கும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka